பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 மாசி 13 வெள்ளிக்கிழமை (25.02.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :91

## மண்ணையும் மக்களையும் நேசித்த சிறந்த நாட்டுப்பற்றாளர் ஏரம்பு

### விடுதலைப் புலிகள் அறிக்கை



கிளிநொச்சி,பெப்.25

இந்த மண்ணையும் மக்களையும் நன்கு நேசித்த சிறந்த பண்பாளர் வே.க.ஏரம்பு.

- இவ்வாறு நாட்டுப்பற்றாளர் ஏரம்புவின் மறைவையொட்டி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்த மண்ணின் மக்களையும் இம்மண்ணையும் நன்கு நேசித்த சிறந்த பண்பாளரும், எல்லோரும் இன்புற்றிருக்கவேண்டும் என்ற உயர்போக்குடன் சிறப்பெடுத்த மனிதர்கள் அனைவரும் விடுதலை வாழ்வை அடையப்பெற்றவர்களாகத் (16ஆம் பக்கம் பார்க்க)

## இ.தொ.கா. அமைச்சர்கள் இருவர் நேற்று ராஜினாமா!

### அரசிலிருந்து வெளியேறவும் முடிவு?

கொழும்பு,பெப்.25

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அமைச்சர்கள் இருவர் தமது இராஜினாமாக் கடிதங்களை நேற்றுப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்துள்ளனர்.

அமைச்சர் முத்துசிவலிங்கம், பிரதி அமைச்சர் செல்லச்சாமி ஆகியோரே தமது இராஜினாமாக் கடிதங்களைப் பிரதமரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இக்கடிதங்களை (16ஆம் பக்கம் பார்க்க)

# அரசுக்கு ஜே.வி.பி. அச்சுறுத்தல்!

## இடைக்கால நிர்வாகம் குறித்து புலிகளுடன் பேசினால் காலைவாருவோம் என எச்சரிக்கை



கொழும்பு,பெப்ரவரி25

இடைக்கால நிர்வாகம் என்ற தலைப்போடு அரசு எந்தப் பேச்சுக்களையும் புலிகளுடன் நடத்தினாலும் ஜே.வி.பி. அதனை எதிர்க்கும் என்று தெரிவித்துள்ளது. அப்படி - இடைக்கால நிர்வாக அடிப்படை யில் - அரசு பேச்சுக்களை ஆரம்பித்தால் அரசிலிருந்து தாம் உடனேயே வெளியேறிவிடுவோம் என்றும் அக்கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ நேற்று நாடாளுமன்றத்தில் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

நாடாளுமன்றில் நேற்று சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டாரவிடம் அனுமதிபெற்று விசேட உரை ஒன்றை நிகழ்த்தினார் விமல் வீரவன்ஸ.

அவர் தொடர்ந்து தனது உரையில் தெரிவித்ததாவது:-

பிரிவினைவாதப் புலிகள் விரித்த வலையில் இந்த அரசு இவ்வளவு விரைவில் சிக்கும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. இந்த அரசில் பிரதான பங்காளியாக இருக்கும் எம்மைப் புறக்கணித்து விட்டு தன்னிச்சையாக யாரும் செயற்படுவதற்கு அனுமதிக்க முடியாது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அமைக்கப்பட்டபோது செய்துகொள்ளப்பட்ட உடன்பாடு விழலுக்கு இறைத்த நீராகிவிட்டது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அமைக்கப்பட்ட பின்னர் மக்களிடம் வாக்குவேட்டைக்குப் புறப்பட்டபோது கூறிய விடயங்களை மறந்துவிட்டு, இன்று புலிகளிடம் மண்டியிடத் துணிந்துவிட்டது இந்த அரசு. இப்படி நடந்துகொள்பவர்களோடு அரசியல் நடத்த முடியாது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் கதிர்காமர் இந்தியா பயணம்

கொழும்பு, பெப்25

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மூன்றுநாள் விஜயம் மேற்கொண்டு நேற்றிரவு இந்தியா புறப்பட்டார்

இலங்கை சமாதான முயற்சிகளில் இந்தியாவின் கூடுதலான பங்களிப்பையும் ஈடுபாட்டையும் இந்த விஜயத்தின்போது அவர் வலியுறுத்துவார் எனத்தெரியவருகிறது. கதிர்காமர் இந்திய வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட முக்கிய சிலரையும் அங்கு சந்தித்துப் பேச்சு நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (க-8)

### இடைக்கால அதிகாரசபை குறித்துப் பேச்சா?

## ஒருதலைப்பட்சமாக அரசு அறிவிப்பு என கடும் சீற்றத்துடன் பாய்கிறது ஜே.வி.பி.!

கொழும்பு,பெப்.25

முதலில் இடைக்கால அதிகாரசபை குறித்தும், பின்னர் இறுதித் தீர்வு குறித்தும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசுவதே அரசின் நிலைப்பாடு என அரச ஊடகத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டதாகக் கூறப்படும் அறிவிப்பு, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் நிலைப்பாடு அல்ல. அது அரசின் பிரதான பங்காளிகளான எங்களை (ஜே.வி.பியினரை) உதாசீனஞ்செய்து - எங்களோடு பேசாமல் - எங்களுக்கு அறிவிக்காமல் - ஒருதலைப்பட்சமாக விடுக்கப்பட்ட அறிவிப்பு.

- இப்படித் திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றது ஜே.வி.பி.

நேற்று கொழும்பில் ஜே.வி.பி. தலைவர்கள் பங்குபற்றிய செய்தியாளர் மாநாட்டில் அரசின் மேற்படி அறிவிப்புக்கு எதிராகக் காட்டமான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. கட்சியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா, பிரசாரச் செயலாளர்

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்று நாடாளுமன்ற வளாகத்தில் ஊர்வலம்

### அனர்த்த நிவாரணத்தில் ஆயுதம் வாங்காதே எனவும் கோஷம்

கொழும்பு,பெப்.25

"ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண உதவியாகக் கிடைத்த நிதியைக் கொண்டு அனர்த்தம் விளைவிக்கும் ஆயுதங்களைக் கொள்வனவு செய்யவேண்டாம்!"

"முடக்கிவைக்கப்பட்டுள்ள சமாதானப் பேச்சுகளை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும்!" எனக் கோஷமெழுப்பிய வண்ணம் நாடாளுமன்ற தமிழ் உறுப்பினர்கள் நேற்று நாடாளுமன்ற வளாகத்தில் ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

நேற்றுக்காலை 9.30 மணிக்கு இந்தப்பேரணி இடம்பெற்றது. ஜயவர்த்தனபுர நாடாளுமன்றப் பிரதான வீதி அமைந்துள்ள ஜயந்திபுரத்தில் இருந்து நாடாளுமன்ற பிரதான நுழைவாயில் வரை கண்டனக் கோஷங்கள் எழுதப்பட்ட பதாதைகளை

(16ஆம் பக்கம் பார்க்க)

பதாதைகளைத் தாங்கியவாறு நாடாளுமன்றம் நோக்கி ஊர்வலமாகச் செல்லும் கூட்டமைப்பு எம்.பிக்கள்



## வடக்கு - கிழக்கு ஆளுநர் இன்று கல்முனைக்கு விஜயம்

கல்முனை,பெப்.25

வடக்கு- கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ இன்று வெள்ளிக்கிழமை கல்முனைக்கு விஜயம் செய்கிறார்

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட கல்முனை கரையோரப் பிராந்தியத்தில் மேற்கொள்ளப்படும் நிவாரண நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காகவே ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ இங்கு வருகை தருகிறார்.

அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் யூ.எல்.ஏ.அஸீஸ் தலைமையில் கல்முனை செயலகத்தில் நடைபெறவுள்ள உயர்மட்ட மாநாட்டிலும் அவர் பங்குபற்றுவார் என அறிவிக்கப்பட்

(16ஆம் பக்கம் பார்க்க)

## சிப்பாய் பலியான சம்பவம்: புலிகள் விளக்க அறிக்கை

கிளிநொச்சி,பெப்.25

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வேவு நடவடிக்கையில் ஈடுபடும் நோக்கத்தோடு வந்த சிப்பாய்கள் மீதே கிளாலியில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

- இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் துறை அறிவித்துள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இடையிலான சூனியப் பிரதேசத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகப் புலிகள் விளக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த புதன்கிழமை மாலை 4.15 மணியளவில் கிளாலி முன்னரங்கப் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியினுள்

(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்





விடுதலை[illegible]கள் அமைப்பில் இணைந்து கொள்ள[illegible]ய சிறுவர்கள் இருவர் நேற்று மாலை ய[illegible]. மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் வைத்து அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இது தொடர்பான நிகழ்வில் கலந்துகொண்ட 'யுனிசெவ்' அமைப்பின் நிகழ்ச்சித்திட்ட அலுவலர் அபியான் ஜெறானா, மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் கண்ணன் ஆகியோரை முதலாவது படத்திலும், இயக்கத்தில் இணைய வந்த சிறுவர்களை இரண்டாவது படத்திலும் காணலாம். மாவட்ட ஊடகப்பொறுப்பாளர் இமையவனும் படத்தில் உள்ளார்.

(படங்கள்: பிரபா)

# இயக்கத்தில் இணைய வந்த சிறுவர்கள் நேற்றுப் பெற்றோரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.25

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அமைப்பில் இணைய வந்த 18 வயதிற்குட்பட்ட இரு சிறுவர்கள் நேற்றுமாலை யாழ் மாவட்ட அரசியல் துறை அலுவலகத்தில் வைத்து அவர்களுடைய பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை விடுதலைப் புலிகள் இயக்க அமைப்பில் இணைய வந்த புத்தூர் கிழக்கைச் சேர்ந்த ஒரு சிறுவனும் சிறுப்பிட்டி தெற்கைச் சேர்ந்த சிறுவன் ஒருவனும் நேற்று வியாழக்கிழமை மாலை 'யுனிசெவ்' மற்றும் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகப் பிரதிநிதிகள் முன்னிலையில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியினால் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் யுனிசெவ் அமைப்பின் யாழ். அலுவலக நிகழ்ச்சித்திட்ட அலுவலர் அபியான் ஜெறானா, மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலக காணாமற்போனோர் விசாரணை அதிகாரி ரீ.மொறின் மற்றும் யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கண்ணன், யாழ். மாவட்ட அரசியல் துறையின் ஊடகப் பொறுப்பாளர் இமையவன் ஆகியோர் கலந்துகொண்டனர். (8-7)

## கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயத்தில் மகா ஞானொடுக்கம்

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் தவக்காலத்தையொட்டி மகா ஞானொடுக்கம் நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை ஞானொடுக்கம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அடுத்தமாதம் 20ஆம் திகதி முடிவடையும்.

வவுனியா அமல மரித்தியாகிகள் நற்செய்திக்குப் பணியகக் குருக்களான அருட்திரு. லம்பேட், அருட்திரு. எஸ்.ஆர்.தேவராஜா, அருட்திரு. செ.அன்புராசா ஆகியோர்கள் மேற்படி ஆலயத்தில் தங்கியிருந்து ஞானொடுக்க வழிபாடுகளை நடத்துவார்கள்.

கருத்தரங்குகள், இல்ல பொது வழிபாடுகள், நற்கருணைப் பவனிகள், மறையுரைகள், வீட்டுத் திருப்பலிகள், கலைநிகழ்வுகள், மன்னிப்பு வழிபாடுகள் என்பனவும் இடம்பெறும் என பங்குத் தந்தை அருட்திரு. அனரன் மத்தாயஸ் அடிகள் தெரிவித்தார். (8-30)

## சமுர்த்தி வங்கி திறப்பு விழா

வேலணை சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு வேலணைப் பிரதேச உதவிப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஸ் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் தி.மகேஸ்வரகுமார் பங்கு கொள்வார்.

இந்தச் சமுர்த்தி வங்கியின் புதிய கட்டடம் இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் நிதி உதவியுடன் வேலணைப பிரதேச செயலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. (எ-73)

## பரிசில் வழங்கும் நிகழ்வு

தென்மராட்சி,பெப்.25

வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் சு.தர்மலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். (எ-203-117)

## மெய்வன்மைப் போட்டிகள்

அச்சுவேலி,பெப்.25

அச்சுவேலி மத்திய கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் வே.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார். (3-11)

★ ★ ★

தென்மராட்சி,பெப்.25

மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயத்தின் மெய்வன்மைப் போட்டிகள் நாளை சனிக்கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் திருமதி வி.வைகுந்தநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (3-202-117)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.25

கொக்குவில் இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு கல்லூரி அதிபர் பொ.கமலநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இளைப்பாறிய நில அளவையாளர் ச.சிவானந்தன் கலந்துகொள்வார். திருமதி தவராணி சிவானந்தன் பரிசில்களை வழங்குவார். (3)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.25

வண்ணார்பண்ணை இளையதம்பி இந்து வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் மு.செல்லையா தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.காங்கேயன் கலந்து கொள்வார்.

இதன் முன்னோடி நிகழ்ச்சியாகக் கடந்த 20 ஆம் திகதி மரதன் ஓட்டமும் நடைபெற்றது. (8)

# கற்கடதீவு அந்தோனியார் ஆலயத்திருவிழா நெடுந்தீவிலிருந்து விசேட போக்குவரத்து

நெடுந்தீவு,பெப்.25

யாத்திரைத்தலங்களில் ஒன்றான கற்கடதீவு புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்தத் திருவிழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு கொடியேற்றத்துடன் வழிபாடுகள் ஆரம்பமாகும். தொடர்ந்து அன்றையதினம் திருச்செபமாலையும், திருப்பலி நற்கருணை வழிபாடு, நற்கருணைப் பவனி என்பனவும் இடம்பெறும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் ஆசீர்வாதமும் இடம்பெறவுள்ளன.

மேற்படி தேவாலயத் திருவிழாவிற்கென நெடுந்தீவிலிருந்து நாளை சனிக்கிழமை காலை 11 மணியிலிருந்து கடற்போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஞாயிற்றுக்கிழமை காலை 5 மணிக்கும் படகுச்சேவை இடம்பெறும்.

வெளிநாட்டிலிருந்து திருவிழாவிற்கு வருவோரின் வசதி கருதி அவர்கள் தமது சொந்த இடங்களிலிருந்து படகுகளில் கற்கடதீவு செல்ல கடற்படையினரிடமிருந்து அனுமதி பெறப்பட்டுள்ளது என்று ஆலய நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

திருவிழாவிற்கு வருகை தருவோர் தமக்குத் தேவையான குடிதண்ணீர், உணவு போன்றவற்றைத் தாங்களே கவனித்துக்கொள்ளுதல் வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

திருவிழாவிற்கான ஏற்பாடுகளை நெடுந்தீவு பங்குத்தந்தை அருட்திரு. எஸ்.செபநேசரட்ணம் அடிகளாரும் ஆலய நிர்வாகத்தினரும் மேற்கொண்டுள்ளனர்.

கடந்தகால யுத்த நிலைமைகளின் காரணமாக நீண்டகாலமாகச் சேதமடைந்த நிலையில் பராமரிப்பின்றியும், கவனிப்பாரின்றியும் காணப்பட்ட இந்த ஆலயம் கடந்த வருடம் நெடுந்தீவு - மன்னார் ஆகிய இடங்களைச் சேர்ந்த மீனவர்களினால் மீளவும் புதிதாக அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (எ-112)

# சிவலயம் நூல் வெளியீட்டு விழா ஞாயிறன்று கொழும்பில் நடக்கும்

யாழ்ப்பாணம்,பெப்.25

.. கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையின் ஆதரவில் இலங்கை வானொலியின் மூத்த ஒலிபரப்பாளர்களுள் ஒருவரான அமரர் வீ.ஏ.சிவஞானம் பற்றிய 'சிவலயம்' என்னும் நூல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

பேராசிரியர் கா.சிவத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக வர்த்தக வங்கியின் ஏற்றுமதி, சர்வதேசப் பிரிவின் தலைமை அதிகாரி எஸ்.ராகவனும் சிறப்பு விருந்தினர்களாக தொழிலதிபர்களான என்.வாகீசன், புரவலர் ஹாஷீம் உமர் ஆகியோரும் கலந்துகொள்வர்.

நிகழ்வில் மொறீஸியஸ் தீவின் தூதுவர் தௌஸ்வரன், கம்பவாரிதி இ.ஜெயராஜ், ஊடகத் துறையைச் சேர்ந்தவர்களான இளையதம்பி தயானந்தா, சிதம்பரப்பிள்ளை சிவகுமார் ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

அமரர் வீ.ஏ.சிவஞானம் பல்வேறு பாடசாலைகளில் ஆசிரியராகப் பணியாற்றி, பின்னர் இலங்கை வானொலியின் கல்விச்சேவையில் பிரதி எழுத்தாளராகத் தன்னை இணைத்துக் கொண்டார். தொடர்ந்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்து தமிழ்த் தேசிய சேவையில் இயல் நாடகக் கட்டுப்பாட்டாளராகப் பணிபுரிந்தமை குறிப்பிடத்தக்கது. (3-202)

# படகோட்டிகள் சிலரால் தீவக பயணிகளுக்கு சிரமம்

## கிராம அலுவலரிடம் முறைப்பாடு

ஊர்காவற்றுறை,பெப்.25

ஊர்காவற்றுறை கரம்பன் கண்ணகை அம்மன் இறங்குதுறையில் இருந்து தீவுப்பகுதிகளுக்கு சேவையில் ஈடுபட்டு வரும் ஒரு சில படகோட்டிகளின் நடவடிக்கைகளால் பயணிகள் பெரும் சிரமங்களை அனுபவிக்க நேரிடுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

திங்கட்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் தினசரி காலை 9.30மணிக்கு கரம்பன் கண்ணகை அம்மன் இறங்குதுறையில் இருந்து படகு புறப்படுதல் வேண்டும்.

எனினும், பயணிகள் கொளுத்தும் வெய்யிலில் படகுகளில் ஏறி அமர்ந்துள்ள போது ஒரு சில படகோட்டிகள் சுமார் 25நிமிடங்கள் தாமதித்தே பயணத்தை ஆரம்பிக்கின்றனர். இதனால், தீவுப்பகுதிகளுக்கு அவசர அலுவல்கள நிமித்தம் சென்று வருபவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அதேவேளை, கடந்த 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நயினாதீவில் இருந்து கரம்பன் கண்ணகை அம்மன் இறங்குதுறை நோக்கி வந்த படகில் எழுவைதீவிற்கு செல்லும் பயணிகள் இருந்தும் அவர்களை எழுவைதீவிற்கு கொண்டுசென்று இறக்குவதற்கு படகோட்டிகள மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

இதனால், பயணிகள் வேறுவழியின்றி கரம்பன் கண்ணகை அம்மன் இறங்துறைய வந்தடைந்து பிறிதொரு படகின் மூலமே மாலை 5.30 மணிக்கு எழுவைதீவிற்கு சென்றடைந்தனர்.

- இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட பயணிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் அனலைதீவு, எழுவைதீவுப் பயணிகளின் முறைப்பாடு குறித்துக் கருத்து வெளியிட்ட ஊர்காவற்றுறை உதவிஅரச அதிபர் பணிமனை வட்டாரங்கள்:-

சம்பந்தப்பட்ட பகுதிகளின் கிராம அலுவலர்கள் இதுவிடயமாக பணிமனையில் முறைப்பாடு செய்துள்ளனர். கிராம அலுவலர்களின் முறைப்பாட்டை அடுத்து படகு உரிமையாளர்களுக்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அறிவுறுத்தல்களைப பின்பற்றுவதாகப் படகு உரிமையாளர்கள் உறுதிமொழி வழங்கியுள்ளனர்.

உதவி அரச அதிபர் பணிமனையால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை ஏற்று செயற்படுத்தாத படகு உரிமையாளர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினர். (எ-16)


உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying



Head office
No.500,Galle Road,
Wellawatte,
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626
Jaffna office
No.86,PointPedro Road,
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600
Branch
No:14,New Market Building
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979
Trinco Office
No.47,Kandy Road,
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519
யாழ் ⇆ கொழும்பு | யாழ் ⇆ திருகோணமலை ⇆ கொழும்பு





சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் தமிழ்த் தாயக தொழில்நுட்ப ஒருங்கமைப்பினருடன் இணைந்து சுனாமியால் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக் நிதியுதவி வழங்கினர். இது தொடர்பான நிகழ்வு நேற்றுமுன்தினம் பேரவை மண்டபத்தில் நடைபெற்றபோது யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் மாணவி ஒருவருக்கு நிதியினைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (எ-190)

# காஷ்மீரில் கடும்பனி தொடர்கிறது!

## சாவு 400 பேர்; 250 பேரைக் காணோம்; ஆபத்துக் கட்டத்தில் மேலும் பலர்!!

காஷ்மீர் மாநிலத்தில் வரலாறு காணாத வகையில் தொடர்ந்தும் பனிப்பொழிவு ஏற்பட்டு வருகிறது. இதனால், அங்கு மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. பனிச்சரிவால் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் சேதம் அடைந்தன; 400 பேர் பலியாகி உள்ளனர்; மேலும் 200 பேரைக் காணவில்லை.

இந்தப் பனிப்பொழிவில் சிக்குண்டு உடல் தாக்கங்களுக்கு இலக்கானவர்கள் பலர் ஆபத்தான் நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

பனிப்புயலில் சிக்கிய 32ஆயிரம் பேரை இராணுவத்தினர் மீட்டுள்ளனர்.

காஷ்மீரில் உள்ள அனந்தநாக், காளி குண்டு பகுதிகளும் ஜம்முவில் இருக்கும் பூஞ்ச் பகுதியும் கடுமையாக பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றன. இந்தப் பனி புயலில் சிக்கிப் பலியானவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா உதவிப் பணம் வழங்க மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

காயம் அடைந்தவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது. இதற்கிடையில் பிரதமர் மன்மோகன்சிங் பிரதமர் நிவாரண நிதியிலிருந்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா உதவித் தொகை வழங்க உத்தரவிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட மத்திய அமைச்சர் குலாம நபி ஆசாத், முதலமைச்சர் முப்தி முகமது சயீத் ஆகியோர் ஹெலிக்கொப்டரில் சென்றார்கள். ஆனால், அப்பகுதியில் 12 அடி உயரத்துக்கு பனி உறைந்து கிடந்ததால் ஹெலிக்கொப்டர் தரை இறங்க முடியவில்லை.

மீட்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளில் துரிதமாக ஈடுபடும்படி இராணுவத்துக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது பற்றி பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி இராணுவ அதிகாரியிடம் கூறும்போது 'உத்தரவை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டியதில்லை. மீட்புப் பணிகளை உடனடியாகக் கவனியுங்கள்' என்று அறிவுறுத்தினார்.

இந்தப் பனிப் பொழிவில் பலியான மேலும் 35 பேரின் உடல்கள் நேற்று மீட்கப்பட்டன. அனந்தநாக் மாவட்டத்தில் மட்டும் 173 பேர் இறந்துள்ளார்கள்.

நேற்று பனிஹாலில் உள்ள ஜவகர் சுரங்கப்பாதையில் இந்திய - திபெத் எல்லை பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 9 பேர் சிக்கிக் கொண்டார்கள். இந்திய இராணுவத்தினர் விரைந்து சென்று அந்த 9 பேரையும் உயிரோடு மீட்டார்கள்.

மேலும் 100 பேர் சுரங்கத்தின் உள்ளே சிக்கித்தவிக்கிறார்கள். அவர்களை மீட்கும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

### பாகிஸ்தான் தீவிரவாதிகளும் பனிப்பொழிவில் சிக்கினர்!

இந்தியா - பாகிஸ்தான் இடையே உள்ள எல்லைக் கட்டுப்பாடுக்கோடுப் பகுதியில் 10 அடி உயரத்துக்குப் பனிப்பாறைகள் உருவாகியுள்ளன. அந்தப் பகுதியில் பதுங்கி இருந்த சில பாகிஸ்தான் தீவிரவாதிகள் பனிப்பாறைகள் இடையே சிக்கிக்கொண்டனர். அவர்களை இந்திய இராணுவத்தினர் கைதுசெய்து, முகாம்களுக்கு அழைத்துச் சென்றனர்.

### சட்டசபையில் அமளி

பனிப் பொழிவில் ஏராளமான பேர் உயிரிழந்த விவகாரம் நேற்றுக் காஷ்மீர் சட்ட சபையில் எதிரொலித்தது. மாநில அரசு துரிதமான நடவடிக்கை எடுக்கத்தவறிவிட்டது. இதனாலேயே சாவு எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டின.

தேசிய மாநாட்டுக்கட்சி, கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகள் கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த எம்.எல்.ஏக்கள் சட்டசபையில் இது பற்றி விவாதிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்கள்.

அதற்குச் சபாநாயகர் அனுமதி வழங்க மறுத்தார். இதனால், எதிர்க்கட்சி எம்.எல்.ஏக்கள் அவையின் மையப் பகுதிக்குச் சென்று குரல் எழுப்பினர். இதனால், சபையில் அமளி ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து சபையை 30 நிமிட நேரத்துக்குச் சபாநாயகர் ஒத்தி வைத்தார். (த)

## அழிவுகளைப் பார்க்கச் சென்ற சோனியா காந்தி அருந்தப்பு!



ஸ்ரீநகர்,பெப்.25

காஷ்மீரில் பனிப்புயலில் பாதிக்கப்பட்டவர்களைப் பார்த்து ஆறுதல் கூறுவதற்காக காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி ஹெலிக்கொப்டரில் சென்றார். ஆனால், பனிமூட்டத்தால் அவர் சென்ற ஹெலிக்கொப்டர் தரை இறங்கமுடியாத நிலை ஏற்பட்டது. எனினும் விமானி ஹெலிக்கொப்டரை சாதுரியமாகத் திருப்பி பனிப்பொழிவுக்குள்ளிருந்து வெளியே கொண்டுவந்தார்.

பனிப்பொழிவுக்குள் சிக்கி விபத்து ஏற்படவிருந்த சமயத்தில் விமானியின் சாதுரியத்தால் சோனியாவும் அவருடன் சென்றவர்களும் மயிரிழையில் உயிர்தப்பினர்.

காலை 11 மணியளவில் அவர் ஸ்ரீநகர் போய்ச் சேர்ந்தார். அவருடன் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி இராணுவத் தளபதி ஜே.ஜே.சிங் ஆகியோரும் சென்றார்கள்.

விமான நிலையத்தில் சோனியா காந்தியை காஷ்மீர் முதலமைச்சர் முப்தி முகமது சயீத், துணை முதலமைச்சர் மான்கட் ராம்சர்மா, மத்திய அமைச்சர் குலாம்நபி ஆசாத் ஆகியோர் வரவேற்றார்கள்.

வரவேற்பு முடிந்ததும் சோனியா காந்தி மீட்பு நடவடிக்கைகள் குறித்து இராணுவத் தளபதிகள் மற்றும் மாநில உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

பின்னர் சோனியாகாந்தி ஹெலிக்கொப்டரில் புறப்பட்டார். அனந்தநாக் மாவட்டத்தில் பெரிதும் பாதிக்கப்பட்ட நக்னி, பனீஸ்னர், லால் டின்கோ ஆகிய இடங்களை விமானத்தில் பறந்தபடியே பார்வையிட்டார்.

கானபால் என்ற இடத்தில் சோனியா காந்தி பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து குறைகளைக் கேட்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சோனியாவைக் காண அங்கு ஏராளமான பேர் திரண்டிருந்தனர். ஆனால், அங்கு கடுமையான பனி மூட்டம் நிலவியதால் சோனியா காந்தி சென்ற ஹெலிக்கொப்டர் தரை இறங்க முடியவில்லை.

இதனால், மக்களை சந்திக்கும் அத்திட்டம் ரத்துச் செய்யப்பட்டது. பிறகு அங்கிருந்தபடியே ஹெலிக்கொப்டர் 'பூஞ்ச்ப' பகுதியை நோக்கிச் சென்றது. வழியில் காளி குண்டு, பெரிநாக் ஆகிய இடங்களை ஹெலிக்கொப்டரில் சென்றபடியே சோனியாகாந்தி பார்வையிட்டார்.

'பூஞ்ச்பீ' பகுதியைப் பார்வையிட்ட பிறகு சோனியாகாந்தி ஜம்மு திரும்பினார். (த)

## புஷ்ஷைக் கொல்வதற்கு சதி? - ஒருவர் கைது!



வாஷிங்ரன்,பெப்.25

அமெரிக்க அதிபர் புஷ்ஷைக் கொல்லச் சதி செய்தார் என்று கூறப்படும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதை அமெரிக்க நீதித்துறை அறிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள அஹமட் உமர் அபு அஸி கொலைத்திட்டம் குறித்து அல்கெய்டா அமைப்பில் உள்ள ஒருவருடன் சவூதி அரேபியாவில் ஆலோசித்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. கடந்த 2000ஆம் ஆண்டிலும் 2002 ஆம் ஆண்டிலும் ஒரு மாணவராக சவூதிக்குச் சென்றிருந்தார் அபு அஸி.

புஷ்ஷைக் கொல்ல இரு விதமான திட்டங்களை அபு அஸியும் அவரது சகாவும் தீட்டினாகளாம். புஷ்ஷை நெருங்கித் துப்பாக்கியால் சுடுவது அல்லது கார்க் குண்டின் மூலம் கொல்வது ஆகியவை அந்தத் திட்டங்கள்.

மேலும் பல்வேறு தீவிரவாதச் செயல்கள் குறித்தும் அல்கெய்டா அமைப்பின் மையங்களை அமைப்பது குறித்தும் ஆலோசனைகள் நடத்தினாராம்.

குற்றம் நிரூபிக்கப்படும்பட்சத்தில் அபு அஸிக்கு 80 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# செவ்வாய்க் கிரகத்தில் பனிக்கடல்; அங்கும் வெள்ள அபாயம் உள்ளதாம்!

## ஐரோப்பிய விஞ்ஞானிகளின் புதிய தகவல் இது!!

செவ்வாய் கிரகத்தில் மனிதர்கள் வாழமுடியுமா? அந்த கிரகத்தின் தட்பவெப்ப சூழ்நிலை என்ன என்பது குறித்து உலகம் முழுவதும் ஆராய்ச்சி நடக்கிறது.

அமெரிக்காவும், ஐரோப்பாவும் போட்டி போட்டுக் கொண்டு இதற்கான வேலைகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

அமெரிக்காவின் நாசா விண்வெளி அமைப்பும், ஐரோப்பா விண்வெளி ஆராய்ச்சி மையமும் செயற்கைக்கோளை அனுப்பி செவ்வாய்க் கிரகத்தைப் படம் பிடித்து வருகின்றன.

இந்த ஆராய்ச்சியின் முடிவில் செவ்வாய்க் கிரகத்தில் முன்பு கடல் மற்றும் ஆறு இருந்ததாகவும், காலநிலை மாற்றத்தால் அவை மறைந்துவிட்டதாகவும் நாசா விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

இவர்கள் கருத்துக்குமாறான தகவலை ஐரோப்பிய விண்வெளி அமைப்பினர் தெரிவித்திருக்கிறார்கள். செவ்வாயில் பனிக்கடல் இருப்பதாக அவர்கள் புதிய தகவல் ஒன்றை வெளியிட்டிருக்கின்றனர்.

அவர்கள் அனுப்பிய 'செவ்வாய் எக்ஸ்பிரஸ்' என்ற விண்கலம் தற்போது செவ்வாய்க் கிரகத்தை சுற்றிவருகிறது.


அந்த விண்கலம் அனுப்பிய புகைப்படத்தில் பனிக்கடல் இருப்பது தெளிவாகத் தெரிகிறது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இது பற்றி அவர்கள் மேலும் கூறியதாவது:-

கடந்த சில மாதங்களாக மேற்கொண்ட ஆராய்ச்சியின் அடிப்படையில் செவ்வாயில் பனிக்கட்டி மற்றும் தண்ணீர் இருப்பது தெரியவந்துளளது.

தூசி மற்றும் புகை மூட்டம் பனிக்கட்டியை மறைத்து இருக்கிறது. அந்தார்ட்டிக்கா கண்டத்தில் உள்ளது போன்று பாறை போன்ற அமைபபில் பனிக்கட்டிகள் காட்சி அளிக்கின்றன.

அதன் அடியில் தண்ணீர் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதையெல்லாம் பார்க்கும்போது மிகப்பெரிய பனிக்கடல் செவ்வாய்க் கிரகத்தில் உள்ளமை உறுதியாகத் தெரிய வந்திருக்கிறது.



செவ்வாய்க்கிரகத்தில் இருப்பதாகக் கூறப்படும் பனிக்கடலின் தோற்றங்களையே படத்தில் காண்கிறீர்கள்.

இந்தப் பனிக்கடல் 50 லட்சம் வருடத்திற்கு முன்பு உருவாகி இருக்கலாம். கிட்டத்தட்ட 500 மைல் நீள அகலத்தில் இந்தப் பனிக்கடல் உள்ளது.

இதனால், செவ்வாய்க் கிரகத்தில் கால நிலை மாற்றம் ஏற்பட்டால் வெள்ள அபாயம் ஏற்படும் சூழ்நிலை உள்ளது.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## வித்தியாசமான விருந்து!

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள விடுதி ஒன்றில் கடந்த 17ஆம் திகதி ஒரு வித்தியாசமான இரவு விருந்து நிகழ்ச்சி நடந்தது. 'குளோத்திங் ஒப்ஷனல் டின்னர்' என்று அதற்குப் பெயர்.

இந்த விருந்தில் கலந்துகொள்பவர்கள் ஆடை அணியாமல் நிர்வாணமாகவும் வரலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இதில் 30 பேர் நிர்வாணமாக கலந்து கொண்டனராம். எல்லோரும் நடுவயதினர். பலர் தம்பதிகளாகவும் சிலர் தனியாகவும் நிர்வாணமாக இந்த விருந்தில் கலந்துகொண்டனர்.(த)

உலக அரங்கில்

## ஆயுதக் களஞ்சியசாலை வெடித்துச் சிதறியதில் சூடானில் 24 பேர் உடல் கருகிப் பலி!

சூடானின் தெற்கு நகரமொன்றில் இயங்கிய இராணுவப் பயிற்சி நிலையத்திற்குச் சொந்தமான ஆயுதக் களஞ்சியசாலை ஒன்று வெடித்துச் சிதறியிருக்கிறது. இந்தச் சம்பவத்தில் 24 பேர் கொல்லப்பட்டனர்; 30 பேர் காயமடைந்தனர் என்று உள்நாட்டு விவகார அமைச்சு தெரிவித்தது.

சம்பவம் இடம்பெற்ற இடம் போர்களம்போல் தென்படுகின்றது என அதிகாரி ஒருவர் கூறினார். களஞ்சியசாலை தீப்பற்றிக் கொண்டதாலேயே இந்தப் பாரிய வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றதாக இராணுவம் அறிவித்தது.

இந்த வெடிப்புச் சம்பவத்தை தொடர்ந்து களஞ்சியசாலையில் சேமித்து வைக்கப்பட்டிருந்த எறிகணைகள் மழைபோல் நகரின் முழுப பகுதிகளையும் தாக்கியதாக அதிகாரிகள் தெரிவித்தனர். நகரின் அரைவாசிப் பகுதி எரிந்துள்ளது என மீட்புப் பணியாளர் ஒருவர் கூறினார்.

சூடானின் தெற்கில் உள்ள ஜூபா எனும் மாநிலத்திலே நேற்று இந்த திடீர்வெடி விபத்துச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

ஆயுதக் களஞ்சியம் வெடித்துச் சிதறியபோது அதன் அருகிலுள்ள இராணுவக் குடியிருப்புப் பகுதியும் பெருமளவு சேதமடைந்துள்ளது.

நகரின் மேற்குப் பகுதியில் இருந்த இராணுவ வைத்தியசாலை, சந்தைத் தொகுதிகள் என்பன பாரியளவில் சேதமடைந்துள்ளன என்று ஜூபா மாநிலத்துணை ஆளுநர் தெரிவித்தார்.

## ஜப்பானில் இப்போது பொம்மைகள் குழந்தைகளுக்கு அல்ல; முதியோருக்கு!

ஜப்பான் நாட்டில் உள்ள பொம்மை தயாரிப்பாளர்கள், தனியாக வசிக்கும் முதியவர்களுக்காக பேசும் பொம்மைகளை வடிவமைத்து இருக்கிறார்கள். இந்தப் பொம்மைகள் அன்பான, ஆறுதலான வார்த்தைகளைப் பேசும் வகையில் உருவாக்கப்பட்டு உள்ளன.

இந்தப் பேசும் பொம்மைகள் ஜப்பானில் மிகப் பெரிய அளவில் பிரபலம் அடைந்துள்ளன. முதியவர்கள், குழந்தைகளுக்குப் பதிலாக பொம்மையைக் கட்டி அணைத்துக் கொள்கிறார்கள்.

'பியுமெஃபீ' என்ற பொம்மை ஒரு சிறுவனைப் போல் இருக்கிறது.

இந்தப் பொம்மை 1200 சொற்களைப் பேசக் கூடியது. நேற்று முதல் இந்தப் பொம்மைகள் சந்தைக்கு வந்திருக்கின்றன. இவற்றின் விலை 4 ஆயிரம் ரூபா.

ஜப்பானில் குழந்தைகள் எண்ணிக்கை குறைந்து முதியவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், பொம்மை தயாரிப்பாளர்கள் குழந்தைகளை விட முதியவர்களுக்காக பொம்மை தயாரிப்பதில் இவாகள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். அதுதானாம் அதிக லாபமும் கூட.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

சைபிரஸ், முசந்தாஸ், குறோட்டன்ஸ், பாம்ஸ், செவ்வரத்தை, யம்புநாவல், கொடிப்பூ (மஞ்சள்) ஆகிய பூக்கன்றுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 152/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (42364)

SHARP - S.F 1020 சுமார் 20,000 பிரதிகளுக்குள் அடித்த சொந்தப் பாவனையில் உள்ள புதிய போட்டோப் பிரதி மெசின் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 141, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (42346)

## கடை வாடகைக்கு

யாழ்நகருக்கு மிக அண்மையில் கஸ்தூரியார் வீதியில் அமைந்த கடை வாடகைக்குண்டு. நகைக்கடை, Mobile Phone / உதிரிப்பாக, வேறு பாவனைக்கும் உகந்தது. தொடர்பு: 49, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (42431)

## பணிப்பெண் தேவை

ஆசிரியர் குடும்பத்திற்கு பணிப்பெண் தேவை. தங்கியிருந்து அல்லது பகல் நேரத்தில் மட்டும் வேலை செய்பவர் விரும்பத்தக்கது. தொடர்பு: ச.லோகநாதன், 224/9, பத்திரகாளி அம்மன் வீதி, பிறவுண் றோட், யாழ்ப்பாணம். T.P No. 0776176397 (42428)

## உடன் தேவை

எலற்றோனிக் (ELECTRONIC) கடைக்கு விற்பனையாளர் (SALES MEN) தேவை.

**கிங்ஸ் எலற்றோனிக்ஸ்**

64, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(42433) (21-45)

## நூல் வெளியீட்டு விழா

கவிஞர் கல்வயல் வே.குமாரசாமி அவர்களின்

**பாப்பாப் பா** (பாலர் பாடல்கள்)

இடம் - கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

காலம் - 28.02.2005 திங்கள் பிற்பகல் 2.00மணி

அனைவரும் வருக!

கோப்பாய் ஆசிரியர் கலாசாலைச் சமூகம்

(42417) (21-45)

# கசிப்பு விற்பனையில் ஈடுபட்டவருக்கு ஒரு லட்சத்து 20 ஆயிரம் அபராதம்

வலிவடக்கு,பெப்.25

கசிப்பு விற்பனையில் ஈடுபட்டவருக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தினால் ஒரு லட்சத்து 20 ஆயிரம்ரூபா தண்டமாக விதிக்கப்பட்டது.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த பொன்னம்பலம் பிரபாகரன் என்பவரிடம் இருந்து விற்பனைக்கென வைக்கப்பட்டிருந்த 52 போத்தல் கசிப்பினைக் கைப்பற்றினர்.

சம்மந்தப்பட்டவர் மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். அப்போது அவர் நீதிமன்றத்தில் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

இதனையடுத்து நீதிவான் இந்தத் தண்டனையை விதித்தார்.

தண்டனை விதிக்கப்பட்டவர் நீதிமன்றில் உரிய பணத்தை உடன் செலுத்தினார்.

(எ-86)

## உங்களுக்கு இயலக்கூடிய விலைகளில் கணனிகள்!

தரமான **கணனிகள்! NET**

இன்றே விரையுங்கள்

Computers Made In expensive

குறைந்த கையிருப்பு மட்டுமே!

| DESCRIPTION | PRICE |
|---|---|
| * PI 200 MHz / 32MB RAM/2 GB HDD / | 12500 |
| * PI 233 MHz / 32MB RAM/2GB HDD/ | 12900 |
| * PII 233 MHz / 64MB RAM/2GB HDD/ | 13500 |
| * PII 266 MHz / 64MB RAM/2GB HDD / | 13900 |
| * PII 300 MHz / 64MB RAM/2.5 GB HDD/ | 14900 |
| * PII 333 MHz / 64MB RAM/3.2 GB HDD/ | 15500 |
| * PII 350 MHz / 64MB RAM/4.2 GB HDD/ | 16900 |
| * PIII 450 MHz / 64MB RAM/6.4 GB HDD/ | 24500 |
| * PIII 500 MHz / 64MB RAM/6.4 GB HDD/ | 25500 |
| * PIII 550 MHz / 64MB RAM/6.5 GB HDD/ | 26000 |
| * PIII 600 MHz / 64MB RAM/6.4 GB HDD/ | 27250 |
| * PIII 733 MHz / 128 MB RAM/10 GB HDD/ | 33000 |

(with 1.44 MB FDD / VGA / CD Rom / sound/ 15" Digital Color Monitor / Key Board / Mouse and Pad)

(தொகையாகப் பெற்றுக்கொள்பவர்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்)

புத்தம்புதிய P IV 226 MHz கணனிகள் 56,000/-

முதல் 3 வருட உத்தரவாதத்துடன்,

USP Flash Drive 64 MB - 2000/-
USP Flash Drive 128 MB - 3000/-
Casio Digital Diary SF 7990 - 12,800/-

**NORTH EAST TECHNOLOGIES [PVT] LTD**

No: 34, SADDANATHAR ROAD, NALLUR, JAFFNA
T.P.: 021 - 222 3786 web site: www.net.slt.lk.

(சி-41169 )(24-21-45)

## கிளை பணிமனை பொறுப்பாளர் வவுனியா

உதயன் - சுடர்ஒளி பத்திரிகை கிளை பணிமனைக்கு அடிப்படைத் தகைமைகளுடன் 5 வருடம் நிர்வாகம், கணக்கியல் (Administration, Accounts) துறையில் அனுபவமும் பொறுப்பும் வாய்ந்த, கிளைப் பணிமனையை சுயமாக நிர்வகிக்கக் கூடிய கிளை பணிமனைப் பொறுப்பாளர் தேவை.

**10.03.2005இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.**

**MASS MEDIA SYNDICATE (PVT) LTD.,**
No.85,Jayantha Mallimarachi Mawatha,
Colombo - 14

(C-41171) (21-45)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா அம்பலவாணர்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா அம்பலவாணர் நேற்று (24.02.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணரின் (பொலீசர்) அன்பு மனைவியும் கந்தையா பார்வதிப்பிள்ளையின் (புங்குடுதீவு) அன்புச் சகோதரியும் தர்மகீர்த்தி (கீர்த்தி - பிரான்ஸ்), தர்மராணி (சாவகச்சேரி), தர்மகுணதேவி (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத் தாயாரும், கோமஸ்வரி - வசந்தி (பிரான்ஸ்), சுந்தரலிங்கம் (சாவகச்சேரி), யோகநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் தேனுகா (பிரான்ஸ்), துரைசீலன் (பிரான்ஸ்), கீர்த்திகா(யாழ்ப்பாணம்), உதயகுமார் (வேலணை ப.நோ.கூ.சங்கம் யாழ்ப்பாணம்), அருண் பிரகாஷ் (இந்தியா), ரவிப்பிரதீப் (பிரான்ஸ்), விஜித்தா (பிரான்ஸ்), கௌரிசங்கர் (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும் வர்மிகாவின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (25.02.2005) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காகச் சாவகச்சேரி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

காளி கோயிலடி,
நுணாவில் மத்தி,
சாவகச்சேரி. (21-45)


தகவல்:
சி.சுந்தரலிங்கம்,
ச.உதயகுமார்
(வேலணை ப.நோ.கூ.சங்கம்.யாழ்ப்பாணம்).

(42437)

# ௯0 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு : **26.09.1958**

உதிர்வு : **28.11.2004**



பாசத்தின் இருப்பிடமாய் பண்பின்
பிறப்பிடமாய்த் திகழும்
எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே !
உன்னை எங்கும் தேடுகின்றோம்
ஆயிரம் உறவிருந்தும் அம்மா என்றழைக்க
நீ இல்லையே - கனத்த மனதுடன்
காத்திருக்கின்றோம்.

இன்று (25.02.2005) வெள்ளிக்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட

திருமதி

**சுந்தரலிங்கம் ஸ்ரீகுணபூஷணி**

884/1, பலாலி வீதி,
திருநெல்வேலி
T.P.0776159713.

- கணவர்,
பிள்ளைகள்.

(C41117)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# இயலாமை நிலையில் திணறும் ஜனாதிபதி

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் கழுத்துக்குக் கத்தி வந்துவிட்டது. முன்னேயும் நகர முடியாமல் பின்னேயும் பின்வாங்க முடியாமல் அது தவிக்கின்றது.

சமாதான நடவடிக்கைகள் என்ற கவளத்தை மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் அது திண்டாடுகின்றது. அரசின் கழுத்தில் பொறுத்துப் போய் நிற்கின்றது சமாதான முயற்சிகள் என்ற கவளம்.

ஜனாதிபதி சந்திரிகாவின் நிலையோ இருதலைக் கொள்ளி எறும்பு போல மோசம்.

ஒருபுறம் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும்படி சர்வதேச அழுத்தம் மற்றும் சூழ்நிலைக் கட்டாயம். மறுபுறம் சமாதான முயற்சிகளை முன்னெடுத்தால் காலைவாரிவிடப் போவதாக மிரட்டும் அரசுக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி.

இவை எல்லாவற்றையும் தாண்டி ஆட்சி அதிகாரப் பதவிக் காலத்தின் அந்தம் நெருங்குவதால் அதிகாரம் பறிபோய்விடும் என்ற அச்சம், விசனம், கவலை வேறு அவருக்கு.

இப்படி பல்வேறு பிய்ச்சல், பிடுங்கல், சிக்கல்களுக்கு மத்தியில் சிக்குண்டு தவிக்கின்றார் ஜனாதிபதி.

'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற தமது விநோதமான கொள்கையைப் பிரகடனப்படுத்தித் தனது முதல் ஏழரை ஆண்டு கால பதவிக்காலத்தில் நாட்டைக்கொடூர யுத்தத்துக்குள் சிக்கிச் சீரழிக்க வைத்துக் குட்டிச் சுவராக்கினார் அவர்.

'ஏழரைச் சனியன்' பீடித்தது போல நாட்டைக் கெடுத்த அந்த ஏழரை ஆண்டு காலம் கடந்த போது, 2001 இன்முடிவில் - 2002 இன் ஆரம்பத்தில் - அப்போது ஆட்சிப்பீடம் ஏறிய ஐக்கிய தேசியக் கட்சி, விடுதலைப் புலிகளோடு அமைதிப் பேச்சுக்களை நடத்தி சமாதானத் தீர்வைக்காண முன்வந்தது. சமாதானக் கதவைத் திறந்து வைத்துப் புலிகள் காத்திருந்தனர். அந்தச் சந்தர்ப்பத்தை ரணிலின் அரசு பயன்படுத்த முன்வந்ததால் நாட்டில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டது. அமைதிப் பேச்சுக்கள் ஆரம்பமாகின. இரு பெரும் இனங்களுக்கும் இடையில் பகைமை உணர்வைத் தற்காலிகமாக வேனும் மறக்க வைப்பதற்கு வாய்ப்புக்கள் ஏற்பட்டன.

எனினும், அமைதி முயற்சிகள் ஆக்க பூர்வமான திசையில் நகரவில்லை. சிங்களப் பேரினவாதிகளின் அச்சுறுத்தல், நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகார அழுத்தம், அதை மீறிச் செயற்பட முடியாத ரணில் அரசின் இயலாத்தனம், தமிழர்களுக்கு உரியதை அளிப்பதற்குப் பெரும்பான்மையினத்தவர்களிடம் இயல்பாகவே இருக்கும் விருப்பமின்மை போன்றவை காரணமாக அமைதி முயற்சிகள் தேங்கின.

தடைப்பட்டுப் போன சமாதான நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் செயலுருப் பெறவிருந்த சமயத்தில் தான் - கடந்த ஆண்டு முற்பகுதியில் - ஆட்சியிலிருந்த ரணிலின் அரசை தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி நான்கு ஆண்டுகள் முன்னதாக வீட்டுக்கு அனுப்பி, பேரினவாதிகளுடன் சேர்ந்து கூட்டமைத்து, ஆட்சியைப் பிடித்து, அமைதி நடவடிக்கைகளுக்கு நிரந்தரத் தாழ்ப்பாள் போட்டார் ஜனாதிபதி.

பேரினவாதிகளின் நெருக்குதல் வலைக்குள் சிக்கிக் கொண்டுள்ள ஜனாதிபதி குமாரதுங்க, அதனால் அமைதி முயற்சிகளை முன்னெடுக்கவும் முடியாமல், அமைதி முயற்சிகளை ஆக்க பூர்வமான திசையில் முன்நகர்த்துமாறு கோரும் சர்வதேச சமூகத்தின் அழுத்தத்துக்கு இணங்கவும் முடியாமல், புலிகளுடன் யுத்தம் புரிவதற்கான திராணி இல்லாததால் யுத்தநிறுத்தத்தை முறித்துப் போருக்குப் போகவும் முடியாமல், திரிசங்கு சொர்க்க நிலையில் திண்டாடுகின்றார்.

முதலில் 'இடைக்கால நிர்வாகம்' குறித்தும், பின்னர் இறுதித்தீர்வு குறித்தும் புலிகளுடன் பேசுவதற்கு அரசு தயார் என்ற மேலோட்டமான அறிவிப்பு ஒன்றை விடுத்ததற்கே அரசு மீது கர்ண கடூரமாய்ப் பாய்ந்து விழுந்திருக்கின்றது அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி.

இந்தப் பேரினவாதிகளைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு - அவர்களை நம்பி, அவர்களில் தங்கியிருந்து, அரசை நடத்திக் கொண்டிருக்கும் - ஜனாதிபதியால் அமைதி முயற்சிகளை மீள ஆரம்பிக்க முடியும் என நம்புவது 'முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்ட' கதைதான் !

ஜே.வி.பியைச் சேர்த்துக் கொண்டால் அமைதி முயற்சிகள் இல்லை. ஜே.வி.பியை விட்டால் அரசே இல்லை. - இதில் எந்த வழியைத் தேர்ந்தெடுக்கப் போகிறார் ஜனாதிபதி குமாரதுங்க?

காலம் விரைவில் பதில் சொல்லும்.

# கரம்பன் வீதியைப் புனரமைக்குக; அன்றேல் ஊர்காவற்றுறை துறைமுகத்தை திறந்துவிடுக!

## போக்குவரத்து வசதி செய்யுமாறு தீவக மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.25

ஊர்காவற்றுறை - கரம்பன் கண்ணகை அம்மன்வீதியைப் பொறுப்பேற்றுப் புனரமைக்குக. அன்றேல் தீவகப் பயணிகளின் நன்மை கருதி ஊர்காவற்றுறைத் துறைமுகத்தைப் பொதுப் போக்குவரத்துக்குப்பயன்படுத்த அனுமதி வழங்குக.

- இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர் அனலைதீவு மற்றும் எழுவைதீவுப் பகுதி மக்கள்.

ஊர்காவற்றுறைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த செவ்வாயன்று உதவி அரச அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெற்றது. திணைக்களத் தலைவர்கள், கிராம மட்டப்பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொலீஸ் அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

இந்தக்கூட்டத்தில் கலந்துகொண்ட எழுவைதீவு - அனலைதீவுப்பகுதி மக்களின் பிரதிநிதிகள்:-

ஊர்காவற்றுறைத் துறைமுகத்தின் ஊடான போக்குவரத்துக்கு கடற்படையினர் தடை விதித்ததையடுத்து, கரம்பன் கண்ணகை அம்மன் வீதி திறக்கப்பட்டு, கரம்பன் இறங்குதுறை ஊடாக அனலைதீவு - எழுவைதீவுப் பகுதி மக்கள் போக்குவரத்துச் செய்ய அனுமதிக்கப்பட்டனர். ஆனால், வருடங்கள் பல கடந்த நிலையிலும் அந்த வீதியைச் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் எவையும் பொறுப்பேற்கவில்லை.

இதனால், பராமரிப்பு அற்ற நிலையில் வீதி பலத்த சேதமடைந்துள்ளது. போக்குவரத்துச் செய்ய முடியாதவாறு வீதி முழுமையான சேதமடைந்ததை அடுத்து இறங்குதுறை வரையிலான பஸ் போக்குவரத்துக்கள் இடைநிறுத்தப்பட்டன. பின்னர், அனலைதீவு - எழுவைதீவுப் பகுதி மக்கள் ஒன்றிணைந்து சிரமதானம் மூலம் வீதியை ஓரளவு புனரமைத்ததை அடுத்து மீண்டும் பஸ் போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

எனினும், அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக மேற்படி வீதி பலத்த சேதமடைந்துள்ளது. எனவே, இந்த வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அன்றேல், ஊர்காவற்றுறைத துறைமுகத்தை அனலைதீவு - எழுவைதீவுப் பயணிகளின் போக்குவரத்துக்குப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் - என்று கோரினர்.

இதற்குப் பதிலளித்த உதவி அரச அதிபர், சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு இவ்விடயம் தெரியப்படுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (எ)

# ஓய்வூதியர் எழுத்து மூலம் அறிவித்தால் மட்டுமே சுனாமி உதவி நிதியைக் கழிக்குக!

## ஓய்வூதியப் பணிப்பாளர் புதிய சுற்றறிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.25

சுனாமி நிவாரண நிதிக்குத் தமது ஓய்வூதியக் கொடுப்பனவுகளில் இருந்து உதவித் தொகையை கழித்து அனுப்பும்படி ஓய்வூதியர்கள் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்தால் மட்டுமே அதற்கமைய அவரவர் விரும்பிய தொகையை ஓய்வூதியத்திலிருந்து கழித்து அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு சகல பிரதேச செயலகங்களுக்கும் ஓய்வூதியப் பணிப்பாளர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

கடந்த டிசெம்பர் மாதம் ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட்ட பதினைந்து வீத அதிகரிப்பை சகல ஓய்வூதியர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவுகளில் இருந்தும் அறவிட்டு சுனாமி தேசிய நிவாரண நிதிக்கு அனுப்பி வைக்கும்படி சகல பிரதேச செயலர்களையும் ஓய்வூதியப் பணிப்பாளர் முன்னர் கோரியிருந்தார்.

ஓய்வூதியப் பணிப்பாளரின் இந்த முடிவை ஆட்சேபித்து வடமாகாண ஓய்வூதியர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் ஓய்வூதியப் பணிப்பாளருக்கும், பிரதேச செயலர்களுக்கும் கடிதங்களை அனுப்பியிருந்தார்.

இதனையடுத்தே ஓய்வூதியப் பணிப்பாளர் பிரதேச செயலகங்களுக்கு புதிய பணிப்புரையை வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-203)

# வட்டுக்கோட்டை ஆஸ்பத்திரிக்கு ஆறு பரப்புக் காணி அன்பளிப்பு

வட்டுகோட்டை,பெப்.25

வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலைக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு சிங்கப்பூரில் வசிக்கும் வட்டுக்கோட்டைவாசி ஒருவர் 6 பரப்புக் காணியை அன்பளிப்புச் செய்துள்ளார்.

ந.கருணாகரன் என்பவரே இவ்வாறு தனது தாயாரான திருமதி ந.திலோத்தம்மை ஞாபகார்த்தமாகக் காணியை அன்பளிப்பாக வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

வட்டுக்கோட்டை மூளாய் வீதியில் உள்ள விளாத்தித் தோட்ட ஒழுங்கையில் அமைந்துள்ள இந்தக் காணி அண்மையில் அரசினர் வைத்தியசாலை அமைப்பதற்கென திருமதி க.இராசம்மா ஊடாக சுகாதார திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டது.

நீண்ட காலமாகத் தனியார் கட்டடங்களில் இயங்கி வரும் வைத்தியசாலையில், கர்ப்பவதிகளுக்கான கிளினிக் மற்றும் மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. வெகுவிரைவில் இவ் வைத்தியசாலைக்கு சொந்தக்கட்டடத்தை அமைப்பதற்கு சுகாதாரத் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-161)

# சுகாதாரத் திணைக்களம் புனரமைத்த கட்டடங்கள் திங்களன்று திறந்து வைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.25

புனரமைக்கப்பட்ட சுகாதார சேவைகள் திணைக்களத்திற்குச் சொந்தமான பல்வேறு கட்டடங்களும் எதிர்வரும் திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாகத் திறக்கப்படவுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைச் செயலாளர் ஆர்.எம்.எஸ். ரத்நாயக்க, சுகாதாரச்சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.குமாரவேற்பிள்ளை ஆகியோர் சம்பிரதாய பூர்வமாகக் கட்டடங்களைத் திறந்துவைக்கவுள்ளனர்.

திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 10.30 மணிவரை மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, சங்கானை கிராமிய வைத்தியசாலையின் குடிதண்ணீர் விநியோகத் திட்டம், வட்டுக்கோட்டைச் சுகாதார நிலையத்தின் விடுதிகள், பிரான்பற்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் என்பன திறந்து வைக்கப்படும்.

முற்பகல் 11 மணிக்கு குட்டியப்புலம் ஆரம்ப சுகாதார நிலையம் திறந்து வைக்கப்படும்.

நண்பகல் 12 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை விடுதிகள், வியாபாரி மூலை ஆரம்ப சுகாதார நிலையம் என்பன திறந்துவைக்கப்படும். (3-202)

# நலன்புரி முகாம்களில் மருத்துவசேவை திருப்தி தரக்கூடியதாக இல்லை

## சுயாதீன அமைப்புகளின் கணிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.25

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் சரியான கட்டமைப்பு எதுவும் உருவாக்கப்படவில்லை என்று சுதந்திர ஊடக இயக்கமும் மாற்றுக் கொள்கைகளுக்கான இயக்கமும் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் வெளியிடப்பட்ட அவதானங்களின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தது. அதன் மிகுதிப்பகுதி இன்று வெளியாகின்றது.

மருத்துவ சேவைகள் திருப்தி தருவனவாக இல்லை

✪ இடம்பெயர்ந்தவர்கள் தங்கியிருக்கின்ற முகாம்களில் 75 சதவீதமானவை பாடசாலைகளிலேயே கொண்டுநடத்தப்படுவதுடன், அந்நிலைமை பாடசாலையின் கல்வி நடவடிக்கைகளைக் கொண்டு நடத்துவதற்குப்பெரும் தடையாக உள்ளது. முகாமின் நடவடிக்கைகள் மற்றும் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை ஒரே இடத்தில் கொண்டு நடத்துவதற்கு எடுக்கும் முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்துள்ளன. அது தொடர்பாக மக்கள் மத்தியில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

✪ இடப்பெயர்ந்தவர்கள் இழந்துள்ள அடையாள அட்டைகள், பிறப்புச் சான்றிதழ்கள் திருமணப்பதிவுச் சான்றிதழ்கள் மற்றும் சாரதிஅனுமதிப்பத்திரம் போன்றவற்றை மீளப்பெற்றுக்கொடுப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. தற்போது கிராம சேவை அலுவலரினால் உறுதிப்படுத்தப்பட்ட எழுத்தாவணமே பாவனையில் உள்ளது.

✪ கண்காணிக்கப்பட்ட முகாம்களில் பலருக்குக் கிடைக்கும் உணவுகள் ஒரே மாதிரியானவையே என்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் சிறிய குழந்தைகளுக்கும் போசாக்குள்ள உணவுகள் கிடைப்பதில்லையெனவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

✪ கண்காணிக்கப்பட்ட முகாம்களில் 5 முகாம்களின் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் மற்றும் வானொலிகள் எதுவும் இல்லாத நிலைமையோ அல்லது போதுமானளவு இல்லையென்னும் தகவல்களே கிடைக்கப்பெற்றுள்ளன.

✪ கண்காணிக்கப்பட்ட முகாம்கள் 14 இல் ஆரம்பப் பாடசாலை செல்லும் வயதில் பிள்ளைகள் இருக்கின்றனர். அவர்களுக்காக முகாம்களில் ஆரம்பக் கல்வி நிகழ்ச்சிகள், கல்வி நடவடிக்கைகள் மற்றும் விளையாட்டு நிகழ்ச்சிகள் எதுவும் மேற்கொள்ளப்படுவதில்லை. இம்முகாம்களில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான உரிய சூழலைக் காணக்கூடியதாக இருக்கவில்லை.

✪ பலரால் மற்றும் அமைப்புக்களினால் வழங்கப்பட்டுள்ள நன்கொடை நிதி தொடர்பாக சரியான புள்ளிவிபர அடிப்படையிலான தகவல்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசஅதிகாரிகள் பெரும் ஆவலைக் காட்டவில்லை.

✪ பலவித காரணங்களினால் முகாம்களில் வாழ்வதற்கு விருப்பமில்லாத நபர்கள் இருப்பதுடன், அவர்களுக்கான நலன்புரி நடவடிக்கைகளை காணக்கூடியதாக இருக்கவில்லை.

✪ ஆழிப்பேரலை அனர்த்தம் தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள அனர்த்த முகாமைத்துவக்குழு முகாம்களில் மற்றும் முகாம்களுக்கு வெளியில் இருப்பவர்கள் பற்றி மேற்கொள்ளப்படும் பின் விவரங்கள் போதுமானதாக இருக்கவில்லை.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-10)

**நாளை**

மாசி 14
சனிக்கிழமை
26.02.2005
திதி : துதியை
பிற்பகல் 1.07 வரை
நட்சத்திரம் : உத்தரம்
பிற்பகல் 5.03 வரை
சுபநேரம் : 3.29 - 4.59
ராகுகாலம் : 9.29 - 10.59
(யாவும் பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

பேசுவதற்கு முன்னர் யாருடன், யாரைப்பற்றி, எப்படி, எப்பொழுது, எவ்விடத்தில் பேசுகிறாய் என்பதில் கவனம் எடு. டபிள்யூ.ஈ.நொறிஸ்.

## வடமராட்சியில் மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம்,பெப்.25

சுனாமி இயற்கையனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இலவச மருத்துவசேவை நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிமுதல் 2.30 மணி வரை பருத்தித்துறை வடஇந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கண்பரிசோதனை நிபுணர் எஸ்.எம்.பர்னாண்டோவாலும், பொது மருத்துவ சிகிச்சை மாவட்ட வைத்திய அதிகாரி லயன் டாக்டர் எஸ்.கதிரவேற்பிள்ளை மற்றும் யாழ்.போதனா வைத்திய சாலை வைத்திய கலாநிதிகளாலும் பற்சிகிச்சை பல் வைத்திய நிபுணர் வி.ஜெயராஜ் ஆகியோராலும் நடத்தப்படும்.

(3-202)

## நீதிமன்றிலிருந்து தப்பிச்சென்றோரில் மூவர் கைது

கொழும்பு,பெப்.25

எம்பிலிப்பிட்டிய நீதிமன்றில் நடந்த கிரனேட் தாக்குதலின் பின்னர் அங்கிருந்து தப்பிச்சென்ற பிரபல பாதாள உலகத் தலைவர் ஆமி சுரங்கவும் அவரது சகாக்கள் இருவரும் செவனகல காட்டில் வைத்து நேற்றுமுன்தினம் அதிகாலை கைதுசெய்யப்பட்டனர்.

கடந்த திங்கட்கிழமை எம்பிலிப்பிட்டிய நீதிமன்றுக்கு விசாரணைக்காகத் தங்காலை சிறைச்சாலையிலிருந்து இவர்கள் அழைத்துவரப்பட்டிருந்த வேளையில் தப்பிச்சென்றிருந்தனர்.

(க-10)

## அன்புவாழ்வை மலரச் செய்வோம்

**தவக்காலச் சிந்தனை**

தவக்காலம் மனம் திரும்புதலுக்குக்கான காலமாகும். நாம் இதுவரை புரிந்த தவறுகள், பாவங்களைவிட்டு நல்லதைச் செய்யமுயலுவோம் என்ற உறுதியை எடுத்துக் கொள்ளும் காலமாகும். எமது தவறான போக்குகளைத் திருத்திக் கொண்டு இறைவனின விருபபப்படி நாம் வாழ எமது வாழ்க்கையை அமைக்க முயற்சிககும் காலமாகவும் இது உள்ளது.

யேசு கிறிஸ்துநாதர் பாவம் சூழ்ந்த காலத்தில் பாவிகளை இரட்சிக்கவே மனுமகனாகப் பிறந்தார். பாவங்களை வெறுத்தார். ஆனால், பாவிகளை அவர் மன்னித்து மனம் திருந்தியவர்களை ஏற்றுக்கொண்டார். உன்னைப்போல் உன் அயலானை நேசி. உங்களுக்குப் பிறர் என்னென்ன செய்யவேண்டும் என்று விரும்புகிறீகளோ அவற்றையெல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இறைவாக்குகளும் திருச்சட்டமும் இதுவே. (மத் 8:12)

எனவே, இத்தவக்காலத்தில் நாம் செபம், தவம் மற்றும் தானதர்மங்கள் மூலம் எமது வாழ்வை மாற்ற முயற்சிக்கவேண்டும். இதன் மூலம் அன்பு நிறைந்த, பண்பு நிறைந்த, ஒழுககம் நிறைந்த ஒளிமயமான சமுதாயம் மலர நாம் பாதை சமைப்போமாக!

**பதினேழாம் நாள்**

எஸ்.ஞானசீலன்,
குருநகர்.


## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ)

**வெதுப்பகம் போறணை வாஸ், மேசை வாஸ் தேவை**

எமது சங்கத்தால் நடத்தப்படும் வெதுப்பகத்துக்குப் போறணை வாஸ், மேசை வாஸ் ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானோர் காரியாலய வேலை நேரத்தில் நேரடியாக எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

**விண்ணப்ப முடிவு திகதி:**
**05-03-2005ஆம் திகதி நண்பகல் 12.00மணிக்கு முன்னர்.**

க.இராசதுரை
பொதுமுகாமையாளர்.

(சி.41135)(46-11-42)


## துடுப்பாட்டப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.25

வலி. மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டப் போட்டி நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை வட்டுக்கோட்டை வை.எம்.எச்.ஏ.மைதானத்தில் நடைபெறவுள்ளது.

போட்டியில் கலந்துகொள்கின்ற சகல விளையாட்டுக் கழகங்களையும் குறித்த நேரத்துக்கு சமுகமளிக்குமாறு விளையாட்டு உத்தியோகத்தர் செல்வி ரி.சந்திரமதி கேட்டுள்ளார்.

(10-175-190)


## வெற்றிடங்கள்

கொழும்பில் உள்ள பிரபல பத்திரிகை நிறுவனத்தில் பணிபுரிவதற்குப் பின்வரும் பதவிகளுக்குத் தகுதியும் பொருத்தமும் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கணக்குப்பகுதி எழுதுவினைஞர்கள் (இருவர்)**

க.பொ.த.(உயர்தர) பரீட்சையில் கணக்கியலுடன் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். கணக்கியல் பயில்பவர்களும் விரும்பப்படுவர். கணனி அறிவு அவசியம். அனுபவத்திற்கு ஏற்பச் சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**ஒப்புநோக்குநர்கள் (மூவர்)**

க.பொ.த.( உயர்தர ) பரீட்சையில் தமிழில் சிறப்புத் தேர்ச்சியுடன் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். பத்திரிகைத்துறையில் ஆர்வம் உள்ளவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும். முன் அனுபவம் இல்லாதவர்களுக்கு ஒருவருட காலப்பயிற்சி வழங்கப்படும். பயிற்சியின் பின்னர் ஆகக்குறைந்தது ஒரு வருட மேனும் பணி செய்வதற்கு உத்தரவாதம் வழங்க வேண்டும்.

இரண்டு பதவிகளுக்கும் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். தெரிவுசெய்யப்படுவோருக்குக் கொழும்பில் தங்குமிட வசதி செய்யப்படும்.

கல்வித்தராதரச் சான்றிதழ்கள், கிராமசேவை அலுவலரின் வதிவிடச்சான்றிதழ், உறவினர் அல்லாத மதிப்புமிக்க இருவரின் நற்சான்றிதழ்களுடன் இன்று (25.02.2005) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு - யாழ்ப்பாணம், 361, கஸ்தூரியார் வீதியில் உள்ள உதயன் கேட்போர் கூடத்துக்கு நேரில் சமுகந்தரவும்.


## கரப்பந்தாட்டம்

தென்மராட்சி,பெப்.25

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்டக் கரப்பந்தாட்டப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

15 வயது, 17 வயது, 19 வயது ஆகிய பிரிவுகளுக்கிடையே இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

(3-202-117)


## முகவர்கள் தேவை

**உங்கள் நகரில்!!!**

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட எமது Mobitel ஸ்தாபனத்திற்கு தகுந்த Sub dealers தேவை

Mobile Lanka
ATLAS TELECOM

இங்கே!
1)More Card 350/=, 1000/=
2)Pre paid Sim
3)Post paid Sim 300 / 100 } package

விசேட விலைக்கழிவுடன் யாவும் எமது ஸ்தாபனத்தில் பெற்றுக்கொள்ளலாம். விரும்புவோர் நேரிலோ, தொலைபேசி மூலமோ தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
ATLAS TELECOM,
MOBILE LANKA,
No.412,HOSPITAL ROAD, JAFFNA.
TP.222 2031, 222 2032.

Mobitel AUTHORIZED DEALER FOR

- நிர்வாகி.


## கண்ணாடித் தொழிற்சாலை தொழிலாளர் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.25

நீர்வேலி சேவி கண்ணாடித் தொழிற்சாலை பாதிக்கப்பட்டோர் ஊழியர்களின் பொது அமைப்பின் கூட்டம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோயில் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

(3-202)


## வெற்றிப் பாதையில்...



18 plus Savings Account

புலமைப்பரிசில் 2004

**திட்டம் 1**
**20 புலமைப்பரிசில்கள்**

2004 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் ஒவ்வொரு பிரிவிலும் உயர் புள்ளிகளைப் பெற்று இலங்கை பல்கலைக்கழகம் ஒன்றுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள முதல் 5 மாணவர்களும் ரூபா. 30,000/- பெறுமதியான புலமைப்பரிசில் வழங்கப்படும். ஆயினும் அவர்கள் 18 பிளஸ் தகுதிகளை பூர்த்தி செய்யவேண்டும்.

**திட்டம் 2**
**66 புலமைப்பரிசில்கள்**

2004 ஆம் ஆண்டு உயர்தரப்பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு இலங்கைப் பல்கலைக்கழகம் ஒன்றுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மேலும் 66 மாணவர்கள், தலா ரூபா. 30,000/- பெறுமதியான புலமைப்பரிசிலைப் பெறுவார்கள் 18 பிளஸ் தகுதிகளைப் பூர்த்தி செய்தோரின் மத்தியில் மேற்கொள்ளப்படும் சீட்டிழுப்பின் மூலம் இவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

**தகுதி**

மேற்கூறிய இரண்டிலும் ஒன்றுக்கு தகமை பெறுவதற்கு ஒரு மாணவன் 18 பிளஸ் கணக்கொன்றை பேணுவதுடன் 2004 ஜனவரி 1 முதல் டிசம்பர் 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் ரூபா. 5,000/- கணக்கு மீதியை கொண்டவராகவும் இருக்க வேண்டும்.

முழு பெயர் :
முதற் பெயர் :
நிரந்திர முகவரி :
தொலைபேசி இல :
18+ கணக்கு இல :
வங்கிக்கிளை :
தேசிய அடையாள அட்டை இல :
க.பொ.தா உயர்தரப் பரீட்சை சுட்டிலக்கம் :
பல்கலைக்கழகம் :
நாடளாவிய ஸ்தானம் :
க.பொ.தா உயர்தரப் பரீட்சை பிரிவு :
(கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம் அல்லது கலைப்பிரிவு)
திகதி: கையொப்பம்

விபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் அனுப்பவும்.

முகாமையாளர்
சந்தைபடுத்தல் மற்றும் வியாபார அபிவிருத்தி
16வது மாடி, இலங்கை வங்கி தலைமை
காரியாலயம், கொழும்பு - 01.

விண்ணப்பத்திற்கான இறுதித் திகதி 2005 மார்ச் 31
(குறிப்பிட்ட திகதிக்கு பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டாது)

மேலதிக விபரங்களுக்கு இன்றே அருகிலுள்ள இலங்கை வங்கிக் கிளையை நாடுங்கள்

BOC
இலங்கை வங்கி
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி

18+ புலமைப்பரிசில் முடிவுகளைப்பற்றி இறுதி தீர்மானம் இலங்கை வங்கி முகாமைதுவத்தினால் எடுக்கப்படும்.

Twin Advertising

# 'இடைக்கால அதிகாரசபை' என்பதை விடுத்துப் புலிகளுடன் 'இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை' குறித்துப் பேசுக!

## அரசை வற்புறுத்துகின்றார் மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன்

'இடைக்கால அதிகாரசபை' என்ற அடிப்படையில் பேச்சு நடத்துவதற்கு அரசு முன்வந்திருப்பது அது தனது நிலைப்பாட்டில் தடுமாற்றத்திற்கு உள்ளாகி வருவதையே எடுத்துக்காட்டுகிறது என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பெ. சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் 'இடைக்காலத் தன்னாட்சி அதிகாரத்தையே' தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றார்கள்.

'இடைக்கால நிர்வாகம்' பற்றிப் பிரஸ்தாபிக்கவே இல்லை. எனவே, அரசின் இந்த அறிவிப்பு உலக நாடுகளிடம் வேசம் போடுகின்ற கபட நாடகமாகவே அமையும்.

எனவே, 'இடைக்காலத் தன்னாட்சி அதிகாரம்' என்பதைப் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டு பேச்சு ஆரம்பிக்கின்ற தைரியத்தை அரசு பெற வேண்டும். எப்படியாயினும், அரசின் தற்போதைய அறிவிப்பு புலிகளின் கொள்கை ரீதியான உறுதியான நிலைப்பாட்டிற்கும் ஆழிப்பேரலை அனர்த்தத்திற்குப் பிறகு பாரபட்சம் இல்லாத நேர்மையான நிர்வாகத் திறமைக்கும் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

அரசின் இம்முடிவைக் கொச்சைப்படுத்தி விமர்சிக்க அரசியல்சக்திகள் முயலக்கூடும். ஆனால், தற்போது ஏற்பட்டுள்ள சாதகமான அரசியல் சூழலை இனவாதத்திற்கு விலையாகக் கொடுத்துவிடாமல் இருப்பது ஜனாதிபதியின் 'கடமையும், பொறுப்புமாகும்.

அரசின் இந்த அறிவித்தல் வெளி உலகைத் திருப்திப்படுத்துவதற்கானதாகவோ, உலக நாடுகளின் உதவிகளைப் பெறுவதற்கான இராஜதந்திர அணுகுமுறையாகவோ அமைந்துவிடக்கூடாது.

அவ்வாறான நிலைமை ஏற்பட்டால் விடுதலைப் புலிகளின் நம்பகத் தன்மையை உலக நாடுகள் புரிந்துகொள்வதற்கு இன்னொரு சந்தர்ப்பமாகவே அது அமையும். இதன்மூலம் புலிகளின் கை மேலோங்குவதும் நிச்சயமானதாகி விடும்.

எனவே, அரசு இந்த முடிவினைத் தற்காலிக காய்நகர்த்தலாகக் கருதாமல் தொலைநோக்குப் பார்வையுடனான அரசியலில் நிரந்தரமான நிலைப்பாடாக அமைத்துக்கொள்ள உறுதி எடுக்க வேண்டும்.

20 வருட கால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், நாட்டின் நலனைப் பாதுகாப்பதற்கும் இந்தச் சந்தர்ப்பத்தை அரிய வாய்ப்பாக அரசு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

- இப்படி மலைய மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் மேலும் தெரிவித்தார்.

(க-10)



நல்லூர் றோட்டறக்ட் கழகத்தின் 4 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கழக உறுப்பினர்கள் அண்மையில் யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் இரத்ததானம் செய்தபோது எடுக்கப்பட்ட படம். (3-203)

# நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அரசியல்வாதிகள் ஒத்துழைக்க வேண்டும்

## நோர்வேயின் விசேட தூதுவர் வலியுறுத்து

இலங்கையில் சமாதானம் ஏற்படுவதற்கு அரசியல் தலைவர்கள் முன்னின்று செயற்பட வேண்டும். சமாதானத்தை மலரச் செய்வதற்கு மக்களின் உந்துசக்தி மற்றும் அழுத்தங்கள் அவசியம்.

- இவ்வாறு இலங்கைக்கான நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு மூன்று வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற வைபவத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சமாதானத்தை விரும்பும் இலங்கையர்களின் ஒத்துழைப்பு இன்றி அரசியல் கட்சிகளின் தலைவர்களோ, விடுதலைப் புலிகளோ இந்த இலக்கை அடையமுடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

தேசிய சமாதான சபையின் சிவில் அமைப்புகளும் இணைந்து ஏற்பாடு செய்த இவ்வைபவத்தில் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள், வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகள், மதத்தலைவர்கள், சிவில் சமூகப்பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-3)

# இலங்கை வாகனச் சாரதி ஈராக்கில் சுட்டுக்கொலை!

## அமெ.தளத்துக்கு ஆயுதம் ஏற்றிச்செல்கையில் சம்பவம்

கொழும்பு,பெப்.25

ஈராக்கிலுள்ள அமெரிக்க இராணுவத் தளமொன்றுக்கு ஆயுத தளபாடங்களை ஏற்றிச் சென்ற வாகனச் சாரதியான இலங்கையர் ஈராக்கிய தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். பிரசன்ன ரோஹண பெரேரா என்பவரே கொலலப்பட்டவராவர். அவரது சடலத்தை மீட்டுத் தருமாறு அவரது மனைவி தீபா பெரேரா அரசிடம் கோரியுள்ளார்.

பன்னிப்பிட்டிய, பெலவத்தையை வசிப்பிடமாகக் கொண்டவர் பிரசன்ன ரோஹண பெரேரா. 2003ஆம் ஆண்டு செப்டெம்பர் 17ஆம் திகதி சவூதி அரேபியாவில் உள்ள நிறுவனமொன்றுக்கு கனரக வாகனச் சாரதியாகத் தொழில் பெற்றுச்சென்றார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான அவர் ஈராக்கிலுள்ள அமெரிக்கத் தளத்துக்கு ஆயுத தளபாடங்கள் எடுத்துச்செல்வதற்கு முன்னர், இலங்கையில் தனது மனைவியுடனும், பிள்ளையுடனும் தொடர்புகொண்டு இதுகுறித்துக் தெரிவித்துள்ளார்.

இவர், கனரக வாகனத்தில் சவூதி அரேபிய எல்லையைக் கடந்து ஈராக்கை அண்மித்துகொண்டிருந்தபோது ஈராக்கிய படைகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றுக்கொண்டிருந்துள்ளது. இதன்போதே தீவிரவாதிகள் ரோஹண பெரேரா சென்ற வாகனம் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். படுகாயமுற்ற அவரை அமெரிக்க இராணுவத்தினர் தமது வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்று தீவிர சிகிச்சை மேற்கொண்டனர். எனினும், அவரைக் காப்பாற்ற முடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 11ஆம் திகதி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இவர் 13ஆம் திகதியே மரணமாகியுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. ரோஹண பெரேராவுடன் கனரக வாகனத்தில் பயணித்த மற்றும் இரு இலங்கையர்கள் இந்தச் சம்பவத்தில் உயிர்தப்பியுள்ளனர்.

ரோஹண பெரேராவின் சடலத்தை இலங்கைக்குக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை வெளிவிவகார அமைச்சு மேற்கொண்டுள்ளது.

சவூதி அரேபியாவில் இருந்தும் குவைத்தி இருந்தும் ஈராக்கிலுள்ள அமெரிக்கத் தளங்களுக்குப் பொருள்களை ஏற்றிச்செல்லும் சாரதிகளுக்கும், உதவியாளர்களுக்கும் அதிக சம்பளம் வழங்கப்படுவதால் குறைந்த வருமானம் பெறுபவர்கள் உயிரையும் துச்சமென நினைத்துப் பணியாற்றுகின்றனர் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (க-3)

# வாசகர் திருமுகம்

## கைத் தொலைபேசி மூலம் இணைப்புப் பெறுவது சிரமம்

காலத்தின் தேவை அதிகரிக்கும்போது நாமும் மாற்றம் பெற்றேயாகவேண்டும். அந்த மாற்றம் இன்று யாழ்ப்பாணத்தின் மூலைமுடுக்கெல்லாம் பரவிட்டது.

அந்தவகையில் இன்று தொலைபேசிப் பாவனை என்பது, யாழ். மக்களின் இன்றியமையாத தேவையாகிவிட்டது. வீட்டுக்கொரு வாசல்போல வீட்டுக்கொரு தொலைபேசியாக இன்று அனைத்து வீடுகளிலும் கைத்தொலைபேசி வந்துவிட்டது. அதிலும் செல்போன் இல்லாத இளைஞர், யுவதிகளை விரல்விட்டே எண்ணிவிடலாம் போலுள்ளது.

யுத்தத்தினால், அழிந்து போயிருந்த எமது யாழ்ப்பாணம் மீளக்கட்டியெழுப்பப்படும் வேகத்தைவிட தொலைபேசி போன்ற சாதனங்களின் வருகையின் வேகம் அதிகம் என்றே சொல்லவேண்டும்.

தொலைபேசிப் பாவனை அதிகரிக்கும்போது அதற்கான இணைப்புகளை வழங்கும் நிறுவனங்களும் நாளுக்குநாள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன.

இவற்றில் குறிப்பிடக்கூடிய தனியார் செல்போன் இணைப்பு நிறுவனமொன்றின் மூலம் பயன்பெறும் பயனாளி என்ற வகையில் அதிலுள்ள சில குறைபாடுகளையும் சுட்டிக்காட்ட முனைகின்றேன்.

வரையறையில்லாத பாவனையாளர்களை இந்த நிறுவனம் இணைத்துக்கொண்டுள்ளமையால் வாடிக்கையாளர்களாகிய நாங்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றோம்.

குறிப்பாக, இரவு நேரங்களில் அவசர இணைப்புகளைக் கூட எம்மால் உடனடியாகப் பெறமுடியவதில்லை. இது பல மாதங்களாகத் தொடர்வதுதான் எமக்கு மிகவும் சிரமத்தைத் தருகின்றது.

முழுமையான இணைப்பு சமிக்ஞைகள் இருந்தும் தொடர்பு கிடைப்பதில்லை. இரவிலேயே இந்நிலை தொடர்கின்றது. சிலவேளைகளில் சமிக்ஞைகளும் முற்றாக இல்லாது போய்விடுகின்றன. அத்துடன், இணைப்புக் கிடைத்து நாம் உரையாடிக் கொண்டிருக்கும்போது திடீர் திடீர் என இணைப்பு நிறுத்தப்படுவதால் நாம் மீண்டும்மீண்டும் தொடர்பு ஏற்படுத்த வேண்டிய தேவையுள்ளது. அதிலும் இணைப்புக் கிடைக்காத பட்சத்தில் எம் உரையாடல்களும் இடைநிறுத்தப்படும் நிலையிலுள்ளது.

எனவே, குறிப்பிட்ட நிறுவனம் தனது குறைகளை உணர்ந்து சேவையைத் திருத்தியமைக்க முன்வரவேண்டும்.

பாவனையாளர்களின் தேவைக்கேற்பச் செயற்படுவதே ஒரு நிறுவனத்தின் கடமை என்பதை உணர்ந்து செயற்படுமா அந்நிறுவனம்?

**எஸ்.மதுமிதா**
**யாழ்ப்பாணம்.**

## சட்டவிரோதமாக மண், கற்கள் அகழ்வு

மேற்படி விடயம் சார்பாக இடைக்காடு கிராமத்திற்குக் கிழக்குப் புறமாகவுள்ள தொண்டைமானாற்றின் மேற்குக் கரையோரத்தில் சட்டவிரோதமான முறையில் கற்கள், மணல்கள் என்பன அகழப்பட்டு வருகின்றன. கடந்த வாரம் சமுர்த்தி திட்டத்தின் கீழ் தம்பாலை, கதிரிப்பாய் கிராம அலுவலர் பிரிவிலுள்ள ஒரு வீதியைப் புனரமைக்கவென ஏறத்தாழ 40 டிராக்டர் அளவுடைய மண் கடற்கரையில் அகழப்பட்டுள்ளது. இதன் காரணமாகப் பெரிய கிடங்கு ஒன்று கடற்கரையிற்கு அண்மையில் ஏற்பட்டுள்ளது. 07.02.2005 ஆரம்பமான இந்நிகழ்வு குறித்து கிராம அலுவலருக்கும் பிரதேச செயலருக்கும் அறிவிக்கப்பட்டது. மறுநாளும் இந்நிகழ்வு தொடரவே கிராம அலுவலரை அழைத்து வந்து இது நிறுத்தப்பட்டது. எனினும், மறுநாள் மீண்டும் ஆரம்பமாகியது. இது குறித்து கிராம அலுவலர், பிரதேச செயலர் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டிருந்தும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை. மண் ஏற்றுவது தடை செய்யப்படும் என்று பிரதேச செயலகத்தில் கூறப்பட்ட பின்னரும் கூட மண் அகழும் பணி 10.02.2005 வரை தொடர்ந்து இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது. சுனாமி ஆழிப்பேரலையின் பின்னர் கடற்கரையிலிருந்து மண் போன்றவை அகழ்தல் தடைசெய்யப்பட்டிருந்தும் கூட மேற்படி பிரதேச செயலகத்தினால் மண் அகழ்வதற்குப் பொருத்தமான இடம் சுட்டிக்காட்டப்படாது வெறுமனே 30 கியூப் மண் அகழ்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பெரிய கடற்கரையிற்கு அண்மையில் இருக்கும் மேற்படி பிரதேசத்தில் மண் அகழ்வதைத் தடைசெய்து குறைந்தது பாக்குநீரிணையிலிருந்து 3 மைல்களிற்கு அப்பால் (வல்லை வெளியிற்கு அப்பால்) மண் அகழப்பொருத்தமான இடத்தை வழங்கும்படி பிரதேச செயலரைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன். குறித்த மண் அகழும் நிகழ்வானது எமது கிராம நிலங்களைத் தரிசாக்குவதுடன், கடலை தொண்டைமானாறு - அச்சுவேலி வீதியிற்கு அண்மையில் கொண்டுவரும் அபாயம் உள்ளது. தொண்டைமானாறு பாலம் உடைந்த நிலையில் இப்பகுதியினூடாகவே கடல்வழியாக மக்கள் தொண்டமானாறு செல்வச்சந்நிதியிற்குச் சென்றுவருகின்றார்கள். பொருத்தமான இடத்தைத் தெரிவுசெய்து வழங்குவதுடன், நிரந்தரமாக இப்பகுதியில் மண் அகழ்வதைத் தடைசெய்யப் பிரதேச செயலர் உட்பட அனைத்துத் தரப்பினரும் நடவடிக்கை எடுப்பார்களா?

**- க.பரணிதரன்**
**இடைக்காடு.**

## கலாசாரச் சீர்கேட்டினை கவனிப்பார் எவரோ?

பல்துறை வளங்களாலும் விருத்தியடைந்து வருகின்ற ஒரு சிறிய கிராமம் எங்களுடையது. கல்வி, கலாசாரம் இவைகளால் பாதிப்புறாத வகையில் வளர்ந்து வரும் எமது கிராமத்தில் அண்மைக்காலத்தில் முளைவிட்டுள்ள கலாசாரச் சீர்கேடுகளால் இங்கு வாழும் மக்கள் நிம்மதி இழந்து வாழ்கிறார்கள்.

விவசாயத்தையும், உடலுழைப்பும் நம்பி வாழும் எமது மக்களின் அமைதியைக் குலைக்கும் வகையில் அங்கு தோன்றியுள்ள மதுபானப் பிரியர்களின் நடமாட்டத்தால் மக்கள் அச்சத்தினால் அடங்கிப்போயுள்ளனர்.

மாலைவேளைகளில் அனுமதிபெறாத மதுபான விற்பனை அதிகரித்துள்ளது. மாணவர், இளைஞர், வயோதிபர் தமக்குள் வயது வேறுபாடின்றி மது அருந்தி நிற்கின்றனர். இந்த சட்ட விரோத மதுபான விற்பனையால் வளர்க்கப்பட்டுவரும் மது அருந்துவோர் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரிக்கின்றது. அவர்கள் வீதிகளிலும் வீதியோரங்களிலும் நின்றும், இருந்தும், விழுந்தும் கிடப்பதுடன் தகாத கெட்டவார்த்தைகளால் புலம்பித்திரிவதையும் காணமுடிகின்றது. இவர்களின் வெறியாட்டத்தால் சீர்கெட்டுள்ள எமது கிராமத்தைச் சீர்செய்ய வலுவுள்ளோர் யாவரும் முன்வரவேண்டும் எனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தச் சட்டவிரோத மதுபான விற்பனைக்கு அயலில் கிராம நலனில் அக்கறைகொண்டு செயற்படவேண்டிய சனசமூக நிலையங்கள் இரண்டு உள்ளன என்பதும் இங்கு குறிப்பிட்டுக் கூறக்கூடியவையாகும்.

ஏற்கனவே, அனுமதிபெறாத இந்த மதுபான விற்பனை நிலையம் பிரதான வீதியில் அமைந்திருந்தது. அது தற்பொழுது கிராமத்தின் மத்தியில் நிரந்தர மதுபான விற்பனை நிலையமாக வேர்கொண்டு பிரதான வீதி மதுப்பிரியர்களுக்கு நடமாடும் மதுபான சேவையை வழங்கி வருகினதென அறியப்படுகின்றது. இதனைத் தடுக்கும் வலுவுள்ள பொலீஸாரும் இதில் கவனம் செலுத்தாமல் இருப்பதைக்கண்டு எமது மக்கள் விசனமுற்றுள்ளனர். பள்ளி செல்லும் மாணவர்களும் பெண்களும் இதனை யாரிடம் சொல்லித் தீர்வு பெறலாம் எனத் தெரியாமல் அங்கலாய்க்கின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் கவனம் செலுத்தி எமது கிராமம் சீர்பெற உதவ வேண்டும் என அப்பிரதேச வாசி என்றவகையில் பணிவுடன் வேண்டி நிற்கின்றேன்.

**நலன்விரும்பும் கிராமவாசி.**
**சர்வோதய வீதி, ஆவரங்கால்.**

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



உதிப்பு 02 02 1923

உதிர்வு 27 01 2005

அமரர்
## கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்
(மூத்தப்பா மணியம்)

அன்புடனும் பண்புடனும் அரவணைத்த எம் தெய்வத்தின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

2005.01.27 அன்று எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை(26.02.2005) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எருவன் சந்தி,
வரணி இயற்றாலை, கொடிகாமம்.

-குடும்பத்தினர்.

(C-41120)

# நினைவலைகள்

முதலாம் ஆண்டு



திருமதி
## மைதிலி கலை அரசன்

தோற்றம் 30-06-1959 மறைவு 07-03-2004

இரண்டாம் ஆண்டு



திருமதி
## பராசக்தி சபாநாயகம்

தோற்றம் 27-03-1929 மறைவு 16-06-2003

எங்கள் நல்வாழ்வே உங்கள் இலட்சியமாக
நாளும் பொழுதும் எமக்காகப் பாடுபட்டு
எம்மை வழி நடத்திய எங்கள் அன்புத் தெய்வங்களே !
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்தாலும் உங்கள்நினைவுகள் எம் நெஞ்சங்களில் நிலைத்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம்வல்ல பரம்பொருளை
இறைஞ்சுகின்றோம் .

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

புில் ஒழுங்கை,
மல்லாகம் .

- குடும்பத்தினர்.

(42232)


வாங்குங்கள்

# DSI

மோட்டார் சைக்கிள் டயர்களை

## வெல்லுங்கள்



புதிய ரக
10 SUZUKI EN 125
மோட்டார் சைக்கிள்கள்,
மற்றும் 100 ஒட்டுநர் மேலங்கிகளை.

விரையுங்கள்; உங்கள் வெற்றி, உங்கள் கையில்!

**இச் சலுகை 2005 ஏப்ரல் 15 வரை மட்டுமே செல்லுபடியாகும்**

DSI மோட்டார் சைக்கிள் டயர்களை வாங்குங்கள். அதன்மூலம் 10 புதிய ரக சுசுகி EN 125 மோட்டார் சைக்கிள்களை வெல்லுவதற்கான சந்தர்ப்பத்தினைப் பெறுங்கள். அத்துடன் வேறும் பல தரம்மிக்க 100 ஓட்டுநர் மேலங்கிகளை ஆறுதல் பரிசில்களாக வென்றெடுங்கள்.

நீங்கள் ஒரு DSI மோட்டார் சைக்கிள் டயரினை வாங்கும்போது, அதனது உத்தரவாத அட்டையை நிரப்பி, கீழ்வரும் முகவரிக்கு தபாலில் இடுவதன் மூலம், இப்போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பைப் பெறுவீர்கள்.

நிபந்தனைகள் -
- சாம்சன் றபர் இண்டஸ்றீஸ் (பிரைவேட்) லிம்டெற் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய குடும்ப அங்கத்தவர்களுக்கும் இது ஏற்புடையதல்ல
- வெற்றி பெறுபவர்கள் தமது அடையாளத்திற்கான ஆதாரத்தை சமர்ப்பிக்கக் கூடியதாய் இருக்க வேண்டும்.

DSI
இலங்கையின் முன்னணி மோட்டார் சைக்கிள் ரயர்,
எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

DSI 20 ஆண்டுகளில்

உங்கள் வியாபாரியிடம் மேலதிக தகவல் களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

அகன்ற பல வகை, தரம்மிக்க மோட்டார் சைக்கிள் டயர்களிலிருந்து தெரிவு செய்யுங்கள்.

ISO 9001-2000 சான்றுப்படுத்தப்பட்டது.



CSL



சாம்சன் றபர் இண்டஸ்றீஸ் (பிரைவேட்) லிமிற்றெட்
ஜினசேன மாவத்தை, மகர, கடவத்தை
Tel: (011)2 926065, (011)4 816442
Fax: (011)2 925064, (011)4 816440
E-mail: dsityre@dsityre.lk www.dsityre.com

# ஒழுக்கமே எல்லா வெற்றிகளையும் வலிமைப் படுத்திப் புடம்போடும்.....!

**கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா அண்மையில் கல்லூரியில் நடைபெற்றது. அந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா**

**ஆற்றிய உரையின் முதற்பகுதி இது.**

இன்று பரிசுகளைப்பெறத் தகுதிபெற்றவர்களை மனதார வாழ்த்துகின்றேன். நீங்கள் கரிசனையுடன் கடுமையாக உழைத்து உங்கள் திறமைகளை வெளிப்படுத்தி வெற்றி பெற்றுள்ளீர்கள். நீங்கள் பெற்ற வெற்றிக்கு நங்கள் தகுதியுடையவர்களே. உங்கள் கடுமையான உழைப்பைத் தொடர்ந்து கவனமாகப் பேணிப் பாதுகாத்து வாருங்கள். உங்கள் கல்லூரி வாழ்க்கையை நிறைவு செய்து வெளியேறும்போதும் இந்த வெற்றிகளைப்பெற விடா முயற்சியுடன் பாடுபடுங்கள். இன்று பரிசுகளைப் பெறத் தகுதிபெறாதவர்களுக்கும் ஒரு செய்தி உண்டு. பரிசுகளைப்பெறத் தகுதியுடையவர்களுக்கும் உங்களுக்கும் இடையேயுள்ள இடைவெளி அதிகம் அல்ல. தன்னம்பிக்கையுடன் சீரான கடின விடாமுயற்சியுடன் செயற்படுவதன் மூலம் இந்த இடைவெளியை நீங்கள் நிரப்ப முடியும். 2ஆம் உலக மகா யுத்தத்தில் சின்னாபின்னமாகத் தாக்கப்பட்டு அணுகுண்டுகளால் சீரழிந்த ஜப்பான் தேசம் அடுத்த மூன்று தசாப்தங்களுக்குள் உலகத்திலேயே சிறந்த தொழில்நுட்ப நாடாகவும், வல்லரசுகளுக்கு கடன் வழங்கக்கூடிய செல்வந்த நாடாகவும் விளங்கக் காரணம் ஜப்பான் மக்களின் விடாமுயற்சியும் தன்னம்பிக்கையுமே என்பதை உணரவேண்டும். விடாமுயற்சி இல்லாதுவிட்டால் சாதாரண பண்ணையாள மகன நியூட்டன் புகழ்பூத்த விஞ்ஞான மேதையாகி இருக்க முடியாது. தெரு விளக்கில் கல்வி கற்ற ஆபிரகாம் லிங்கன் அதிசக்தி வாய்ந்த அமெரிக்க நாட்டின் ஜனாதிபதி ஆகியிருக்க முடியாது.

### மூன்று விடயங்கள்

இனி எனது உரையில் முக்கிய பகுதிக்கு வருகின்றேன். உங்கள் கல்லூரியின் குறிக்கோள் "உண்மையே உயர் அறம்" என அறிகின்றேன். கல்லூரிகளைப் பொறுத்தவரையில் 03 விடயங்கள் அதன் கடமைகளுள் முதன்மையானதும் முக்கியமானதும் எனக் கருதுகின்றேன்.

01. சிந்தித்துச் சொல்லப்படும், செய்யப்படும் அற்புதமான பண்பாடு என வரைவிலக்கணப்படுத்திய சமூக பண்பாட்டை மாணவருக்கு ஊட்டுவித்தல் -

02. சமூகப்பணியினாலும் மாணவர்கள் ஊடாகவும் சமுதாயத்தை மாற்றி அமையச் செய்தல் -

03. விஞ்ஞான தொழில்நுட்பத் தாக்குதலால் விரைவாக மாற்றமுற்றுவரும் சமுதாயத்தில் சீராக வாழ்வதற்கு மாணவர்களை ஆயத்தப் படுத்தல் -

கல்லூரிகளின் முதலாவது கடமை முக்கியமானதாகும். கடந்த காலத்தில் திரட்டப்பட்ட மெய் அறிவைக் கற்பதற்கு மாணவர்கள்:-

அ. வரலாறு, புவியியல், இலக்கியம், ஒருவருடைய சரித்திரம் (Biography), மனோ தத்துவ சாஸ்திரம் (Psychology) போன்றவற்றைக் கற்பதன் வாயிலாக அறிவை தேடிக் கொள்ளல்.

ஆ. செயற்திறன்களைக் கற்றல்: பேசுதல், எழுதுதல், மேம்படுத்துதல், உடலைப் பயன் படுத்துதல்.

இ. நாகரிக மனிதனின் சில அடையாளங்களான பழக்கங்கள், பெறுமானங்கள், இலட்சியங்கள் ஆகியவற்றைக் கற்றல்.

இவ்விடயத்தில் முக்கியமானவை எனக் கற்றறிந்த அறிஞர்கள் கண்டறிந்த முப்பொருளகளாவன.-

01. விளையாட்டுப் பெருந்தன்மை. (Sportsmanship)

02. ஒழுக்கம் பேணல். (Discipline)

03. பெறுமான உணர்வு. (Right values)

விளையாட்டுப் பெருந்தன்மை என கூறும் போது அது. நடுவு நிலைமை, தன்னடக்கம், குறை காணாது தோல்வியை ஏற்றுக்கொள்ளல் எனப் பொருள்படும்.

### விளையாட்டின் பெரும் தன்மை

இன்று பலரால் பல விளையாட்டுக்கள் விளையாடப்படுகின்ற போதிலும் விளையாட்டுப் பெருந்தன்மை அற்பமாகவே தென்படுகின்றது. ஒரு விளையாட்டில் யார் வென்றாகள் என பதிலும் பார்க்க அந்த விளையாட்டு எவ்வாறு விளையாடப்பட்டது என்பதே முக்கியமாகக் கருதத்துக்கு எடுக்கப்படவேண்டியதாகும் உதாரணமாக, 1934 ஆம் ஆண்டு ஜேர்மன் தேசத்தில் உள்ள பேர்லின் நகரில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. அந்தப் போட்டியில் நீளம் பாய்தலில் அமெரிக்க நீக்குறோவான ஜெசி ஒவன்ஸ் (Jesse Owens) உம் ஜேர்மன் நாட்டவா ஒருவரும் இறுதிப் போட்டிக்குத் தெரிவானார்கள். இறுதிப் போட்டியில் ஜேர்மன் நாட்டவருக்கு உற்சாகம் ஊட்டுவதற்குப் பலர் இருந்தார்கள். ஆனால், ஜெசி ஒவன்ஸ"க்கு எவரும் இன்றித் தனியாளாக நின்றார். அவருடைய போட்டியாளரான ஜேர்மன் நாட்டவர் ஜெசி ஒவன்ஸ்ஸைத் தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்தினார். போட்டியின் இறுதியில் ஜெசி ஒவன்ஸ் வெற்றி வாகை சூடினார். அங்கு சமூகமாகி இருந்த ஜேர்மன் நாட்டின் சர்வதிகாரி ஹிட்லர் ஏமாற்றமும் மனவருத்தமும் அடைந்து அந்த இடத்தைவிட்டு வெளியேறிச் சென்றார். ஆனால், ஜேர்மன் போட்டியாளன், ஜெசி ஒவன்ஸ"க்கு நல்வாழ்த்துக்கூறி, தமது கையை ஜெசி ஒவன்ஸ்ஸின் தோளில் போட்டு விருந்துக்கு அழைத்துச் சென்றார. இதுதான் விளையாட்டுப் பெருநதன்மை ஆகும். ஜேர்மன் போட்டியாளரின் விளையாட்டுப் பெருந்தன்மை நிலைக்கு எமது மாணவர்களும் வரமுடியும் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கை உண்டு. எனவே, எமது மாணவர்கள் இதைத் தமது வாழ்க்கையில் ஒரு குறிக்கோளாகக் கொள்ளவேண்டும்.


### ஒழுக்கம் பேணல்
(Discipline)

இச்சொல் சிலருக்குச் சட்டங்களாகவும் தண்டனையாகவும் தென்படும். அது எதிர்மறை பக்கமாகும். (That is negative side) உடன்பாட்டு வகையில் (Positively) திறமையாகக் கற்றலுக்கான காரணிகள் எனப் பொருள்படும். கற்பவாகள் பாடங்களுக்கு சமுகம் அளிப்பதில் நேரம் தவறின் அல்லது கிரமம் தவறின் அல்லது பணியில் சோர்வடையின் சீரான கற்றல் நிகழமுடியாது.

சமுதாயத்தின் பக்கங்களைப் புரட்டினோமானால் உலகில் வலிமையான பலம்வாய்ந்த பேரரசாக ரோம சாம்ராஜ்ஜியம் 500 ஆண்டுகளுக்குமேல் நிலைத்து இருந்ததை நாம் காணலாம். இது எப்படி சாதுரியமானது என்பதை ஆராய்ந்தால், ரோம படை வீரர்களின் ஒழுக்கமும், நடத்தையும், கீழ்ப்படிவும் அவர்களுக்குப் பாரிய வெற்றிகளை ஈட்டிகொடுத்ததை அவதானிக்கலாம். தளபதிகளுக்குக் கீழ்ப் படிவானவர்களாகவும் தமது தேசத்திற்கு விசுவாசம் உள்ளவர்களாகவும் திகழ்ந்தார்கள்.

றோய் சிமித் என்பவர் கூறியிருப்பதை நாம் நினைவு கூருவோமாக, "ஒழுக்கமே திறமைகளை வல்லமைகளாக்கிப் புடம் போடும் நெருப்பு ஆகும்".

ஒழுக்கம், நடத்தை, பெறுமான முறைமைகள் என்பன இன்றியமையாததும் அத்தியாவசியமானதும் ஆகும். அறநெறி சார்ந்த சிறப்பியல்புகளையுடைய இளைஞர்களைக் கல்லூரி உருவாக்கவேண்டும். தோற்றத்தில் பண்புடைமை, மணிக்கு ஒழுங்கானதும் கிரமமானதுமான வரவு, சீரிய மனப்பான்மைகள், நலிவுற்றோர் மீது காட்டும் பரிவு, மூத்தோரை கனம் பண்ணல், நேர்மையையும் வாய்மையையும் கடைப பிடிப்பதில் அதி உயர்தரங்களைப் பேணும் பற்றுறுதி,



நீதி நியாயமாகத் தீர்மானித்தல் ஆகியன மாணவர் ஒருவர் கல்லூரி நாள்களில் கற்றுக்கொள்ளவேண்டிய விழுமியங்களில் சில ஆகும்.

### பெறுமான உணர்வு
(Right Values)

பெறுமான உணர்வு எனும்போது இதை ஓர் உதாரணத்தின் மூலம் விளக்க முனைகின்றேன்.

இங்கிலாந்து நாட்டில் 1831ஆம் ஆண்டில் சேர் றொபேட் பீல் (Sir Robert Peel) பிரதம மந்திரியாக இருந்தார். பழைமைவாத கட்சியான கொன்சவேற்றிக் கட்சியினதும் நிலச்சுவாந்தர்களினதும் பிரதிநிதியாக இருந்தார். அக்காலத்தில் ஆங்கில நிலச்சுவாந்தர்கள் தமது கோதுமைத் தானியத்தைக் கூடிய விலையில் விற்பனை செய்வதற்கு ஏதுவாக இறக்குமதி செய்யப்படும் கோதுமைக்கு அதிக வரிகளை விதிக்கும் தானியச் சட்டம் நிறைவேற்றப் பட்டது. 1841 ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் கோதுமை, உருளைக்கிழங்கு பயிர்கள் உற்பத்தி கடுமையான வீழ்ச்சியடைந்தது. இச்சந்தர்பபத்தில் பிரதம மந்திரி சேர் றொபேட் பீல் அவர்கள் இதன் தாக்கத்தினால் வறிய மக்கள் பட்டினியால் இறக்கநேரிடும் என்பதை உணர்ந்து நிலச்சுவாந்தர்களின் விருப்பத்திற்கு முரணாகத் தானியச் சட்டத்தை செயலற்றதாக்கினார் (Repealed Corn Laws). இதன் எதிரொலியால் என்ன நடக்கும் என்பதை நன்கு உணர்ந்து இருந்தபோதிலும், தான் சார்ந்த கட்சியின் பிரதம மந்திரி அல்ல, இங்கிலாந்து நாட்டின் பிரதமர் என்றே சிந்தித்துச் செயற்பட்டார். அடுத்து வந்த தேர்தலில் அவர் தோல்வியைத தழுவிக் கொண்டாலும் தனது மனச்சாட்சியின்படி முழுமையான நேர்மையுள்ள மக்களுக்கு சரியானதைத்தான் செய்தேன் என்ற பெருமிதம் அவருக்கு இருந்தது. இதுவே செமமைப் பெறுமானங்கள் எனக் கொள்ளமுடியும்.

(வளரும்)

# தீவகக் கல்வி வலயத்தில் பட்டதாரி ஆசிரியர் நியமனங்களை மீளாய்வு செய்யவேண்டும்

மாணவர்களது கல்வி வளர்ச்சி வீதத்தில் மிகவும் மந்தகரமான நிலையில் இருக்கும் வலயங்களில் தீவகவலயமும் ஒன்று. இதற்கு பல அடிப்படைக் காரணங்கள் இருக்கின்றன என்பது பல ஆய்வு முடிவுகள் மூலம் தெளிவாகின்றது. இதில் ஆளணி வளங்களோடு கூடிய ஆசிரியர் பற்றாக்குறை மிகப் பெரிய பிரச்சினையாக இருந்தது. இது தற்போது தீவக வலயத்திற்காக ஒதுக்கப்பட்ட பட்டதாரி ஆசிரிய நியமனங்களால் ஓரளவு பூர்த்திசெய்யப்பட்டது என்று அனைவரும் எண்ணியிருக்கின்றனர். ஆனால், இதைப் பாடசாலை நிர்வாக ரீதியாகப் பார்க்கின்றபோது இந்தப் பட்டதாரி நியமனத்தில் போதிய திருப்தி ஏற்படவில்லை என்பதே வெளிப்படையான உண்மை.

தீவக வலயக்கல்விப் பணிப்பாளரின் தலைமையில், வலயக்கல்விப் பணிமனையே இந்த ஆசிரியர்களை பாடசாலை ரீதியாகத் தரம் பிரிதத்து. ஆனால், இத்தரம் பிரிப்பு பாடசாலை ரீதியாக, பாடசாலைக்குத் தேவையான பாட ரீதியான ஆசிரியப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ததா? என்றால் அது பூரணமானதாக இடம்பெறவில்லை என்றே கூறவேண்டும்.

உதாரணமாக, புங்குடுதீவு மகாவித்தியாலயத்தை எடுத்துநோக்கினால் தமிழ், அளவையியல் போன்ற உயர்தரப் பாடங்களிற்கு ஆசிரியர் தேவை. ஆனால், இதைக்கற்ற அல்லது கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் எவரும் இப்பட்டதாரி நியமனத்தில் அடங்கவில்லை. இதனை வயலின் மற்றும் மிருதங்கம், நாட்டியம் (நடனம்) போன்ற சிறப்புக் கற்கைநெறிப் பட்டதாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குரிய பாடங்கள், இங்கு இல்லாததால் இவர்கள் ஆங்கிலம் மற்றும் சுற்றாடல் சமூகக் கல்வி மற்றும் ஆரம்ப நெறிப் பாடங்களைக் கற்பிக்கின்றனர். இதில் இரண்டு பிரச்சினைகள் தலை தூக்குகின்றன.

ஒன்று குறிப்பிட்ட பாடம் சம்பந்தமான பயிற்சிகள் விசேட பயிற்சிபெறாமல் கற்பிப்பது புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு மிகப் பாதமானது.

மற்றையது குறிப்பிட்ட ஆசிரியர்களிற்காக வழங்கப்பட்ட விசேட பாட சம்பந்தமான பயிற்சிகள் வீண் விரயமாகின்றன.

இதைவிடப் புவியியல், தமிழ் போன்ற பாடங்களில் விசேட கற்கைநெறிப் பயிற்சியை முடித்தவர்கள் தேவையற்ற முறையில் ஆரம்பப் பாடசாலைகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். இப்படியாகப் பாடசாலை ரீதியாக ஒரு சில ஆய்வுகளைச்செய்து பார்க்கின்றபோது இது புலனாகின்றது. இதனால் இப்பட்டதாரி நியமனங்கள் மூலம் போதியளவு பாடரீதியான வெற்றி




டங்கள் நிரப்பப்பட்டுள்ளன என்று கூறமுடியாது.

இப்படியான பெருமளவு ஆளணிகளைக் கொண்ட பட்டதாரி நியமனங்கள் வழங்கப் பட்டும்கூடக் கற்பித்தல் செயற்பாட்டில் போதிய அளவு வெற்றி கிடைக்கவில்லை. இப்படிப் பட்ட ஆழமான பிரச்சினைகள் வேரோடி இருக்கின்றபோது, மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் போதிய அளவு வெற்றி கிடைகக வில்லையே... ஆசிரிய வெற்றிடங்கள் நிரப் பட்டும் அதற்கேற்ற வெளிப்பாடுகள் இல் லையே..... என்று அங்கலாய்ப்பது அர்த்தமற்ற ஒன்று.

**ஆர்.கே.மேனன்**
ஆசிரியர்,
புங்குடுதீவு மகாவித்தியாலயம்.

ஆளணிகளைத் தொகை ரீதியாக நியமித்துவிட்டு வெளிப்பாட்டு வெற்றியை எதிர் பார்க்க இது ஒன்றும் உற்பத்திப்பொருள் அல்ல. தனித்தனித் திறன்விருத்தியோடு சம்பந்தப்பட்ட பாட அலகுகளோடு கூடி யது.

ஆகையால், இது தொடர்பாகக் குறிப்பிட்ட தீவக வலயக்கல்வி அதிகாரிகள் கவனமெடுத்துப் பாடசாலை அதிபர்களிடம் இருந்து முதற்கட்டமாகப் பாட ரீதியான தேவைப்பட்டியலைப்பெற்று, பின்பு பட்டதாரிகளினது பயிற்சிப் பாடங்களையும் அடிப்படையாகக் கொண்டு ஓர் உள்ளக இடமாற்றத்தினைப் புதிய பட்டதாரிகளுக்கு மேற்கொண்டால் மாத்திரமே இப்பட்டதாரி நியமனம் தீவக வலயக் கல்வித் தேவையின் அடிப்படையில் வெற்றியளிக்கும். இல்லையேல், இது ஓர் அர்த்தமற்ற ஆளணி நிரப்பல்களாகத்தான் இருக்கும். இதை அடிப் படையாகக் கொண்டு கல்வி விருத்தியை எதிர்பார்ப்பது ஆற்றிலே போட்டுவிட்டுக் குளத்தில் தேடும் கதையாகத்தான் இருக்கும். ☆

## ஜெயபுரத்தில் லொறி விபத்தில் சாரதி படுகாயம்

ஜெயபுரம்,பெப்.25

ஜெயபுரம் பிரதான வீதியில் லொறி ஒன்று தடம்புரண்டு மரத்துடன் மோதியதில் யாழ்ப்பாணம், சண்டிலிப்பாயைச் சேர்ந்த சாரதி படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் நண்பகல் 12.55 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சின்னத்துரை கணேஸ்வரன் (வயது 51) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

எரு ஏற்றுவதற்காகத் தனியே லொறியில் சென்ற இவர் பாதை மாறி லொறியை மரத்துடன் மோதவிட்டார். தலையில் படுகாயமடைந்த இவரை அருகிலிருந்த மக்கள் மீட்டெடுத்து முழங்காவில் வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

(ஜ-219-202)

## 'பாப்பாப் பா' சிறுவர் பாடல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப்.25

கவிஞர் கல்வயல் வே.குமாரசாமியின் 'பாப்பாப் பா' பாலர் பாடல்கள் வெளியீட்டு விழா எதிர்வரும் 28ஆம் திகதி பிற்பகல் 2மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை இரதிலஷ்மி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அருள் வாக்கினை நல்லை ஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமசாரிய சுவாமிகள் வழங்குவார்.

கவிஞர் இ.முருகையன் மணிவாக்கினையும், செங்கைஆழியான் மணி வார்த்தைகளையும் நிகழ்த்துவர்.

யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியின் வாழ்த்துரையைத் தொடர்ந்து கவிஞர் புதுவை இரத்தினதுரை வெளியீட்டுரையை நிகழ்த்துவார்.

மதிப்பீட்டுரைகளை பண்டிதர் க.சச்சிதானந்தன், பேராசிரியர் அ.சண்முகதாஸ், ஓவியர் ரமணி ஆகியோர் வழங்குவர்.

(ஜ-204)

# சிங்கள அரசியல்வாதிகளின் போக்கே தமிழர்களைப் போருக்குத் தூண்டியது

## மட்டு. புத்திஜீவிகள் கருத்து

காத்தான்குடி,பெப்.25

தமிழ் அரசியல்வாதிகளின் காட்டிக்கொடுப்பும், சிங்கள அரசியல்வாதிகளின் இனவாதப் போக்குமே தமிழ் இளைஞர்களைப் போருக்குத் தூண்டியது. இதுவே இன்றைய யுத்தத்திற்கான பிரதான காரணமாகும்.

- இவ்வாறு மட்டக்களப்பில் நடைபெற்ற அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான உடன்படிக்கையின் மூன்றாவது வருட பூர்த்திநிகழ்வில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தியினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்சி, மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. புத்திஜீவிகள, பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஊடகவியலர்ளர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

சமாதானத்தின் வெளிப்பாடுகள் அடி மனதிலிருந்து வரவேண்டும். இல்லாவிட்டால் நிச்சயம் போரினால் நாடு சீரழியும்.

சமாதான உடன்படிக்கையினால் போர் ஓய்நததைத் தவிர, தமிழ் மக்கள் கண்டது வேறெதுவுமில்லை என அங்கு வலியுறுத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி, கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எஸ்.ரவீந்திரநாத், சிரேஷ்ட ஊடகவியலாளர் டி.சிவராம் உட்படப் பலர் உரை நிகழ்த்தினர். (க-3)


## வேலையாள்கள் தேவை

- வியாபார ஸ்தாபனத்திற்கு ஆர்வமுள்ள விற்பனையாளர்கள் தேவை.

தொடர்பு:
இல.192, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.021 - 222 2669.
(42423)


# மாணவர் எண்ணிக்கையில் இயல்பு நிலைக்கு வலியுறுத்து

வலிகாமம்தெற்கு,பெப்.25

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இவ்வருடம் தொடக்கம் ஆண்டு ஒன்று வகுப்பு ஆரம்பிக்கப்பட்டமையால் எமது பாடசாலை மட்டுமல்ல, ஏனைய அயற்பாடசாலைகளிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக, எமது பாடசாலையில் தரம் ஒன்று மாணவர் எண்ணிக்கை மிகக்குறைவடைந்து விட்டது. மாணவர் எண்ணிக்கையை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்குப் பொருத்தமான நடவடிக்கையை உடன் மேற்கொள்ளவும்.

இவ்வாறு கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலைப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இவ்வருடம் ஆரம்பிக்கப்பட்ட தரம் ஒன்று வகுப்பு நடவடிக்கையை மீளாய்வு செய்யுமாறு கோரி வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர், மாகாணக்கல்வி அமைச்சுச் செயலாளர் ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதங்களிலேயே தமது பாடசாலைக்கு ஏற்பட்ட பாதிப்பை அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு மிக அண்மையில் இயங்கிவரும் எமது பாட சாலையிலும், நடேஸ்வராக் கல்லூரி கனிஷ்ட வித்தியாசாலையிலும் தரம் ஒன்றுக்குப் போதிய மாணவர் எண்ணிக்கை இல்லாத நிலையில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் புதிய வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது பொருத்தமற்றது. ஆரம்பப் பாடசாலைகளுக்குரிய ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றபோது ஸ்கந்தாவில் புதிதாக ஆரம்பப் பிரிவை தொடக்கி, ஆசிரிய வளம் கொடுப்பது பாரபட்சமான செயல் எனக் கருதுகிறோம்.

ஸ்கந்தாவில் தரம் ஒன்று ஆரம்பிக்கப் பலமுறை முயற்சி எடுக்கப்பட்டபோதும் அன்றைய கல்விப்பணிப்பாளரும் மாகாணக் கல்விப் பணிப்பாளரும் அனுமதியளிக்க மறந்துவிட்டனர். இவ்விடயம் தொடர்பாக, கல்வியாளர்கள், பெற்றோர்கள் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் இரு பாடசாலைகளும் இருந்தவாறே செயற்படவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானம் உதாசீனம் செய்யப்பட்டு இவ்வருடம் தரம் ஒன்று ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே எமது பாடசாலைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை நீக்க உடன் நடவடிக்கை எடுக்கக் கோருகிறோம் என அவர்கள் தமது கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள். (ப-152)


## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
02 - 11 - 1988



மறைவு
25 - 02 - 2000

### செல்வன் தர்மசேகரம் முகுந்தன்

*(உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி மாணவன்)*

ஆண்டுகள் ஐந்து ஆயிடினும் ஆறவில்லை எம் இதயம்
ஈண்டு உம்மை நினைந்தே நாம் அனுதினமும் வாடுகின்றோம்.

தர்மகுலசிங்கம் சனசமூக நிலையம்,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

பிரிவால் வருந்தி நிற்கும்:
அப்பா, அம்மா,
அண்ணா, தம்பி.

(42416)(46-45-26)



ஓம் விராட் விஸ்வப் பிரம்மணே நம

## புதுமனைப் புகுவிழா அழைப்பு

நிகழும் மங்களகரமான தாரணவருடம் மாசித்திங்கள் 13 ஆம்நாள் (25.02.2005) வெள்ளிக்கிழமை மாலை 6.27 - 7.45 மணிவரையான (பழையநேரம்) உத்தர நட்சத்திரமும் சிங்க லக்கினமும், சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த நல்வேளையில் எம்மால் நிர்மாணிக்கப்பட்ட

### சுவாதி இல்லம்

என்னும் புதுமனையில் குடிபுக பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராய் கலந்து சிறப்பித்துப் புதுமனையை ஆசீர்வதித்து ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள்நல்வரவை விரும்பும்:

திரு-திருமதி புஸ்பராசலிங்கம் (வரவேற்பாளர்),
அரசடி லேன், திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

திரு- திருமதி சண்முகபாலன்
(லண்டன்).

(42410)(38)






கோபம் வந்தால் என்ன பேசுகிறோம் என்று
நாம் நினைத்துப் பார்ப்பதில்லை..
வார்த்தைகள் கத்திபோல மனதைக் காயப்படுத்தும்
காயங்கள் ஆறாத புண்களாக மாறும்.

**நீங்கள் சிந்திக்க வேண்டிய தருணம் இதுவே!**
**வாழ்க்கை இனிமையாக வாழ்வதற்கே!**
**சித்திரவதைப் படுவதற்கு அல்ல!**

**உங்களால் மற்றொருவர் மனம்**
**சித்திரவதைப் பட்டுத் துன்பப்படுகிறதா என்பதை**
**யோசித்துப் பாருங்கள்.**
**வன்முறைகள் இல்லாத இல்லத்தை உருவாக்க**
**நீங்களும் உதவுங்கள்**

**இல்லத்து வன்முறைகளை**
**இல்லாதொழிக்க ஒன்றிணைவோம்.**

(சி-41166)

THOMPSON ASSOCIATES

எச்சரிக்கை: வார்த்தைகள் அபாயகரமானவை.
அவதானமாய்க் கையாளுங்கள்.

நாம் இணைந்து
பெண்கள் மீதான வன்முறைகளை ஒழிப்போம்

பெண்கள் மீதான
வன்முறைகளை இல்லாதொழிக்கும்
இலங்கைப் பிரசாரத்திட்டம்
த.பெ. 2006, கொழும்பு.

குடும்ப வன்முறையில் இவ்வளவு அக்கறை காட்டுகையில்

# இன வன்முறையைத் தீர்ப்பதில் அரசு அக்கறை காட்டாதது ஏன்?

## கேள்வியெழுப்புகிறார் அரியநேத்திரன்

குடும்ப வன்முறைக்கு முக்கியத்துவம் கொடுத்து அக்கறையுடன் செயற்படும் அரசு, இருபது வருடங்களாகப் புரையோடிப்போயுள்ள இன வன்முறையைத் தீர்ப்பதில் அக்கறை காட்டாதது ஏன்? என்று கேள்வியெழுப்புகிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன.

கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் குடும்ப வன்முறை செயற்தடுப்பு சட்ட வரைவு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அரியநேத்திரன் எம்பி. இப்படி ஒரு கேளவியை எழுப்பினார்.

அரியநேத்திரன் எம்.பி.தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:-

அண்மையில் இடம்பெற்ற ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் 72 சதவீதமாக பாதிக்கப்பட்டது. தமிழ் பேசும் மக்கள் வாழும் வடக்கு-கிழக்கு பிரதேசங்களே. ஆனால், இரண்டு மாதங்களாகியும் அரச நிவாரணம் அங்குள்ள மக்களுக்குக் கிடைக்கவில்லை. அகதி முகாம்களில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் அவர்கள் வாழ்கின்றனர்.

மனிதனை மனிதன் அழித்து வாழும் நிலையேற்பட்டுள்ளது. யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டு இன்றுடன் முன்று ஆண்டுகள் நிறைவுபெறுகின்றன. இந்த உடன்படிக்கையால் தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் ஏற்படவில்லை. மாறாக கடந்த மூன்று வருட காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் 69 பேர் கொல்லப்பட்டுள்ளனர். யுத்த நிறுத்த உடன்பட்டால் தென்பகுதிக்குத்தான் நன்மை ஏற்பட்டுள்ளதேயன்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு இல்லை. மனிதப் படுகொலைகளுக்கு வழங்கப்படும் ஆதரவு சமாதானத்திற்கு இல்லை. பௌத்தமதம் சாந்தி, சமாதானத்தைப் போதிக்கின்றது. ஆனால், இந்தச் சபையில் இருக்கும் புத்தகுருமார் யுத்தத்திற்கு தூபம் போடுகின்றனர்.

இப்படியான நிலையில் இந்த அரசு எத்தகைய சட்டங்களை இயற்றினாலும் நன்மை ஏற்படப்போவதில்லை. முதலில் நாட்டில் ஏற்பட்டுள்ள இன வன்முறைகளுக்கு தீர்வுகாண வேண்டும் என அரியநேத்திரன் எம்.பி. கூறினார். (எ-க)

# பெண்களின் பாதுகாப்புக்கு மேலும் உத்தரவாதம் அளித்த பெண்புலிகள்

## நாடாளுமன்றில் பத்மினி பிரஸ்தாபம்

பெண் போராளிகளின் பிரசன்னம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பெண்களின் பாதுகாப்புக்கு மேலும் உத்தரவாதத்தை அளித்துள்ளது.

இப்படித் தெரிவித்தார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன்.

நாடளுமன்றில் கடந்த செவ்வாயன்று வீட்டு வன்முறை தொடர்பான விவாதம் நடைபெற்றது. இந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

"இராணுவத்தினருடன் இணைந்து செயற்படும் இளைஞர்களில் சிலர் வடக்கு - கிழக்குப பகுதிகளில் தமிழ்ப்பெண்களைத் துன்புறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதனால், பெண்களை வெளியல் அனுப்பாமல் - சமூகத்தில் பழகவிடாமல் - வீடுகளில் பூட்டிவைக்கவேண்டிய நிலையேற்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் அமைப்பில் பெருந்திரளான பெண்போராளிகள் இருக்கின்றனர். இவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதிகளில் பெண்களின் பாதுகாப்புக்கு மேலும் உத்தரவாதத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழீழ காவல்துறையின் மகளிர் பிரிவு சிறந்த சேவைகள் ஆற்றிவருகின்றது.

ஆனால், வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கடமையாற்றும் இராணுவத்தினர் பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு துணைபோகின்ற ஒரு போக்கை காணமுடிகிறது.

குடும்ப வன்முறைகளை ஒழிக்க சமூகத்தில் பாரிய மாற்றம் தேவைப்படுகிறது. இதுபோன்று சமூக, அரசியல் வன்முறைகளுக்கு எதிரான சட்ட மூலம் கொண்டுவரப்படவேண்டிய அவசியம் உள்ளது - என்றார் அவர். (எ-க)

# பாடசாலைகளிலும் வன்முறை அதிகரித்துவரும் காலமிது

## செல்லச்சாமி சபையில் கவலை

பாடசாலைகளில் இன்று வன்முறைகள் அதிகரித்துவிட்டன. சில பாடசாலை அதிபர்களே மாணவியரை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்குகின்றனர். இப்படியான சமூகச் சீரழிவுகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் பிரதி அமைச்சர் எம்.எஸ்.செல்லச்சாமி.

கடந்த செவ்வாயன்று நாடாளுமன்றத்தில் குடும்ப வன்முறை செயல்தடுப்பு சட்டவரைவு தொடர்பான விவாதத்தில் இதனைச்சுட்டிக் காட்டினார் செல்லச்சாமி எம்.பி. தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:

நாட்டில் வன்முறை, வீட்டில் வன்முறை, பாடசாலைகளில் வன்முறை, இப்போது ஆழிப் பேரலையின் வன்முறை இப்படி வன்முறைகள் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே போகின்றன.

வன்முறைகள் ஏன் ஏற்படுகின்றன. வீட்டில் வருமானம் இல்லை, உணவு இல்லை, படித்திருந்தும் தொழில்வாய்ப்பு இல்லை, பெற்றோரால் பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை, மனைவியின் தேவைகளை நிறைவுசெய்யமுடியாத நிலையில் கணவன், இப்படியான சூழ்நிலைகளிலேயே குடும்பத் தகராறுகளும், குடும்ப வன்முறைகளும் இடம்பெறுகின்றன.

இவற்றை எல்லாம் சட்டம் போட்டோ அல்லது வழக்குகளைத் தொடர்ந்தோ கட்டுப்படுத்தி விடமுடியாது. நமது பெண்கள் பொலீஸ் நிலையம் செல்வதையே அவமானமாகக் கருதுபவர்கள். நமது பண்பாடும், கலாசாரமும் தனியானது.

குடும்பத் தகராறுகள் தொடர்பாகப் பொலீஸ் நிலையம் செல்லும்போது அதைப் பொலீஸார் சாதகமாக்கிக் கொண்டு குடும்பத்தில் மேலும் பிரச்சினைகளை உருவாக்கி விட்டு வருகின்றனர். பொலீஸாரைக் குடும்ப விவகாரங்களில் தலையிட அனுமதிக்கவேகூடாது.

கடந்த காலங்களில் கிராமங்கள் தோறும் பஞ்சாயத்து முறைகள் இருந்தன. அதேபோன்று தோட்டங்களிலும் இருந்தன. அதுபோன்ற சமூக, கலாசார பண்பாட்டிற்கேற்ற அமைப்புகள உருவாக்கப்படவேண்டும்.

ஐ.நாவும் யுனிசெவ்வும் ஆலோசனை வழங்குகின்றன என்பதற்காக அவற்றின் திட்டங்களை அப்படியே இங்கு நடைமுறைப்படுத்த முடியாது. அவை நமது கலாசாரத்துக்கு ஏற்றவையும் அல்ல.

இப்பொழுது நாட்டில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்கவே நீதிமன்றங்கள் போதாமல் இருக்கின்றன. இந்த நிலையில் குடும்ப விவகாரங்களும் நீதிமன்றங்களுக்குப்போக வேண்டுமா? எனவே, சட்டங்களை இயற்றுவதன் மூலம் குடும்ப வன்முறைகளைத் தடுக்க முடியும்என்பதில் எனகு நம்பிக்கை இல்லை - என்றும் பிரதி அமைச்சர் செல்லச்சாமி கூறினார்.

# சிவனுக்கு உகந்த சிவராத்திரி வரங்கள் பலவும் தந்திடும்

*சிவனுக்குரிய சிறப்புமிக்க விரதங்களில் ஒன்றான சிவராத்திரி விரதம் எதிர்வரும் 08ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது. இந்த விரதத்தை எவ்வாறு அனுஷ்டிப்பது, அதன் பலாபலன்கள் எவை? என்பது பற்றி அருட்சொல்வாரி திருமுருக கிருபானந்தவாரியார் கூறியவை இங்கு சுருக்கமாகத்தரப்படுகின்றன.*

*சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கக் காத்திருக்கும் அடியவர்களின் நலன் கருதி இந்த விவரங்களைத் தருகின்றோம்.*





சிவம் வேறு; அறிவு வேறு அன்று. அறிவே மெய்ப்பொருள், மற்ற எல்லாம் பொய்ப் பொருள்கள் தான். பொய் என்பதற்கு நிலையில்லாதது என்பது பொருள். நிலையாக இருப்பவர் கடவுள் மட்டுமே. மற்றவர்கள் எல்லாம் தோன்றி நின்று மொத்தமாக மாய்ந்து விடுபவர்கள்.

சிவ விரதங்கள் எட்டு. அவற்றுள் சிவராத்திரி ஒன்று. இது மாசி மாதம், கிருஷ்ணபட்சம் சதுர்த்தித் திதியன்று வருவது. அதிகாலையில் நீராடி, திருநீறும் உருத்திராட்ச மாலையும் அணிந்து சிவபூசைசெய்து. திருவைந்தெழுத்து ஓத வேண்டும். பகல் முழுவதும் உபவாசம் இருக்கவேண்டும். மாலையில் மீண்டும் நீராடி, சிவாலயம் சென்று வழிபடவேண்டும். முடியுமானால் நெய் விளக்கு எற்றி, மலரால் அர்ச்சனை செய்து உள்ளம் உருகி தேவாரம் மற்றும் திருவாசகப் பாடல்களை பாடித் துதிசெய்து, வலம் வந்து, அஷ்டாங்க வணக்கம் புரிந்து வழிபாடு செய்யவேண்டும்.

சிவராத்திரி அன்று இரவில் நான்கு காலங்களினும் சிவபூசை செய்ய வேண்டும். சிவபூசை செய்ய இயலாதவர்கள், நான்கு காலங்களிலும் கோயிலில் நடைபெறும். பூசைகளில் கலந்துகொண்டு தரிசிக்க வேண்டும். நிரம்பிய அன்புடன் திருவைந்தெழுத்து ஓதுதல் இன்றியமையாதது. மறுநாள் காலை நீராடி, சிவனை வழிபட்டு விரதத்தை முடிக்க வேண்டும். இப்படி விரதம் இருந்தவர்களின் சகல வினைகளும் நெருப்பில் விழுந்த பஞ்சு போல எரிந்து கரிந்து, சாம்பலாகும்.

தீபங்களை வரிசையாக வைத்து சிவ பெருமானை வழிபட வேண்டும். சிவபெருமான் தீபமங்கள ஜோதியாக விளங்குபவர். அவர் ஒளிவெள்ளமாக திருவண்ணாமலையில் காட்சிதருகிறார்.

கோயிலுக்குள் நீராடிய பிறகே செல்ல வேண்டும். கொடிமரத்திற்கு வெளியே விழுந்து வணங்கி, விநாயகரை ஒரு முறையும், சிவபெருமானை மூன்று முறையும், அம்பிகையை நான்கு முறையும் வலம்வரவேண்டும். வழிபடும்போது மனம் இறைவன்மீது மட்டுமே இருக்கவேண்டும். விபூதி மற்றும் பிரசாதத்தைப் பயபக்தியுடன் இரண்டு கைகளாலும் ஏந்திப்பெறவேண்டும். அதைக்கீழே சிந்துவதோ, எறிவதோ பெரும் பாவமாகும். சண்டிகேஸ்வரர் மீது நூல் இடக்கூடாது. சிவலிங்கத்திற்கும் நந்திதேவனுக்கும் இடையே போகக்கூடாது.

கோயிலில் பிரசாதங்களைச் சாப்பிட்டு விட்டு தூண்களில் துடைப்பது தவறாகும். வழிபாடு முடிந்த பின்னர் கொடிமரத்தின் அருகில் வடதிசை நோக்கி அமர்ந்து மூலமந்திரம் உச்சரிக்க வேண்டும். அதிக சத்தம் இல்லாமல் இனிமையாகத் தோத்திரப் பாடல்களைப் பாடவேண்டும். கோயிலுக்குச் செல்வோர் முக்கியமாக விளக்குகளில் எண்ணெய் ஊற்ற வேண்டும்.

இன்சொல் பேசுகின்றவர்களுக்கு உலகில் ஒருவகையான துன்பமும் இல்லை, இயமனது துன்பமும் கிடையாது, சிவகதி கண்டிப்பாகக் கிடைக்கும்.

மனத்தூய்மையுடன் வாழ்ந்து இறைவன் திருவருளால் இன்சொல்லைப்பேசி, இம்மை இன்பத்தை அடைந்து நற்கதி பெறுவோம்.

உற்றாரும் மற்றாரும் காற்றாரை கை கூப்பி வணங்குவர். கற்றாருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. கல்லாதவனை அவனது மனைவி கூடக் கேலிசெய்வாள்.

மனிதனை உயர்த்துவது பணமோ,

ஞானக்கதிர்

பதவியோ, குலமோ, பருமனோ, உயரமோ அல்ல. அறிவு ஒன்றுதான் மனிதனை உயர்த்தும். வீட்டுத் தலைவர் ஒரு பாடலைப் பாட, மற்றவர்கள் அதைத் தொடர்ந்து பாடி இறைவனை வழிபாடு செய்யவேண்டும். இதனால், குடும்பத்தில் ஒற்றுமை உண்டாவதுடன், அந்த வீட்டில் தெய்வ கடாட்சமும், லட்சுமியின் அனுக்கிரகமும் உண்டாகும்.

எல்லா உயிர்களுக்கும் நன்மையே செய்ய வேண்டும். எல்லா உயிர்களிலும் கடவுள் இருக்கிறார். எனவே, உயிர்களுக்குச் செய்யும் நன்மையே உண்மையான கடவுள் வழிபாடாகும். மேற்படி வழிமுறைகளைப் பின்பற்றி நாம் இயற்றும் வழிபாடு குறிப்பாக, சிவராத்திரி தின வழிபாடு பெரும் நன்மைபயப்பதாக அமையும்.

# சங்கானை கரைச்சி மயானத்தின் குறைபாடுகள் தொடர்பாக விளக்கம்

யாழ்ப்பாணம்,பெப்:25

'சங்கானை கரைச்சி மயானம்: கடைசி வரை கவனிப்பார் யாரோ?' என்று தலைப்பிட்டு கடந்த ஆண்டு டிசெம்பர் 5ஆம் திகதி உதயனில் வெளியாகிய செய்திக் கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருந்த சில தகவல்களுக்கு அப்பகுதியைச் சேர்ந்த சமாதான நீதிவான் சி.இராசலிங்கம் என்பவர் சில ஆட்சேபக் கருக்கொண்ட விளக்கங்களை எழுதி அனுப்பியிருக்கின்றார். *(எனினும் அந்த விளக்கத்தினை முற்றாகப் பிரசுரிக்க வேண்டிய தேவை எழவில்லை)*

சங்கானை கரைச்சி மயான அபிவிருத்திச் சபையின் தலைவர் என்று தன்னைக் குறிப்பிட்டு, மயானத்தில் காணப்படும் சில குறைபாடுகளுக்கான காரணங்களை அவர் விளக்கியிருக்கின்றார்.

மயானத்தில் பொதுமக்கள் தங்கும் மடத்துக்கு, முன்னாள் இந்து விவகார அமைசசர் ஒதுக்கிய 5 லட்சம் ரூபா நிதியில் நான்கு லட்சம் ரூபா கிடைக்காமற் போனதற்கு இந்த ஊரின் 'கௌரவம் காக்கும் சமாதான நீதிவான' ஒருவரே காரணம் என்று செய்திக்கட்டுரையில் பெயர் குறிப்பிடாமல் கூறப்பட்ட சமாதான நீதிவான் தானே என்று தெரிவித்துள்ள அவர், குறிப்பிட்ட மயானத்துக்கு என்று ஓர் அபிவிருத்திச் சபை இருப்பதைத் தெரிந்துகொண்டதாலதான் அமைச்சர் எஞ்சிய நிதியை வழங்காது விட்டிருக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

மயானத்துக்குச் செல்லும் பாதை திருத்தப்படாமல் இருப்பது பற்றி செய்திக்கட்டுரையில் கூறப்பட்ட விடயங்களுக்கும் சமாதான நீதிவான விளக்கமளித்துள்ளார்.

இந்தப் பாதையைத் திருத்துவது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராஜாவிடம் உதவிகோரியதையடுத்து, பாதையின் அரைவாசிப் பகுதி தார் ஊற்றித் திருத்தப்பட்டிருப்பதாகவும் மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தின் உதவியுடன் 19.09.2004 அன்று சிரமதானம் மூலம் மயானத்தில் காணப்பட்ட பற்றைகள், புதர்கள் அப்புறப்படுத்தப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதான நீதிவான் தொடர்பாக செய்திக் கட்டுரையில் கூறப்பட்ட தகவல் அந்தப் பிரதேசத்தில் உள்ள எட்டுக்கும் மேற்பட்ட சமாதான நீதிவான்களுக்கு களங்கத்தை ஏற்படுத்தி விடக் கூடும் என்பதால் தனது இந்த விளக்கத்தைப் பிரசுரிக்குமாறும் சி.இராசலிங்கம் உதயனுக்கு அனுப்பிய கடிதத்தில் கேட்டிருந்தார்.

*ஆசிரியர் குறிப்பு:*

சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்கு 23.01.2002 ஆம் திகதிக்குப் பின்னர் ஒழுங்கமைந்த அபிவிருத்திச்சபையோ அல்லது ஒரு பராமரிப்புச் சங்கமோ இயங்காது இருப்பதே மயானத்தின் பின்தங்கிய நிலைமைக்குக் காரணம் என்பது உதயனின் விசாரணைகளில் இருந்து அறியவந்தது.

தற்போது மயானத்தின் பெயரில் இயங்கும் அமைப்பு ஒன்றின் உறுப்பினர்களிடையே காணப்படும் பிணக்குத் தீக்கப்பட்டு புதிதாக ஒரு நிர்வாக அமைப்பு ஏற்படுத்தப்படவேண்டும் என்று மயானத்தின பாவனையாளர்கள் தரப்பில் பொதுவான கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. (ஆ-ர்)

# MOBILE PHONE TECHNOLOGY

**Mobile Phones Repaire and Unlocking**

**3 Months Courses**

மொபைல் போன் தொழில்நுட்பம்,
திருத்த வேலைகள் (Lock) உடைத்தல்
பயிற்சி நெறி 3 மாதங்கள்
(கிழமை நாள்களில்)

முடிவில் சான்றிதழ்! வேலை வாய்ப்புக்கள்.
முதல் 20 பேர் மட்டுமே!
*கட்டணம் 8500/= மட்டுமே!*

எம்மால் நடத்தப்படும் ஏனைய பயிற்சி நெறிகள்
1. கணனி வலைப்பின்னல் 3 மாதங்கள் - ரூ.6000/=
Computer Networking
2. கணனி வன்பொருள் - 3 மாதங்கள் ரூ.6000/=
Computer Hardware
3. ரெலிகொம் கேபிள் கட்டுமானம் - 3 மாதங்கள் ரூ.5000/=

பதிவுகளுக்கு முந்துங்கள்
(கொழும்பு நிபுணர்களால் நடத்தப்படும்)

(26-11-145)

**NORTH EAST TELECOM [PVT] LTD**
No: 34, SADDANATHAR ROAD, NALLUR, JAFFNA
T.P.: 021 - 222 3786 Hotline: 0777 - 70849. (சி-41170)


## 23.02.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 200100560 இலிருந்து
200115058 வரை

சீட்டிழுப்பு இல. 1584

**07 18 44 62** சுப்பர் எண் **11**

**சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.65,66,150/- வெல்லப்படவில்லை**

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 65,66,150/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 22 | 5,000/- | 1,10,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 377 | 1,000/- | 3,77,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,236 | 500/- | 6,18,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 18,351 | 40/- | 7,34,040/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 17,304 | 20/- | 3,46,080/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,60,016 | 10/- | 26,00,160/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ.62,85,280/-

**இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 72,60,950/-**

தொடர் இல. 300091025 க்கு மேற்பட்ட ஜாதா நிற டிக்கட்டுக்கள் 2005 பெப்ரவரி 26 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

200105232-3-39
200102256-0-07
200105783-6-96
200108755-8-83
200110450-2-78

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

# ஆதீனத்தில் நாளை மாதாந்த இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,பெப்.25

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் நடத்தும் மாதாந்த இசை நிகழ்ச்சி நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு ஆதீன கலாமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், ஓய்வு பெற்ற நீதிவான் மு.திருநாவுக்கரசு பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இந்த நிகழ்வில் செல்வி யதுநந்தினி இராமநாதனின் இசையரங்கும், திருமதி வாஸஸபதி ரஜீந்திரனின் இசைக் கச்சேரியும் இடம் பெறும்.

(எ-203)

# பருத்தித்துறையில் கட்டாக்காலி நாய்களால் தொல்லை

பருத்தித்துறை,பெப்.25

பருத்தித்துறை கல்லூரி வீதியில் பெருகி வரும் கட்டாக்காலி நாய்களால் வீதியால் பயணஞ்செய்வோர் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

இவ்வீதியில் வடமராட்சியின் பிரபல பாடசாலைகளான ஹாட்லிக்கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை என்பன அமைந்திருப்பதால் தினமும் ஏராளமான மாணவர்கள் இவ்வீதியால் பயணஞ்செய்துவருகிறார்கள். இவர்களுக்கு இந்தக் கட்டாக்காலி நாய்கள் பெருஞ்சிரமங்களைக் கொடுத்துவருகின்றன.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது.

(10-36)


# தேவை

**HUMEDICA LANKA** — ஹியுமடிகா இலங்கை
SANGARAPILLAI RD., MANIPAY. — சங்கரப்பிள்ளை வீதி. மானிப்பாய்.

தமிழ் மொழியிலிருந்து ஜேர்மன் மொழியில் கணனியில் தட்டச்சு செய்பவர் தேவை.

TRANSLATE TAMIL INTO GERMAN LANGUAGE AND TYPE IN COMPUTER

தொலைபேசி: 0777 238 300

(42444)(26-11-45) - நிர்வாகி.


# 20ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணுலகில் 13 - 07 - 1960



விண்ணுலகில் 25 - 02 - 1985

## திருமதி தயாவதி ஜீவதாசன்

ஆசையுடன் அம்மா என்றழைத்தே மகிழ்ந்திட
தேசமதில் உம்மைத் தேடுகின்றேன் தாயே!
நேசமகன் நானிங்கு நின்பிரிவால் வாடும்
நிலையறிய அம்மா நிலந்தனுக்கே வாரீர்

பிரிவால் வாடும்:
*பாசமகன்*
ஜீ.அஜந்தன்.

6C. இராஜேஸ்வரி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம். (42442)(46-11-45-26)

# கேள்வி அறிவித்தல்

## வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி

யுனிசெவ் திட்டத்தின்கீழ் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பின்வரும் பாடசாலைகள் தற்காலிக வகுப்பறைகள் அமைத்தல் தொடர்பான கேள்விகள் கேள்விச் சபைத் தலைவரும் வலயக் கல்விப் பணிப்பாளருமாகிய என்னால் 25-02-2005ஆம் திகதி தொடக்கம் 2005-03-03ஆம் திகதி பி.ப.3.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். இறுதித் திகதிக்கு அடுத்தநாள் 04-03-2005ஆம் திகதி மு.ப.10.30 மணியளவில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| பாடசாலையின் பெயர் | தற்காலிக வகுப்பறை அமைத்தல்: பொதி 1 வகுப்பறைகளின் எண்ணிக்கை | பொதி 2 வகுப்பறைகளின் எண்ணிக்கை | மீளளிக்க முடியாத வைப்புப்பணம் Rs. | மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம்: பொதி 1 Rs. | பொதி 2 Rs. | ICTAD |
|---|---|---|---|---|---|---|
| 1.யா/ஆழியவளை சீ.சீ.த.க. | 03 | 14 | 250 | 5,000 | 16,000 | M9&M8 |
| 2.யா/வெற்றிலைக்கேணி பரமே. | 03 | 11 | 250 | 5,000 | 12,000 | M9&M8 |
| 3.யா/வெற்றிலைக்கேணி றோ.க.த.க.பா. | 01 | 02 | 250 | 2,000 | 2,250 | M9 |
| 4.யா/கட்டைக்காடு றோ.க.த.க.பா. | 02 | 05 | 250 | 4,000 | 5,500 | M9 |
| 5.யா/கேவில் அ.த.க.பா. | 02 | 05 | 250 | 4,000 | 5,500 | M9 |
| 6.யா/மாமுனை அ.த.க.பா. | 01 | 03 | 250 | 2 000 | 3,500 | M9 |
| 7.யா/செம்பியன்பற்று றோ.க.த.க.பா. | 01 | 03 | 250 | 2,000 | 3,500 | M9 |
| 8.யா/தாளையடி றோ.க.த.க.பா. | 02 | 05 | 250 | 4,000 | 5,500 | M9 |
| 9.யா/மணற்காடு றோ.க.த.க.பா. | 03 | 09 | 250 | 5,000 | 10,000 | M9&M8 |
| 10.யா/வல்வை சிவகுரு வித்தி. | 04 | 15 | 250 | 5,750 | 16,500 | M9&M8 |
| 11.யா/வடஇந்து மகளிர் கல். | 01 | 04 | 250 | 2,000 | 4,500 | M9 |
| 12.யா/தம்பசிட்டி மெ.மி.த.க.பா. | 01 | 04 | 250 | 2,000 | 4,500 | M9 |
| 13.யா/அல்வாய் வட மெ.மி.த.க. | 01 | 04 | 250 | 2,000 | 4,500 | M9 |

2. மேற்படி வேலைகளுக்கமைவாக கேள்விப் பத்திரப் பணத்தைத் தங்களுக்கு வசதியான வங்கியிலிட்டு *வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி* என்ற பெயரில் வங்கிக் கட்டளையைப் பெற்று (pay Order) வடமராட்சி வலயப் பாடசாலைகள் வேலைகள் கிளையில் சமர்ப்பித்து 2005-02-25ஆம் திகதி தொடக்கம் 2005-03-03ஆம் திகதி பி.ப.3.30 மணி வரை கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
3. மேற்படி வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் பூர்த்திசெய்யப்பட்டு மூலப்பிரதியும் இணைப்பிரதியும் தனித்தனி கடித உறையில் இடப்பட்டு உறைகளின் இடதுபக்க மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்பட வேண்டும். தனித்தனியாக உறைகளில் இடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் இரண்டையும் பிறிதொரு உறையில் இட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரே முத்திரையிட்டு *வலயக் கல்வி பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம்* என்ற முகவரி இட்டு, வலயக் கல்வி அலுவலகத்தில் வலயக் கல்விப் பணிப்பாளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் 03-03-2005ஆம் திகதி பி.ப.3.30 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கால நேரத்திற்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
4. கேள்விச் சபையால் தெரிவுசெய்யப்படும் ஒப்பந்தகாரர் தெரிவுசெய்யப்பட்ட திகதியில் இருந்து இரண்டு வேலைநாள்களுக்குள் கேள்விச் சபைத் தலைவருடன் வேலைக்கான ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட்டு உரிய காலத்தில் வேலையைப் பூர்த்திசெய்து கையளித்தல் வேண்டும். எவ்வித காலதாமதமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
5. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் இவ்வேலை தொடர்பான மேலதிக விவரங்களை வடமராட்சி வலயக் கல்வி அலுவலக பாடசாலை வேலைகள் கிளையில் பெற்றுக்கொள்ளலாம் என அறியத்தருகின்றேன்.

**வே.தி.செல்வரத்தினம்**
கேள்விச் சபைத் தலைவரும்
வலயக் கல்விப்பணிப்பாளரும் வடமராட்சி.

(சி-41172)

பாடசாலை வேலைகள் கிளை. (26-11-45)
வலயக் கல்வி அலுவலகம். வடமராட்சி

# மரண அறிவித்தல்

## யோசேப் டேவிற்



உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோசேப் டேவிற் (வன்னியசிங்கம்) அவர்கள் 23.02.2005 அன்று காலமானார்.

அன்னார் அமரர்களான மத்தேசு யோசேப் - அன்னம்மா (நல்லம்மா) தம்பதிகளின் அன்பு மகனும் மேரி அம்மாவின் (செல்லம்) அன்புக் கணவரும் காலஞ்சென்ற அருளானந்தம் (ஜெயசிங்கம்) யோண்சிங்கம் (பிறைற் ஒக்ஷன் சென்ரா உரிமையாளர்), அல்பிறட் (இராசசிங்கம்) (உருக்குக் கூட்டுத்தாபன முகவர்), இராசமலர், இராசராணி (பட்டு - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அலன்பின் (சாரதி - ப.நோ.கூ.சங்கம், நல்லூர்), அகிலா (லண்டன்), அஜந்தா, அகிலன், ஜஸ்மினி ஆகியோரின் அன்புத் தந்தையும் அருள்தாஸ் (லண்டன்), நந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் அ.ஜதுஷனின் (லண்டன்) அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (26.02.2005) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் ஆனைக்கோட்டை அர்ச் அடைக்கலநாயகி ஆலயத்தில் அவரின் ஆன்ம சாந்திக்கான திருப்பலி நிறைவேற்றப்பட்டு பின் அடைக்கலநாயகி சேமக்காலையில் நல்லடக்கஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
டே. அலன்பின் *(மகன்)*,
யோ.யோண்சிங்கம் *(சகோதரன்)*.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

(42438) (39-11-45-26)


**UNIT**
நாங்கள் வரண்டியில்லாப் பொருள் எதுவும் விற்பதில்லை
Compaq PIII கணனிகள் ... Rs. 31000/-
PIV 2.4 *Complete* கணனிகள் மொனிற்றருடன் *@ Colombo based price*
Possible which impossible
3 வருட பூரண உத்தரவாதம்
சகல கணனி உதிரிகளும் கொழும்பை ஒத்த விலையில்.
வதந்திகளை நம்பி உங்கள் பணத்தை வீணடிக்காதீர்கள்
347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.

# மன்னாரில் நெல் அறுவடை விழா; புதிய இயந்திரம் அங்கு அறிமுகம்

பரந்தன்,பெப்.25

மன்னார் மாவட்டத்தில் உள்ள அடம்பன் பிரதேச செயலர் பிரிவின் கறுக்காய்க்குளம் கிராமத்தில் நெல் அறுவடை விழா நேற்றுமுன் தினம் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட விவசாய அமைப்புக் களின் சம்மேளனத் தலைவர் சௌந்தரநாயகம தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவில வன்னிவேளான் தொழில்நுட்ப நிறுவனத்தினால் புதிய தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய அரிவு வெட்டி சூடுமிதிக்கும் இயந்திரம் மன்னார் மாவட்டத்தில் அறிமுகஞ்செய்து வைக்கப்பட்டது.

இந்த இயந்திரம் அரிவுவெட்டி சூடுமிதிக் கும் அதேநேரத்தில் 6 மூடைகளை ஒரே நேரத்தில் நிரப்பி அடுக்குவதுடன் வைக்கோலை யும் துண்டு துண்டாக்கி சேதனப்பசளையாக மாற்றி மண்ணில்சேர்க்கின்றது.

இந்த நெல் அறுவடை விழாவில் மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் நீக்கிலஸ் பிள்ளை, மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர் திருமதி அன்னம்மா டிமெல், மன்னார் மாவட்ட விரிவாக்க உதவிப்பணிப்பா ளர் ஜெனாப்ஹுசைன், சேரன் வாணிபப் பொறுப்பாளர் பாபு, மன்னார் மாவட்ட உணவு விவசாய ஸ்தாபன இணைப்பாளர் க.சிவலிங் கம் மற்றும் கமக்கார அமைப்புகளின் பிரதி நிதிகள், சேரன்வாணிப நிறுவனத்தைச் சார்ந்த வர்கள், வன்னிவேளாண் தொழில்நுட்ப நிறு வனத்தைச் சேர்ந்தவர்கள், விவசாயிகள் ஆகி யோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் நீக்கிலஸ் பிள்ளை கருத்துத் தெரிவிக்கையில் -

மன்னார் மாவட்டத்தில் விவசாய நடவடிக் கைகளை மேற்கொள்ளும் விவசாயிகள் நெல் அறுவடையின்போது பல சிரமங்களை எதிர் கொண்டுவருகின்றனர் எனவும் - இந்த வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனமானது விவசாயி களுக்கான பல சேவைகளை வழங்கிவருவது பெரிதும் பாராட்டப்படவேண்டிய விடயம் என்றும் தெரிவித்தார். (த-12-352)




# உதவுவதாக உறுதி கூறிச் செல்வோர் மீண்டும் திரும்பி வருவதே கிடையாது

## முல்லைத்தீவில் நிலைமைஇப்படித்தானாம்!

முல்லைத்தீவு,பெப்.25

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவுப் பிரதேசத்தைப்பார்வையிடச் சென்ற பல நிறுவனங்கள் - அமைப்புக்கள் அங்கு பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உதவுவ தாக உறுதியளித்துவிட்டுச் செல்கின்றன.

ஆனால், அவ்வாறு உறுதியளித்துச் செல் கின்ற நிறுவனங்களும் அமைப்புக்களும் 'அதற குப்பிறகு அந்தப்பக்கம் வருவதுமில்லை; உத வுவதுமில்லை.

இவ்வாறு கவலை தெரிவித்திருக்கின்றார் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டு றவுச் சங்கத்தின் சமாசத்தலைவர் மரியராஜா.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:-

சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்கள தொழிலில் ஈடுபடுவதாயின் ஆயிரம் படகுகளும் அவற்றுக்கான வலைகளும் வழங்கப்படவேண்டும்.

வீச்சுத் தொழிலில் ஈடுபடுவதாயின் குறைந் தது 3 ஆயிரம் வீச்சுவலைகளாவது தேவைப் படுகின்றது.

இவை எதுவும் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை.

பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வந்த பல நிறுவனங்கள் உதவிகளை வழங்குவதாக உறுதியளித்துச் செல்கின்றன.

இந்த உறுதிமொழிகளை நம்பி எமது மீன வர்களும் தமக்குத் தொழில் உபகரணங்கள் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் இருக்கிறார்கள்.

ஆனால், உதவுவதாக உறுதியளித்துச் செல்லும் நிறுவனங்களோ, அமைப்புக்களோ இதுவரை எந்த உதவிகளையும் வழங்கவில்லை. (த-13)



கண்டாவளைப் பிரதேசத்தைச் சேர்ந்த 46 மாவீரர்களின் நினைவாலயம் கண்டாவளை மகாவித்தியாலயத்தில் திறந்துவைக்கப் பட்டது. வட போர்முனைக் கட்டளைத் தளபதி கேணல் ஜெயம், மாவீரர்களின் திருவுருவப்படங்களைத் திரைநீக்கம் செய்வதையும் நிகழ்வுகளில் கலந்துகொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:கேசவன்)

# வெறுமனே நெல்லை மட்டும் பயிரிட வேண்டாம் உப உணவுப் பயிரும் தேவை என அறிவுறுத்து!

பரந்தன்,பெப்.25

கிளிநொச்சி மாவட்டத்தில் சகல குளங்களின் கீழும் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் வெறுமனே நெற்பயிரை மட்டுமே மீண்டும் மீண்டும் பயிரிடுகின்றனர். இதனால் அங்கு மரக்கறிகள், சிறு தானியங்களுக்குத் தட்டுப் பாடு ஏற்படுவதுடன் அவற்றை வெளிமாவட்டங் களிலிருந்து தருவிக்க வேண்டியிருக்கிறது.

எனவே, விவசாயிகள் சிறுதானியம் மற்றும் மரக்கறிப் பயிர்களையும் செய்கை பண்ணுவ தற்கு முன்வரவேண்டும்.

இவ்வாறு விவசாயிகளுக்கு அறிவுரை கூறியிருக்கிறார் கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பா சனப் பொறியியலாளர் க.கந்தசாமி. கடந்த வாரம் கண்டாவளைப்பிரதேச செயலர் பிரிவி லுள்ள பிரமந்தனாறு சிறுபோக செய்கையாளா களுக்கான கூட்டத்தில் கலந்துகொண்டு உரை யாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சி மாவட்டம் ஒரு பெரிய விவசாய நிலப்பரப்பைக் கொண்டது. இங்கு நெல் - மற்றும் உப உணவு - சிறுதானியம் என பல் வேறு பயிர்களுக்கு குளங்களில் இருந்து நீர் விநியோகிக்கப்படுகின்றது.

ஆனால் இன்று கிளிநொச்சிச் சந்தைக்கு மரக்கறிகள் நாளாந்தம் யாழ்ப்பாணம் மற்றும் தென்னிலங்கையில் இருந்துதான் வருகின்றது.

இந்த நிலை மாறவேண்டும். இங்குள்ள குளங்களில் நீர் நன்றாக நிரம்பி இருக்கின் றது. குளங்களைக்கட்டி வகைப்படுத்தி ஆரம்பத் தில் நன்கு திட்டமிட்டு அதற்கான குடியிருப் புக்களை அமைத்து நீர்ப்பாசனத்தின் மூலம் நெல் மற்றும் உப உணவு, சிறுதானியம் என் பன பயிரிடப்பட்டு வந்தன. அப்போது இங்கு மரக்கறிகள், சிறுதானியங்களுக்குத் தட்டுப்பாடு இருக்கவில்லை. ஆனால், தற்போது இத்திட் டத்தை விவசாயிகள் மாற்றி - தமக்குள் ஏதோ ஒரு காரணங்களை கூறி - தனியாக எல்லாக் குளங் களின் கீழும் நெற்செய்கையை மட்டும் மேற்கொள்வதால் உற்பத்திக்கும் பாவனைக் கும் உப உணவு, சிறுதானியம் என்பன இல்லாத நிலையில் இப்பொருள்களின் விலைவாசி ஏறியிருப்பதுடன் பாவனைக்கும் கிடைக்காமல் அவற்றுக்கு வெளிமாவட்டங்களை நம்பி இருக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இங்கு மரக்கறிகளுக்கு விலைவாசி அதி கரிப்பது இங்கு அதற்கான உற்பத்தி இல்லை என்பதையே காட்டுகிறது. உப உணவுப் பயிர்ச் செய்கை மேற்கொள்ள வேண்டும் என்பதற் காக கடந்த வருடம் பிரமந்தனாறு குளத்தை நியாப் I திட்டத்தில் 6 மில்லியன் ரூபா செலவில் புனரமைத்தோம்.

பிரதான வாய்க்கால்களும் ஓரளவுக்குப் புனரமைக்கப்பட்டது. கிளை வாய்க்கால்களை புனரமைப்பதற்கு நிதி இல்லை.

இதனை விவசாய அமைப்பு - விவசாயிகளே மேற்கொள்ள வேண்டும். குளப் பராமரிப்பு வேலைகளுக்கென கிளிநொச்சி மாவட்டத்திற்கு 10 மில்லியன் ரூபா பணமே ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இப்போது கிளிநொச்சியில் ஒருகிலோ கௌபி 80 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. இப்படி விற்கப்பட்டால் பாவனையாளர்கள் எப்படி வாங் கிச் சாப்பிடுவது. இதனை நன்கு உணர்ந்து உப உணவு, சிறுதானியங்களை 2005 சிறு போகத்தில் மேற்கொள்ள வேண்டும் என்று தெரி வித்தார். (த-352)

# கரைச்சிக் கோட்டத்தின் உடற்பயிற்சிப் போட்டி

கிளிநொச்சி கல்வி வலயத்தின் கரைச்சிக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான முதற் கட்ட உடற்பயிற்சிப்போட்டிகள் கடந்த 23 ஆம் திகதி நடைபெற்றன.

கரைச்சிக் கோட்டத்தின் கிழக்குப் பகுதிப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் இராம நாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலும், மேற்குப் பகுதிப் பாடசாலை களுக்கிடையிலான போட்டிகள் உருத்திரபுரத்தி லும் நடைபெற்றன.

கிழக்குப் பகுதிப் பாடசாலைகளுக்கிடை யில் நடைபெற்ற போட்டிமுடிவுகள் வருமாறு:-

**ஆண்கள் பிரிவு**

முதலாமிடம் இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை, இரண்டாமிடம் கிளிநொச்சி மத்திய கல்லூரி, மூன்றாமிடம் கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

**பெண்கள் பிரிவு**

முதலாமிடம் இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை, இரண்டாமிடம் இராமநாதபுரம் மகாவித்தியாலயம், மூன்றாமிடம் கிளிநொச்சி மத்திய கல்லூரி.

கிழக்கு, மேற்கு ஆகிய பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான கரைச்சிக் கோட்ட இறுதி உடற் பயிற்சிப் போட்டிகள் நாளை 26 ஆம் திகதி கிளிநொச்சி இந்துக்கல்லூரி யில் நடைபெறவுள்ளன. (த-405)

# கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு கிளிநொச்சியிலிருந்து 12 பேர் தெரிவு

வட்டக்கச்சி,பெப்.25

இலங்கைப் கல்வி நிர்வாக சேவை தரம்III இற்கு நியமிப்பதற்காக கிளிநொச்சி மாவட்டத் திலிருந்து 12 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 2002 ஆம் ஆண்டு சேவை மூப்பு அடிப்படையில் முதலாம்தர அதிபர்களை தரம் IIIஇற்கு நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

இதனடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தி லிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரம் வருமாறு:-

கி.சின்னத்துரை, க.வைரமுத்து, க.சிவ சுவாமி, மு.சண்முகராசா, திருமதி ப.மார்க் கண்டு, பொன். தில்லைநாதன், திருமதி இ.அரியரத்தினம், கோ.செல்வராசா, ச.பாஸ் கரன், ந.செல்வரட்ணம், இ.கணபதிப் பிள்ளை, சி.மாணிக்கராசா. (த-405-202)

# வவுனியாவில் கடத்தப்பட்ட சிறுமி காவல்துறையினரால் மீட்பு!

கிளிநொச்சி,பெப்.25

கடந்த மாதம் 30ஆம் திகதி வவுனியாவில் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட 14வயதுச் சிறுமி தமிழீழ காவல்துறையினர் மேற்கொண்ட புலனாய்வு அதிரடி நடவடிக்கையால் மீட்கப் பட்டுள்ளார். சந்தேக நபரும் கைதுசெய்யப்பட் டுள்ளார்.

கடந்த 30ஆம் திகதி வவுனியா குருமன் காட்டுப் பகுதியில் ரியூசனுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த 14 வயதுச் சிறுமி இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டார்.

இதனையடுத்து தமிழீழ காவல்துறையின், புலனாய்வுப் பிரிவினர், அதிரடி நடவடிக்கையில் இறங்கிச் சிறுமியை மீட்டதுடன் சந்தேக நபர் ஒருவரையும் கைதுசெய்து நேற்று முன்தினம் கிளிநொச்சி தமிழீழ நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

நீதிமன்றில் விசாரணைகளை மேற்கொண்ட நீதியரசர் சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறும் சிறுமியைப் பெற்றோரிடம் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார். (த-13)

# யோகபுரம் ம.விக்கு கணனி அன்பளிப்பு

முல்லைத்தீவு யோகபுரம் மகாவித்தியால யத்திற்குக் கணனித் தொகுதியொன்றை அப் பாடசாலையின் பழைய மாணவரும் தற்போது ஜேர்மனியில் வசித்து வருபவருமான சித்தி விநாயகம் தனிப்பெருங்கருணை என்பவர் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (த-322-202)

# தருமபுரத்தில் கசிப்புக்குகை சிக்கியது; விசுவமடு காவல்துறையின் அதிரடியில்!

பரந்தன்,பெப்.25

விசுவமடுக் காவல்துறையினர் நடத்திய அதிரடி நடவடிக்கையில் தருமபுரத்தில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையமும் அதன் உரிமையாளரும் சிக்கிக்கொண்டார்.

அண்மையில் தருமபுரப் பகுதியில் கசிப்பு உற்பத்தி நடைபெறுவதை அறிந்த தமிழீழக் காவல்துறையின் விசுவமடுப் பணிமனைப் பொறுப்பாளர் ரகுராம் தலைமையிலான குழுவி னர் பல இடங்களில் தேடுதல் நடவடிக்கை யில் ஈடுபட்டனர்.

இதன்போது தருமபுரம் ஆற்றுப் பகுதியில் கசிப்புக் காய்ச்சுவதற்காக தயார் நிலையில் கோடாவுடன் வைக்கப்பட்டிருந்த பல கொள்கலன் கள் பிடிபட்டன. உடனேயே அவை அழிக்கப்பட் டதோடு, காய்ச்சிய நிலையில் இருந்த கசிப்பும் கைப்பற்றப்பட்டது.

கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட சந்தேக நபர் கைது செய்யப்பட்டு விசுவமடுக் காவல் துறையால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்கள் என காவல்துறையின் விசுவ மடுப் பொறுப்பாளர் தெரிவித்தார். (த-352-202)

# கட்டாக்காலிகள் வீதியில் தொல்லை

வெள்ளாங்குளம்,பெப்.25

துணுக்காய் - மாங்குளம் பிரதான சாலை யில் இரவு நேரங்களில் கட்டாக்காலிக் கால்நடைகளின் தொல்லை அதிகரித்துள்ளது.

இதனால் போக்குவரத்தில் ஈடுபடும் பயணி கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி யிருக்கிறது.

உரிய தரப்பினர் இந்த விடயத்தில் அக்கறை செலுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் கேட்டுள்ளனர். (த-415)

கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவு

இருபாலைச் சந்தி

## அறிவித்தல்

எதிர்வரும் 24.03.2005 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் எமது சங்க மண்டபத்தில் பொதுக்கூட்டமும், நிர்வாக சபைத் தெரிவும், கோப்பாய் உதவிப்பிரதேச செயலாளர் திருமதி அ.சாந்தசீலன் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

**நிர்வாகம்.**

(42434)(42-43-11-45)



## Organization to win Pension Rights
## (B.O.C., People's Bank & N.S.B.)
## Members Get together

*President:* **Mr.S.Subaseelan**
(People's Bank, Jaffna District Co-Ordinator)

*Subject for Discussion:*
The Present position in our struggle to win our Pension Rights, which is at the brink of victory.

*Venue:* **Jaffna M.P.C.S. Auditorium**
**No.291, K.K.S. Road, Jaffna.**

*Day & Date:* Sunday 27 th February 2005
from 9.00 a.m. - 12.00 Noon.

*Speakers:* ★ **Mr.Pushpaka Ranasinghe** (B.O.C.)
★ Members from the committee.

*Interpreter:* **Mr.S.B.Ariaratnam**
St.John's College, Jaffna.

*Vote of thanks:* **Mr.V.S.Saundranayagam**-B.O.C., Mannar.

**All Members are cordially invited.**

Thanks.

Mr.S.Soruban
Co-Ordinator,
N.S.B., Jaffna.
T.P.: 021 222 2696

Mr.N.Sivagnanasundaram
Co-Ordinator
Bank of Ceylon, Jaffna.
Tel.: 021 222 2636

S.C.A.Rajkumar
Co-Ordinator, Vanni R.H.O
People's Bank.
Tel.: 021 222 2972

(C/41177)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
1988 – 12 – 29



மறைவு
2004 – 03 – 09

## சிவராசா நிரோஜினி

(யா/விக்னேஸ்வராக் கல்லூரி மாணவி)

ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டுகள்
சென்றாலும் உன் நினைவு எம்
நெஞ்சை வீட்டு அகலாது.
*உன் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*மத்தொனி,*
*கரவெட்டி தெற்கு,*
*கரவெட்டி.*

**குடும்பத்தினர்.**

(42443)(42-43-11-45)



## ஓராண்டு நினைவாக..

*மலர்வு*
10 – 07 – 1954



*உதிர்வு*
08 – 03 – 2004

## திருமதி தணிகாசலம் வரதலெட்சுமி (லெட்சு)

(நயினாதீவு, 5ஆம் வட்டாரம்)

திதி: 25.02.2005

அம்மா நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு கடந்து விட்டது. ஆனால், உங்கள் நினைவுகள் எம்மை விட்டு நீங்கவில்லை. உங்களையே அர்ப்பணித்தீர் எம்வாழ்க்கைக்காக. எம் அன்புமிகு அன்னையே! கல்லறையில் உம்மை வைத்து கண்ணீரால் மூடிவிட்டோம். இவ்வுலகில் வைக்க முடியாமல் இறைவனிடம் விட்டு விட்டோம். ஆண்டு ஒன்று சென்றாலும் எத்தனை பந்தங்கள் இருந்தாலும் அம்மா என்றழைக்கும் உங்கள் உறவிற்கு நிகர் இல்லையே.

*இல.70, பலாலி றோட்,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*

(42446)(43-11-45)

உங்கள் பிரிவால்துயருறும்:
**அன்புக் கணவர், பிள்ளைகள்**
**மற்றும் உறவினர்கள்.**


## நீதிநூல் மனனப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.25

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகம் வருடாந்தம் நடத்திவரும் நீதிநூல் மனனப்போட்டி நாளை சனிக்கிழமை காலை 9 மணிமுதல் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தரம் ஒன்று, தரம் இரண்டு ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து 100 மாணவர்கள் இந்தப்போட்டியில் பங்குகொள்ளவுள்ளனர்.

இதேவேளை, மேற்படி கழகத்தினால் நடத்தப்படும் செயன்முறைப்போட்டிகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் யாழ்.இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

மத்திய பிரிவு, மேற்பிரிவு என இரு பிரிவுகளாக நடத்தப்படவுள்ள மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல், கோலம்போடுதல் ஆகிய போட்டிகளில் சுமார் 260 பேர் பங்குகொள்ளவுள்ளனர் எனக் கழகத்தின் செயலாளர் சு.சிறீகாந்தன் அறிவித்துள்ளார்.

(எ)

## சமய சந்நிதிகளில்

நல்லூர்,பெப்.25

நெடுந்தீவு மேற்கு கரமத்தை கந்தசுவாமி கோவில் தேர்த் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

அன்றைய தினம் நண்பகல் 12 மணிக்கு மாகேஸ்வர பூசையும் அதைத்தொடர்ந்து தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (3-111)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.25

நயினாதீவு ஸ்ரீபத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திரர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 14 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 13 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

திருவிழாக்காலங்களில் தினமும் மாலை 7.30 மணியளவில் வலிகாமக் கல்விவலய ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் கந்தசத்திய தாசன் "பெரிய புராணம்" என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவாற்றிவருகின்றார்.

(3-13)

## பேடன்பவல் நினைவுதினம்

முழங்காவில்,பெப்.25

இலங்கை சாரணர் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டக்கிளை நடத்தும் சாரணியத்தின் தந்தை பேடன்பவல் நினைவு தினம் இன்று வெள்ளிக்கிழமை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாவட்ட ஆணையாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் தலைமைக்காரியாலய ஆணையாளர் வி.குணரத்தினம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

இன்றைய தினம் 2004 இல் சாரணர் பாசறை நிகழ்வில் பங்குபற்றியவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படவுள்ளதாகவும் காலை 9 மணிக்குச் சகல சாரணர்கள், சாரணர் தலைவர்களையும் சமுகமளிக்குமாறு மாவட்ட ஆணையாளர் கேட்டுள்ளார்.

(த-323-202)

## கூட்டம்

வட்டக்கச்சி,பெப்.25

வட்டக்கச்சி மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச்சங்கக் கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் சி.சந்திரராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

(எ-405-202)


*விற்பனையாகிறது*

## பொது அறிவு

விலை 400/= ஜி.என்.எஸ்.உதயசந்திரன்

*சகல போட்டிப்பரீட்சைகளுக்குமான*

**பொது அறிவுப் பெட்டகம்**

*200இற்கும் அதிகமான படங்களுடன் 1600 இற்கும் அதிகமான புதிய தகவல்களுடன் தமிழில் முதன் முதலாக வெளிவந்துள்ளது.*

**பூபாலசிங்கம் புத்தகசாலை,**
**இல.04, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
தொ.பேசி. 0212226693 (சி/41154)



இன்று ஆரம்பம்

## NEW SCIENCE COLLEGE

கன்னாதிட்டி. யாழ்ப்பாணம்.

A/L 2006
CHEMISTRY
ORGANIC

திரு. மகேஸ்வரன் B.Sc P.G.D. (M.phil)

WED.,FRI. - 5.00 P.M

ஆரம்பம்:- 25. 02. 2005

வெள்ளி மாலை 5.00 P.M (42448)



யாழ். நகர் மைய
றோட்டறக்ட் கழகத்தின்

## "அச்சாணி மலர் 05"
## - வெளியீடு -

இடம்: **கழக மண்டபம் (உதயன் மண்டபம்)**

காலம்: நாளை26.02.2005 சனிக்கிழமை பி.ப. 4.00 மணி

பிரதம விருந்தினர்:
**Rtn.ஈ.சரவணபவான்**

சிறப்பு விருந்தினர்:
**Rtn.T.வாமதேவன்**

**இணைச்செயற்றிட்டங்களாக:**

1. மாவட்ட றோட்டறக்ட் கழகங்களிற்கு இடையிலான "றோட்டறி சம்பந்தமான வினா - விடைப் போட்டி" (பி.ப. 3.00)
2. வறிய பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டி அன்பளிப்பு

அனைத்து றோட்டறக்ட், இன்டரக்ட் கழக
அங்கத்தவர்களையும் விளம்பர
அனுசரணையாளர்களையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

**இதழாசிரியர்கள். தலைவர்.**

(சி-41176) (24-43-11-45)



## கொக்குவில் இந்துக் கல்லூரி
## இல்ல மெய்வன்மைப் போட்டி -2005

இடம்: கல்லூரி மைதானம்

காலம்: இன்று 25.02.2005 வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணி

தலைவர்: திரு.பொ.கமலநாதன் (கல்லூரி அதிபர்)

பிரதம விருந்தினர்:
**திரு.ச.சிவானந்தன்**
*(கல்லூரிப் பழைய மாணவரும், இளைப்பாறிய நிலஅளவையாளரும்)*

பரிசில் வழங்கல்:
**திருமதி தவராணி சிவானந்தன்**

*பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

**அதிபர், ஆசிரியர், மாணவர்,**
**. பழைய மாணவர் சங்கம்,**
**பாடசாலை அபிவிருத்திச்சங்கம்.**

*கொக்குவில்.*
*(C/41175)(42-43-11-45)*



## 63 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**கந்தசாமி மனோகரன்**
(மல்கன் கம்பனி தொழிநுட்ப உத்தியோகத்தர், முன்னாள் உதயன் பத்திரிகை நிறுவன உத்தியோகத்தர்)



**மனோகரன் செந்தூரன்**
(மாணவன்)

கடந்த 26.12.2004 அன்று இடம்பெற்ற இயற்கை அனர்த்தத்தில் இறைவனடி சேர்ந்த இருவரின் நினைவாக நாளை (26.02.2005) சனிக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

மில் ஒழுங்கை,
மல்லாகம்.

(C/41176)

- குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### சபாபதிப்பிள்ளை பொன்னுத்துரை

(கலேவெல முதலாளி)



இராசாவின் வீதி, அத்தியடியைப் பிறப்பிடமாகவும் தலையாழி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை பொன்னுத்துரை அவர்கள் நேற்று (24.02.2005) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை - மாணிக்கரத்தினத்தின் மகனும் திருமதி தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் கருணாவின் தகப்பனாரும் பவித்திராவின் பேரனும் (கனடா), லோகேந்திரகுமாரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மில் லேன்,*
*பிரம்படி, கொக்குவில்.*

(42445(43-11-45)

தகவல்:
பொ.தங்கரத்தினம்
(மனைவி).

# ஐ.தே.கவிலிருந்து விலகமாட்டேன் அடித்துக் கூறுகிறார் மஹிந்த சமரசிங்க

## அமைச்சுப் பதவி பொய்க்கதை எனவும் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.25

"எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகும் நோக்கம் எனக்கில்லை. கடந்த 18 வருடங்களாகக் கட்சியில் படிப்படியாக வளர்ந்து இன்று ஓர் உயர்ந்த நிலையை அடைந்திருக்கின்றேன். எனது வளர்ச்சிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய வகையில் விசமத்தனமாக செய்திகளைப் பரப்பி விடுவதன் பின்னணியில் இருப்பவர்களைக் கண்டறியவேண்டும்."

- இவ்வாறு எதிர்கட்சிக் கொரடாவான மஹிந்த சமரசிங்க நேற்று நாடாளுமன்றில் கோரிக்கை விடுத்தார்.

எதிர்க்கட்சிக் கொரடா மஹிந்த சமரசிங்க அரசுடன் இணைகிறார், அவர் ஊடகத்துறை அமைச்சராகப் பதவி ஏற்கவுள்ளார் என நேற்று பத்திரிகைச் செய்தி ஒன்று வெளியாகியிருந்தது. இதுகுறித்து நாடாளுமன்றில் விளக்கமளித்தபோதே அவர் மேற்கொண்டவாறு கூறினார். "இது சிறிதும் ஆதாரமற்ற, உண்மைக்கு மாறான செய்தியாகும். இந்தச் செய்தி எனது சுய கௌரவத்திற்குப் பங்கம் ஏற்படுத்துவதுடன் எனது சிறப்புரிமையையும் மீறுகின்றது." என்றும் தெரிவித்தார் மஹிந்த சமரசிங்க.

நாடாளுமன்றம் சபாநாயகர் டபிள்யூ. ஜே. எம். லொக்குபண்டார தலைமையில் நேற்றுக் கூடியபோது, மஹிந்த சமரசிங்க சிறப்புரிமை தொடர்பான கூற்று ஒன்றைச் சபையில் சமர்ப்பித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறியதாவது:-

நான் எப்பொழுதும் அரசியலில் புதிய கலாசாரம் ஏற்படவேண்டும் என்பதில் உறுதியாக இருப்பவன். அரசு மேற்கொள்ளும் நல்ல விடயங்களை ஆதரிக்கின்றேன். அதேவேளை, தவறான விடயங்களை வன்மையாகக் கண்டித்து விமர்சிக்கின்றேன். நடுநிலையில் நின்று செயற்படுபவன் நான்.

நான் ஐக்கிய தேசியக் கட்சியில் கடந்த 18 வருடங்களாக உறுதியாக இருக்கின்றேன் எனக் கூறிக்கொள்வதில் பெருமை அடைகின்றேன். படிப்படியாக உயர்ந்து இன்று ஒரு முக்கிய இடத்தை எட்டி உள்ளவன் நான். எனது கட்சியின் மீதும், தலைமையின் மீதும் எனக்கு நம்பிக்கை உண்டு. எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நான் ஐ.தே.கவை விட்டு விலகமாட்டேன். அப்படியான ஒரு நோக்கமும் எனக்கு இல்லை.

ஊடகங்கள் தமக்குக் கிடைக்கும் தகவல்களை அப்படியே வெளியிடுவதை விட்டு, அவை தொடர்பாக எம்முடன் தொடர்புகொண்டு உண்மையை அறிந்து வெளியிடவேண்டும்- என்றும் மஹிந்த சமரசிங்க கூறினார்.

(க-8)

# உயிரிழந்த சிப்பாயின் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்கப் பணிப்பு

தென்மராட்சி,பெப்.25

கிளாலி சூனியப் பிரதேசத்தில் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான சிப்பாயின் சடலத்தைப் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினரிடம் ஒப்படைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டார்.

கொடிகாமம் பொலீஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்ததையடுத்து நீதிவான் சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டார்.

விடுதலைப் புலிகளால் சடலம் மீட்கப்பட்டு, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஊடாக இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

விஜயபாகு படையணியைச் சேர்ந்த ஜே.எச்.யு. பிரியதர்சன (வயது 25) என்பவரே பலியான சிப்பாயெனத் தெரிவிக்கப்பட்டது.

சடலத்தைப் பார்வையிட்ட நதிவான் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி மூலம் பிரேத பரிசோதனை நடத்திய பின்னர் சடலத்தை இறந்தவரின் தாயிடம் ஒப்படைக்குமாறு பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மரண விசாரணை எதிர்வரும் 28 ஆம் திகதி சாவகச்சேரி நீதிமன்றில் நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டது.

(8-117)

# தலவாக்கலை சிறுவர் பூங்கா அடித்து நொறுக்கப்பட்டது

கொழும்பு,பெப்.25

தலவாக்கலையில் மலையக மக்கள் முன்னணியின் நுவரெலியா மாவட்ட அரசியல் அமைப்பாளர் திறந்துவைத்த சிறுவர் பூங்காவை இ.தொ.காவின் அரசியல் அமைப்பாளருடன் சென்ற குழுவினர் அடித்து நொறுக்கியுள்ளனர் என்று கூறப்படுகிறது. இது தொடர்பாகப் பொலீஸ் நிலையத்தில் அவர்கள் மீது முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தலவாக்கலை லிந்துல்ல நகரசபையின் பிரதி மேயரும், மலையக மக்கள் முன்னணியின் மாவட்ட அரசியல் அமைப்பாளருமான பாரதிதாசன் தனது சொந்தி நிதியிலும், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சிலிருந்து கிடைத்த நிதியிலும் தலவாக்கலை தேவசிரிபுரவில் வி.டி.தர்மலிங்கம் ஞாபகார்த்த மண்டபத்துக்கு எதிரில் சிறுவர் பூங்காவை அமைத்தார்.

இந்தச் சிறுவர் பூங்காவின் திறப்புவிழா நேற்றுக் காலை 9 மணியளவில் வைபவரீதியாக நடைபெற்றது.

திறப்புவிழா நடந்துமுடிந்த சில மணி நேரத்தில் கடற்பாறைகளுடனும், பொல்லுகளுடனும் வந்த கொட்டகலை பிரதேச இ.தொ.கா. அமைப்பாளரும் மேலும் ஐம்பதுக்கும் மேற்பட்டோரும் பூங்காவை அடித்து நொறுக்கிவிட்டுச் சென்றனர் என தலவாக்கலை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தலவாக்கலை லிந்துல்ல நகரசபை செயலாளர் எம்.எம்.விமலசேன, செயலாளர் கருணாவதி, பிரதி மேயர் பாரதிதாசன் ஆகியோர் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளனர்.

(க-8)

## மெய்வன்மைப்போட்டி

பெரியபுலம் மகாவித்தியாலயத்தின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை உதவி அதிபர் திருவாட்டி விக்னேஸ்வரி குழந்தைவேலு தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக சிமெந்துக் கூட்டுத்தாபன தலைமைப் பாதுகாப்பு அலுவலர் க.தர்மகுலசிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (8-12)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.25

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2மணியளவில் கல்லூரி அதிபர் வி.சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-190)

## நோயாளருக்கு நுளம்பு வலைகள்

நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலையின் நோயாளர் விடுதிகளில் தங்கியுள்ளோரின் நன்மைகருதி நெடுந்தீவு புனித டொன் பொஸ்கோ இளைஞர் மன்றத்தினரால் நுளம்பு வலைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை இளைஞர் மன்றத்தினால் மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரி ஆர்.திருநாவுக்கரசிடம் இந்த வலைகள் கையளிக்கப்பட்டன.

அத்துடன், அன்றைய தினம் மேற்படி இளைஞர் மன்றத்தினர் நெடுந்தீவு மகா வித்தியாலயம், றோ.க. மகளிர் கல்லூரி, சீக்கிரியம்பிள்ளை வித்தியாலயம், சைவப்பிரகாச வித்தியாலயம் ஆகிய ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான விளம்பரப் பலகைகளையும் வழங்கினர். (எ-112)

## செயலமர்வுகள்

தென்மராட்சி,பெப்.25

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஐந்தாண்டு பாடசாலை மட்டத் திட்டமிடல் (2006-2010) தொடர்பான செயலமர்வுகள் நாளை சனிக்கிழமையும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

சனிக்கிழமை தரம் III பாடசாலைகளுக்கும் ஞாயிற்றுக்கிழமை தரம் 1ஏபி, 1சி, தரம் II ஆகிய பாடசாலைகளுக்கும் இச்செயலமர்வுகள் நடைபெறும்.

இச்செயலமர்வில் அதிபர்களையும் பொறுப்பான சிரேஷ்ட ஆசிரியர் ஒருவரையும் கலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா அறிவித்துள்ளார்.

(8-117)

## துயர் பகிர்வு

எமது பள்ளியில் கல்விசாரா ஊழியராகப் பணியாற்றும்
மு.சந்திரலிங்கம் அவர்களின் மாமனார்

### கிருஷ்ணர் நாகலிங்கம்

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/பெரியபுலம் ம.வி.
பள்ளிக்குழுமம்.

(42453)(29-14-17)

## மரண அறிவித்தல்கள்

திருமதி

### கோவர்த்தனராஜா இராஜகுமாரி



தாவடியைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கோவர்த்தனராஜா இராஜகுமாரி அவர்கள் நேற்று (24.02.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தாவடி - நவரட்ணம் தம்பதிகளின் அன்பு மகளும் கோவர்த்தனராஜாவின் (ஸ்ரீ பத்மநாதன் ஸ்ரோஸ்) அன்பு மனைவியும் தனுசனின் (NDES, கட்டுநாயக்கா) அன்புத் தாயாரும் ராஜேஸ்வரி (கனடா), விஜயலக்சுமி (இந்தியா), காலஞ்சென்ற சபாநாதன், கமலேஸ்வரி (கனடா), சிவனேஸ்வரி (இந்தியா), உதயகுமாரி (திருகோணமலை) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற நவரட்ணராஜா, மகேந்திரராஜா (நீர்ப்பாசனக் கந்தோர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.02.2005) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
க.கோவர்த்தனராஜா
(கணவர்).

*34/3, உடையார் லேன்,*
*கந்தர்மடம்.* (42460)(29-14-17)

### வயிரவன் கதிரன் (குஞ்சையா)



மிருசுவில் கண்ணகை அம்மன் ஆலய பூசகரும் உரிமையாளரும் தவசிகுளம், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வயிரவன் கதிரன் 22.02.2005 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன் தினம் (23.02.2005) புதன்கிழமை நடைபெற்று, பூதவுடல் ஈச்சங்காடு இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

*தவசிகுளம், மிருசுவில்*
*(வைத்தியசாலை முன்பாக)* (42458)(29-14-17)


## நாய் விற்பனைக்கு

நல்ல இனம், 3½ வயதுடைய ஆண் அலசேசியன் நாய் விற்பனைக்குண்டு.

**சி.தேவராசா**

பந்தல் சேவை, (C-41205)
நுணாவில் கிழக்கு, கல்வயல், சாவகச்சேரி

**நிறைஞ்சனாஸ் சங்கானை**

சரத்குமார், சாக்ஷி, வடிவேல் நடித்த

**மாணிக்கதன்**

காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00. (பி.நே.) (C/40667)

**மனோகரா யாழ்ப்பாணம்**

இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு இளையதளபதி விஜய்
(சிறப்பு தோற்றம்), நமீசா,
ரவிகிருஷ்ணா, ரம்பா நடித்த



காட்சி நேரம்: 10.30. 2.30. 6.30, 9.30

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

தினசரி 10.30. 2.30. 6.30.9.30. (பி.நே.)

பரத், சந்தியா இன்னும் பலர் நடித்த

**காதல்** சில தினங்கள் மட்டும்

ஜெய்ஆகாஷ் - பிரமஷி - நாசர், விஜயகுமார், இளவரசி நடித்த

**குருதேவா** இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு விரைவில் எதிர்பாருங்கள் எமது அடுத்த வெளியீடு.

**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**



விஜய், திரிஷா, சாயாசிங்
மற்றும் பலர் நடித்த

**திருப்பாச்சி**
(ரீல்ஸ்)

தினசரி
11.00. 3.00. 7.00.
(பி.நே.) (C/39654)

**ராஜா யாழ்ப்பாணம்**

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தினவெளியீடு
அஜித், திரிஷா, மணிவண்ணன், வீசு நடித்த
மூன்றாவது வாரம்



**ஜி** (ரீல்ஸ்)

காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, (பி.நே.)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி ப.தம்பித்துரை அவர்களின் பாசமிகு தந்தை

### வி.ஐயாத்துரை

அவர்களின் மறைவையிட்டு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கித் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(42451)

*யா/ஆவரங்கால் நடராஜ*
*இராமலிங்க வித்தியாலயம்.* - ஆசிரியர் கழகம்.

## மரண அறிவித்தல்

### திருமதி கனகலட்சுமி சின்னத்தம்பி

ஐயனார் கோயிலடி, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் இலக்கம் 5, இராமகிருஷ்ண ரெறஸ், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகலட்சுமி சின்னத்தம்பி 23.02.2005 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சின்னத்தம்பியின் (இளைப்பாறிய போர்டிங் மாஸ்டர், யாழ். இந்துக் கல்லூரி) அருமை மனைவியும் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி, தையல்முத்து ஆகியோரின் அன்பு மகளும் சீனிவாசகம், காலஞ்சென்ற அன்னலட்சுமி ஆகியோரின் அருமைச் சகோதரியும் செல்வராணி, மார்க்கண்டன் (இளைப்பாறிய பிராந்திய நிர்வாக தபால் உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்), சிவானந்தன் (உதவி ஆணையாளர், மதுவரித் திணைக்களம்), காலஞ்சென்ற விஜயகுமார் மற்றும் நகுலேந்திரன் (கணக்காளர் - U.K) ஆகியோரின் அருமைத் தாயாரும் காலஞ்சென்ற டாக்டர் சிவராமலிங்கம், பாலதேவி, சாரதாதேவி, சகுந்தலாதேவி, ரமணி ஆகியோரின் அருமை மாமியாரும் கலைமதி, கலைச்செல்வி (பல்வைத்தியர், ஆஸ்திரேலியா), கலைராஜி, கலைவாணி, ருக்ஷினி, தர்ஷினி, மயூரன், காயத்ரி (வைத்தியர் தேசிய வைத்தியசாலை, கொழும்பு), அபிராமி, மைத்ரேயி, பிரணவன், விஜயானர், காஞ்சனா, லக்ஷனா, சஞ்சீவன் (வைத்தியர், U.K), ரஜீவன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் சுலக்ஷனா, அர்ச்சனா, வைஷாலி, பவித்ரா, கணன் சிவாங்கர், ஐஸ்வர்யா லக்ஷ்மி, பிருந்தா வைஷ்ணவி, ஹரிவெங்கடேஷ், வைஷாலி அனித்தா, சஞ்சீவ் யாதவ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல.5, இராமகிருஷ்ண ரெறஸ், வெள்ளவத்தையிலுள்ள அவரது இல்லத்திலிருந்து நாளை (26.02.2005) முற்பகல் 9 மணியளவில் கல்கிசை பொதுமயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, 10 மணியளவில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி செல்வராணி சிவராமலிங்கம்.

*05, இராமகிருஷ்ண ரெறஸ்,*
*வெள்ளவத்தை, கொழும்பு -06.* (42456(29-14-17)

## சிப்பாய் பலியான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்நுழைய முற்பட்ட இராணுவத்தினர் மீது புலிகள் தற்காப்புத் தாக்குதலை மேற்கொண்டனர். கிளாலிநீரேரிக்கு அண்மையாக உள்ள பெண் போராளிகளின் முன்னரங்க நிலையிலிருந்து 40 மீற்றர் தூரத்தில் வேவு நடவடிக்கையில் ஈடுபடும்பொருட்டு ஆயுதங்கள் மற்றும் தொலைநோக்கியுடன் நகர்ந்து வந்த இராணுவ அணியினர் கடமையில் நின்ற பெண் போராளிகளை நோக்கித் துப்பாக்கியால் குறிபார்த்ததைத் தொடர்ந்து அவ்வணியினர் மீது எமது போராளிகள் மேற்கொண்ட தற்காப்புத் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்; மற்றொருவர் காயங்களுக்குள்ளானார்.

550 மீற்றர் சூனியப் பிரதேசமாக உள்ள இப்பிரதேசத்தில் எமது நிலையிலிருந்து 40 மீற்றர் தூரம்வரை இராணுவத்தினர் வேவு நடவடிக்கைகளுக்காக நகர்ந்து வந்ததும் எமது போராளிகள் மீது தாக்குதல் தொடுக்க முயன்றதும் அப்பட்டமான யுத்தநிறுத்த மீறலாகும். இந்நிலையில் தம்மைத் தற்காத்துக் கொள்வதற்காகவே எமது போராளிகள் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இச்சம்பவம் தொடர்பாகப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு மாலை 6மணியளவில் விஜயம் செய்து அந்த இடத்தைப் பார்வையிட்டனர். அதன் பின்னர் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களின் முன்னிலையில் விடுதலைப் புலிகள் இறந்தவர்களின் சடலத்தை முகமாலை சூனியப் பிரதேசத்தில் வைத்து இலங்கை இராணுவத்தினரிடம் ஒப்படைத்தனர்.

இச்சம்பவம் நடந்த அதே இடத்தில் கடந்த 15.02.2003 அன்று ஓர் இராணுவ அணியினர் எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் உள்நுழைந்து பெண் போராளிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் எமது போராளிகள் காயமடைந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

போர்நிறுத்த ஒப்பந்த விதிகளுக்கு முரணான வகையில் அமையும் இவ்வகையான சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாமல இருப்பதை உறுதிசெய்வதற்கேற்ற நடவடிக்கைகளைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் மேற்கொள்ள வேண்டும் எனக்கேட்டுக் கொள்கிறோம்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(மற்றொரு செய்தி 15ஆம் பக்கத்தில்)

(க-8)

## தமிழ்க் கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏந்தியவண்ணம் ஊர்வலமாக அவர்கள் வந்தனர். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் கூட்டமைப்பைச் சேர்ந்த 15 உறுப்பினர்கள் பேரணியில் கலந்துகொண்டனர். இவர்களுடன் மலையக மக்கள் முன்னணியின் உறுப்பினர் பெ.இராதாகிருஷ்ணனும் சேர்ந்துகொண்டார்.

ஐ.தே.க.தமிழ் உறுப்பினர்களான மனோ கணேசனும், மகேஸ்வரனும் இந்தப் பேரணியில் கலந்துகொள்வார்கள் என ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருந்தபோதும் நேற்று இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. ஆர்ப்பாட்டத்தில் சென்றவர்கள் "சுனாமியின் பெயரால் நிதியைத் திரட்டி சுடுகலன்களை வாங்காதே!" "நிழல் யுத்தம் செய்து தமிழ் மக்களை அழிக்காதே!". "சமாதானப் பேச்சை உடனே ஆரம்பி!" என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளைத் தாங்கியிருந்தனர். இந்தப் போராட்ட சமயத்தில் நாடாளுமன்றத்தின் சகல பிரதேசங்களிலும் பெருந்தொகையான பொலீஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர். அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறவில்லை. (க-8)

## ஒருதலைப்பட்சமாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமல் வீரவன்ஸ எம்.பி., நந்தன குணதிலக எம்.பி. ஆகியோர் இதில் பங்குபற்றினர்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் வைத்தே மேற்படி கருத்துக்களைக் கட்சியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா வெளியிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இடைக்கால அதிகாரசபை குறித்துப் புலிகளுடன் பேசுவதற்கு அரசு தயார் என்று ஊடகத்துறை அமைச்சினால் வெளியிடப்பட்ட அறிவிப்பு சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் நிலைப் பாடு அல்ல.

அந்த அறிவிப்பு பற்றித் தமக்கு எதுவும் தெரியாது என ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவே கூறுகின்றார்.

மூத்த அமைச்சர்களான லக்ஷ்மன் கதிர்காமர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன போன்ற அரசின் முக்கிய பிரமுகர்களும் இக்கருத்தையே வெளியிட்டுள்ளனர்.

மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றமுடியாதோர் அரசுக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறலாம்.

நாம் வெளியேறவேண்டியதில்லை. மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிக்கு முரணாகப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாகத்தை அளிப்பது குறித்து அவர்களுடன் பேச முயல்பவர்கள் அரசை விட்டு வெளியேறலாம்.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணத்துக்காகப் புலிகளுடன் இணைந்து பொதுக் கட்டமைப்பு ஒன்றை அமைப்பதற்கு அரசு முன்வருமானால் அதையும் நாம் கடுமையாக எதிர்ப்போம்.

விடுதலைப் புலிகள் தமது பிரதேசத்தில் நிவாரண, மீள்கட்டுமானப் பணிகளுக்கு உதவலாம். ஆனால், அந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செயற்படும் பொறுப்பு அரசினுடையதாகும்.

இடைக்கால அதிகாரசபை குறித்தும் புலிகளுடன் பேச அரசு தயார் என்ற அறிவிப்பை விடுத்தவர்கள், அதை மாற்றுவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல், நாம் உரிய பதில் நடவடிக்கைகளை எடுப்போம் - என்றார் ரில்வின் சில்வா. (க-8)

## இ.தொ.கா...,

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று ஜனாதிபதியிடம் கையளித்தார். இதே வேளை, இராஜினாமாச் செய்த அமைச்சர்கள் இருவரையும் ஜனாதிபதி சந்தித்துப் பேச்சு நடத்துவதற்கான ஏற்பாடுகளைப் பிரதமர் மேற்கொண்டுள்ளார். இந்தச் சந்திப்பு இன்று நடைபெறவுள்ளது. இச்சந்திப்பில் இந்தியாவிலிருந்து இன்று நாடுதிரும்பும் இ.தொ.கா. தலைவர் ஆறுமுகம் தொண்டமானும் கலந்துகொள்ளவுள்ளார்.

ஆளுங்கட்சியினரின் முக்கியத்துவம் குறித்துக்கூடக் கருதாமல் பொலீஸார் இராணுவப்பாணியில் மலையகத்தில் நடந்துகொண்டிருக்கிறார்கள். இவ்வாறு எம்மை உதாசீனம் செய்யும்போது நாம் அரசிலிருந்து என்னபயன்? அரசுக்குமுண்டு கொடுத்து என்ன இலாபம்? இத்தகைய கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகள் முற்றிவருகின்றன. பங்காளிக்கட்சிக்கு முக்கியத்துவம் தராமல் உதாசீனம் செய்வது புறக்கணிப்பது போன்றவை தொடர்வதால் அரசிலிருந்து வெளியேறுவதே உத்தமம் என்ற முடிவுக்கு வந்துள்ளோம். தம்பி (தலைவர் ஆறுமுகம் தொண்டமான்) நாடுதிரும்பியதும் ஒருமுடிவு அறி விக்கப்படும் மீ என்றார் இ.தொ.காவின் மூத்த தலைவர் ஒருவர். (8 - 12)

## வடக்கு - கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது.

ஆழிப்பேரலையில் பாதிக்கப்பட்ட கல்முனைப் பிராந்தியத்தின்வி மீள்கட்டுமானப் பணிகள் தொடர் பான உத்தேசத் திட்டங்கள் பற்றியும் நிவார ணப் பணிகளைத் துரிதப்படுத்துவது பற்றியும் இம் மாநாட்டில் ஆராயப்படவுள்ளது. (க-8)

## மண்ணையும் மக்களையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகழவேண்டும் என்ற நன் நோக்கையும் கொண்டு உயர்ந்த மனிதராக விளங்கிய மதிப்புக்குரிய வேலுப்பிள்ளை கந்தையா ஏரம்பு அவர்கள் 23.02.2005 அன்று காலமாகிவிட்டார். அவரது சாவு அவரை அறிந்த அனைவருக்கும் பெரும் சோகத்தை ஊட்டியுள்ளது.

இவர் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினரான, தந்தை செல்வநாயகம் அவர்களின் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அனைத்துப் போராட்டங்களிலும் முக்கியமாகத் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்காக முன்னெடுக்கப்பட்ட பல்வேறு சத்தியாக்கிரகங்களிலும் திருகோணமலை பாத யாத்திரையிலும் பங்குபற்றியவர். அத்துடன், கல்வி மற்றும் சமூகப் பணிகளிலும் பல அமைப்புக்களுடன் இணைந்து தனது அளப்பெரும் சேவையினை ஆற்றியவர்.

இம்மண்ணின் போராட்ட விடுதலைக் காலத்திலும் அவரின் பங்காற்றுதலும் உழைப்பும் தொய்வின்றி உயர்வாகவே இருந்தன. 1984 ஆம் ஆண்டு அவரது மகன் பாலச்சந்திரன் எமது அமைப்பில் இணைந்து இறுதிவரை உறுதியுடன் நின்று போராடி இந்திய இராணுவத்துடன் நடந்த யுத்தத்தில் வீரச்சாவடைந்தார். க.ஏரம்பு அவர்கள் அவரது மகனான கப்டன் அருணின் (பாலச்சந்திரன்) இழப்பின் பின்பும் சளைக்காது தனது போராட்டத்துக்கான பங்களிப்பை ஆற்றி வந்தார்.

தமிழீழ மண்ணில் இந்திய இராணுவம் எங்கும் பரவி நின்ற காலத்திலும் அவர் தம் சொந்த மண்ணைவிட்டு வெளியேறாது இந்திய இராணுவத்தின் பலவித தொல்லைப்படுத்தலுக்கு ஆளானார். அந்த நிலையிலும் இறுக்கமான தனது மனப்பாங்கில் இருந்து மாறாது உறுதியுடன் போராட்டம் பற்றிய இரகசியங்களை வெளிவிடாது காத்து தமிழீழ விடுதலைப் போராட்ட வளர்ச்சிக்கு வரலாற்றுப் பங்காற்றினார்.

வரலாற்றுக் குறிப்பில் இடம்பெற்றுள்ள யாழ்ப்பாண இடப்பெயர்வின் பின் அவர் வன்னிக்கு வந்தார். வன்னி வாழ்வின் போதும் அவர் கொண்ட கொள்கையில் இருந்து சிறிதும் பின்னடிக்காது செயலாற்றினார். வன்னியில் பலவிதமான இடர்களை சந்தித்த காலத்திலும் அவர் உறுதியுடனே விளங்கினார். அவர் மக்களை மண்ணை நேசித்தவர். விடுதலையை நேசித்தவர். உறுதியான கொள்கையும் மக்களின் குறை அறிந்து சேவை செய்யும் மனப்பாங்கும் கொண்ட அவரின் இழப்பு பேரிழப்பாகும்.

வே.க.ஏரம்பு அவர்களின் பிரிவினால் ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அவரின் குடும்பத்தினரின் சோகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளாகிய நாமும் கலந்துகொள்கிறோம். இம்மண்ணின் மனிதராக நின்று மகத்தான பணிகளைச் செய்த அவருக்கு நாட்டுப்பற்றாளர் என்னும் உயர்வினை வழங்கி அவரது பெருமையில் நாமும் இணைந்துகொள்கின்றோம். (8)

## அரசுக்கு ஜே.வி.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேசப் பிசாசுகள் புலிகளைத் தனி அரசுக்கு உரியவர்கள் என்றும், அவர்களைத் தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக அங்கீகரிக்க வேண்டும் என்றும் கொடுத்துவந்த அழுத்தத்துக்கு அரசு துணைபோய்விட்டது.

இடைக்கால நிர்வாகம் என்பது தனிநாட்டுக்கான அங்கீகாரம். எமது தாய்நாட்டை எம்மால் புலிகளுக்குத் தாரைவார்க்க முடியாது. இடைக்கால நிர்வாகம் என்ற தலைப்போடு எந் தப் பேச்சுக்களையும் அரசு புலிகளுடன் நடத்த நாம் அனுமதிக்கமாட்டோம். அதற்கு எதிராக மக்களை அணிதிரட்டிப் போராடத் தயங்கமாட் டோம்.

ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பு என்பது தனிப்பட்ட நபர்களின் கட்சியல்ல. புலிகளுடன் பேச்சு நடத்துவது தொடர்பான அரசின் கொள்கையில் எமக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை. அதுபற்றி எம்மோடு யாரும் கலந்தாலோசிக்கவும் இல்லை. இறுதித்தீர்வு பற்றிப் பேசுவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். அந்தத் தீர்வு என்பது சகல தரப்பையும் இணைத்துக்கொண்ட ஒன்றாக இருக்க வேண்டும். இன்று இந்த அரசு பிரிவினை கோரும் புலிகளுக்குத் துணைபோகத் தீர்மானித்துவிட்டது. சர்வதேசப் பிசாசுகளின் திட்டத்துக்காக எமது தாய்நாட்டைக் காட்டிக்கொடுக்க முடியாது. புலிகளை ஏகப்பிரதிநிதிகளாகக் கருதி அவர்களுடன் மட்டும் பேச்சு நடத்தவும் முடியாது.

ரணில் விக்கிரமசிங்க செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் புலிகள் மேலும் பலம் பெற்றுவிட்டார்கள். அவர்கள் தமது ஆயுத பலத்தையும், இராணுவ பலத்தையும் பெருக்கிக் கொண்டார்கள். மறுபுறம், அவர்கள் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் என்ற இராஜதந்திர ரீதியான அங்கீகாரம் பெறவும் இந்த உடன்படிக்கை வழிவகுத்துவிட்டது.

ஆழிப்பேரலை அனர்த்தம் தொடர்பான நிவாரணங்களைப் புலிகளிடம் நேரடியாக வழங்குவதற்கு இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது. இந்தச் செயலைஏற்றுக்கொள்ள முடியாது. புலிகளின் பாசிசவாதச் செயல்களுக்கு அரசு துணை போவதை அனுமதிக்க முடியாது.

அரசு என்ற இயந்திரத்தின் பிரதான பங்காளிகள் என்ற வகையில் எம்மை ஒதுக்கிவிட்டு ஜனாதிபதி சந்திரிகா எதைச் செய்வதற்கும் நாம் அனுமதிக்கமாட்டோம். யுத்த நிறுத்தம் செய்ததன் மூலம் உயிர்ப்பலிகள் தவிர்க்கப்பட்டுள்ளன என அரசு கூறுகிறது. இது முற்றிலும் பொய்யான ஒரு கதை. இந்தக் காலத்திலேயே புலிகள் தமது எதிரிகளையும், இராணுவப் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்களையும் கொன்றொழித்தனர்; தம்மை மிகவும் பலப்படுத்திக்கொண்டனர்.

எனவே, இடைக்காலத் தன்னாட்சி அதிகாரச பையை அடிப்படையாகக் கொண்டு புலிகளுடன் பேச்சு நடத்த முற்பட்டால், அரசில் இருந்து அடுத்த நிமிடமே நாம் விலகுவோம்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என ஒன்றை அங்கீகரித்ததன் மூலம் அவர்களுக்குச் சர்வதேச அங்கீகாரத்தை அளித்துவிட்டார்கள். இது வெறும் வார்த்தை அளவில் என்று நீங்கள் கருதலாம். ஆனால், அதுவே காலப்போக்கில் தனி நாடு அமைவதற்குச் சான்றாக அமைத்துவிடும் என்ற விபரீதத்தை அரசு சிந்திக்கத் தவறிவிட்டது.

புரிந்துணர்வு ஒப்பந்தம், போர் நிறுத்த ஒப்பந்தம் என்ற பெயர்களில் புலிகளின் இராணுவப் பிரிவை அங்கீகரித்துவிட்டார்கள். ஒரே நாட்டில் இப்போது இரண்டு இராணுவம். இது நாட்டின் இறைமைக்கே ஆபத்தாகிவிட்டது.

இதன் பயங்கரத்தை உணராமல் செயற்படும் அரசில் எப்படித் தொடர்ந்தும் அங்கம் வகிப்பது?

பங்காளிக்கட்சி என்று பெயரளவில் கூறிக்கொண்டு எம்மை ஓரம்கட்டிவிட்டு, இடைக்காலத் தன்னாட்சி அதிகார ஆலோசனைகளை மைய மாகக்கொண்டு அரசு புலிகளுடன் பேசத் தலைப்பட்டால் இந்த அரசிலிருந்து உடனடியாக விலகுவோம். அதைத் தவிர்க்க முடியாது - என்றும் விமல் வீரவன்ஸ அரசுக்கு இறுதி எச்சரிக்கை விடுத்தார். (க-8)




**CATWAS. COM**
**Computer Academy**
No.26, Somasundram Avenue, Chundikuli.
T.P. : 021 - 222 3805
புதிய பிரிவுகள் 01.03.2005
01. On Line Microsoft Office. One Month
02. On Line DTP. One Month
★ Diploma Courses
MS-Office 1,750/=
DTP 2, 000/=
Hardware 1,500/=
Web Page 3, 000/=
Video Mixing 2, 500/=
★ Certificate Courses
★ Microsoft Kids Program
(சி/41127)

**கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்**
05.03.2005 } பகல்
07.03.2005 } 10.00 மணி
அனைத்து Diploma கற்கை நெறிகளுக்குமான வார, வாரஇறுதிப் பிரிவுகள் ஆரம்பமாக உள்ளன என்பதை அறியத்தருகின்றோம்.
இயக்குநர்,
IIS யாழ்ப்பாணம்.
(சி-41181)

**தேவை**
யாழ்.நகரின் மத்தியில் எம்மால் புதிதாக ஆரம்பிக்கப் படவுள்ள கலர் லாப்க்கு அனுபவமும் திறமையும் உள்ள பிரிண்டர் (Printer) உடன் தேவை.
அடிப்படைச் சம்பளம் 15,000/= (சி-41156)
**மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்**
மானிப்பாய், T.P. : 021 222 2884




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.02.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.